Registered as a News Paper in Sri Lanka

பக்கம் 24 ரூபா 30.00

பெப்ரவரி 19 - 23, 2011

PUBLIC LIBRARY
JAFFNA

வாரமலர்

# தினமுரசு

THINAMURASU SRI LANKA'S NATIONAL TAMIL WEEKLY முரசு 899

## கொழும்பு - யாழ்ப்பாணம் இறுக்கமடைகிறது பாதுகாப்பு நடைமுறைகள்





## மௌனித்துக் கிடக்கும் மலையகம் புதிய கோணம் புதிய பார்வை

## உலகக் கிண்ணம்



2011

## எரிகிறது எகிப்து நவீன சர்வாதிகாரத்துக்கு சாவுமணி



சூடு - சுவை - சுவாரசியம் - அதுதான் தினமுரசு




## ஆன்மீக வழியில்...

"எண்ணங்களை நீக்குங்கள் மனம் மறைந்து விடும்..." என்று கௌதம புத்தர் கூறிய வார்த்தைகளை ஏற்றுக்கொண்டு வாழ்வது என்பது மானிடர்களைப்பொறுத்தவரையில் ஒரு சாதாரண விடயமல்ல அது. எண்ணங்களை நீக்கி வாழவேண்டுமானால் முதலில் மனிதனா-னவன் தன்னைத்தானே ஆராய்ந்து பார்த்துக்கொள்ள வேண்டும். ஐம்புலன்களையும் அடக்க முடியாத கடிவாளமற்ற ஒரு குதிரை போன்ற மனதோடு அதன் போக்கிலே விட்டுச்செல்லும் மானிடன் ஞான அறிவைப் பெறுதல் என்பது இலகுவான விடயம் அல்ல.
மனதில் உள்ள மாசுபாடான எண்ணங்களை ஆன்மீகம் மூலம் அதன் வழியில் சென்று நீக்கும் பொழுதில்தான் அமைதி பிறக்கிறது.
இயற்கை எப்படி இயல்பு நிலை கொண்டிருக்குதோ அதே போன்றுதான் அமைதியும் தோற்றம் பெறுகிறது. ஆன்மீக வாழ்க்கைக்குள் மன-மானது படிப்படியாக அமிழ்ந்து போகையில், தெளிவான சிந்தனைகள் பிறப்பெடுத்துக்கொள்கின்றன.
"உலகத்தைப் பாருங்கள். எங்கு பார்த்தாலும் தீய உணர்ச்சிகள் நெருப்புப் போல் பரவி வாட்டுகின்றன. இந்த உணர்ச்சிகளை நம்மிடத்திலிருந்து நீக்க சிவப்பரம்பொருள்தான் இயலும்..." என்று திருமூலர் தனது அனுபவத்தினூடாகக் கூறுவதில் இருந்து எண்ணங்களை நீக்கவும், இயல்பான மன அமைதியைத் தேடவும் ஆன்மீகம் மானிட வாழ்விற்கு இன்றியமையாததொன்று என்பது தெளிவாகிறது.

-ஆனந்த நாராயணன், கைதடி.

## ஆண்டவர் வழங்கும் விடுதலை

பரந்துபட்ட பார்வையும், பரந்த மனப்பான்மையும் கொண்டவர்கள் இலகுவில் பாவத்தில் அமிழ்ந்து போவதில்லை. ஒரு பாவமான காரியத்தைச் செய்வதற்கு அவர்களின் பகுத்தறிவானது உரிய நேரத்தில் அவர்களுள் விழிப்புக் கொண்டு, அதனிலிருந்து விலகிக்கொள்ள இடமளிக்கிறது.
பாவம் பல செய்தவர்கள் அதன் தாற்பரியத்தை உணர்ந்து, நான் ஒரு பாவி என மனதால் உருகியழும்போது, அவர்களது பாவங்கள் மன்னிக்கப்படுகின்றன. வேளை வரும்போது பரமபிதாவினுடைய விடுதலையானது அவர்களுக்குக் கிடைக்கிறது. அவர்களின் விழி நீர் துடைக்கப்படுகிறது. அவர்களுள் பூரண சமாதானம் பொங்கிப் பிரவகிக்கிறது. பாவத்தில் இருந்து மனம் திரும்பியவர்கள் நீதியை நிலைநாட்டி நேர்மையைக்கடைப்பிடிக்கும் போது எல்லாமே இரட்டிப்பாகின்றன பூரணமாக!
இதையே எசாயா தீர்க்கதரிசியும் "நீதியை நிலைநாட்டுங்கள்; நேர்மையைக் கடைப்பிடியுங்கள்: நான் வழங்கும் விடுதலை அண்மையில் உள்ளது. (எசாயா 56:1)" எனக் கர்த்தர் உரைப்பதாகத் தீர்க்கதரிசனம் சொல்வது சிந்திக்கக் கூடியதாக இருக்கிறது.

சாமுவேல்-புதுக்குடியிருப்பு.

## தேவையற்றதை ஒதுக்குங்கள்

மனிதனுக்குக் கொடுக்கப்பட்டுள்ள தவணை மிகமிகக் குறைவு. ஆனால் அவன்பால் பூண்டுள்ள கடமையோ மிக மிகக் கூடுதல்.
ஆகவே, மனிதன் தனக்குத் தேவையற்ற காரியங்களில் தலை காட்டாமல் தனக்கு அவசியமானதில் மாத்திரம் கவனம் செலுத்துவது காலத்தின் கட்டாயமாகும்.
ஆமாம்... அவனவன் தன்தன் கடமையில் மாத்திரம் கவனம் செலுத்த வேண்டுமே தவிர, பிறர் காரியங்களில் அநாவசியமாகத் தலையீடு செய்வது கூடவே கூடாது.
இதனை இறைவனது இனிய திருத்தூதர் ஹஜ்ரத் முஹம்மது (ஸல்-அம்) அவர்கள்: "ஒரு இஸ்லாமியனுக்கு அழகு தனக்குத் தேவையற்ற காரியங்களில் தலையீடு செய்யாமலிருப்பதாகும்"- என்று இயம்பி, அதன்படி வாழ்ந்தும் காட்டியுள்ளார்கள். ஆகவே, மனிதா! தேவையற்றதைப் பார்க்காதே, தேவையற்றதைக் கேளாதே. தேவையற்றதைச் செய்யாதே, தேவையற்றதைச் சிந்திக்காதே!

முஹம்மது ஹஸனி, கல்முனை-07

# வாசகர் சாலை



## மாற்றம் தேவை

மக்களுக்குச் சென்றுசேர வேண்டிய விடயங்களை ஒன்றுசேர வழங்குவதில் நீ முன் நிற்கிறாய் என்பதையிட்டு நான் பெருமை கொள்கின்றேன். தேவை, காலமறிந்து எதையும் வழங்கி வருகின்றாய். சிந்திக்கவும், அதன் மூலம் பல விடயங்களைக் கற்றுக்கொள்ளவும், பல அரிய தெரியாத பல முக்கிய தகவல்களை வாரி வழங்குகின்றாய். இன்னும் பக்கங்களில் மாற்றங்களை ஏற்படுத்தி சிறப்புற அமைய வேண்டுமென கேட்டுக்கொள்கின்றேன்.

க. யசிந்தன், வவுனியா.

## வசந்தம் வீசிட...

வாரவாரம் வந்து வசந்தம் வீசும் உனக்கு வாசகனின் அன்பு கலந்த வணக்கம். சினிமா சிறப்பாக உள்ளது. இருந்தாலும் இதில் போடப்படும் படங்களுக்கு அது எந்தப் படத்தில் இடம்பெறுகிறது என்று போடுவதில்லையோ? அதை நிச்சயம் அடுத்த வாரம் பிரசுரிப்பாய் என்று நம்புகின்றேன். பாப்பா முரசில் குழந்தைகளுக்குத் தேவையான தெரியாத பல தகவல்கள் வெளிவருவதையிட்டு உனக்கு நன்றி கூறுகின்றேன்.

சி. மதனராஜா, திருகோணமலை


## வாழ்க உன் பணி

ஒவ்வொரு வியாழனும் ஒவ்வோர் வீடுகளிலும் விடியலாய்த் தோன்றும். உன்னில் வரும் அனைத்தும் எம் தேசத்திற்கு உரியவை. எனக்கு மிகவும் பிடித்தவைகளாகக் கவிதைப்போட்டி, தேன்கிண்ணம், அதிலும் என்னைப்போல் தொடர்ச்சியாக ஆக்கங்களை எழுதும் யாழ்.அஞ்சனா, சு.ஜெயரூபன் இவர்களது ஆக்கங்களும் என்னை மிகவும் கவர்ந்தவை.

ராணிமகள் றெசிந்தா சங்கத்தார்வயல்


மடல்கள் மற்றும்
ஆக்கங்கள் உட்பட சகல
தொடர்புகளுக்கும்
தினமுரசு வாரமலர்
த.பெ.இல:- 1772, கொழும்பு,
த.பெ.இல:- 167, யாழ்ப்பாணம்.
தொலைபேசி :-0212221811
தொலை நகல் (Fax): 0212221811
ஈ-மெயில்: (E-mail):- thinamurasu@live.com


## கவிதைப் போட்டி இல.899



### மீண்டும் எழுந்திடுங்கள்

தள்ளாடும் வயதிலே
யாருமற்றுப் போனதேனோ!
பசியும் பிணியும் ஒன்றாய்
வருத்துதா?
பெற்றெடுத்த பிள்ளைகள்
போரில் மாண்டனரா?
நெஞ்சில் உரமேற்றி
நாம் சாகப்பிறந்தவர்கள் அல்ல
சாதிக்கப் பிறந்தவர்கள் மீண்டும்
எழுந்திடுங்கள்

இ. அபிதாஸ், மீசாலை.

### தவிப்பு

உறவுகள் என்னைச்
சுமையென உதறித்
தள்ளின
தவிக்கிறேன் நான்
தெருவில் இன்று
தனிமரமாய்...

சு. ஜெயரூபன்-பருத்தித்துறை.

எண்ணத்தில் தோன்றும் கவிதைகளை வார்த்தைகளின் எண்ணிக்கை அதிகமில்லாமல், தபாலட்டையில் மட்டும் பதிவு செய்து அனுப்பி வையுங்கள். அனுப்பவேண்டிய கடைசித் திகதி. 28.02.2011

கவிதைப் போட்டி இல. 899
தினமுரசு வாரமலர், த.பெ.இல. 167, யாழ்ப்பாணம்.
இல. 373, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.

### வழிகாட்டி

முதுமைப் பருவமதில்
முன்பின் தெரியா இடமதில்
வாடி வதங்கி -நிற்கும்
உங்களைக் கவனிக்க
யாருமில்லையா?
எழுந்திருங்கள் நீங்கள்தான்
இளையவருக்கு வழிகாட்டி.

சி. கிருசன், மன்னார்.

### ஏன் இந்த நிலைமை?

கட்டிய மனைவியைத்
துன்புறுத்தியதால்
சொந்த பந்தங்கள்
உதறித்தள்ளினர்
பெற்ற பிள்ளைகளும்
தூக்கி எறிந்ததால்
கடற்கரை மண்ணோடு
நான் சங்கமித்தேன்
இருக்க முடியவில்லை
எழும்ப வலுவில்லை
எனக்கேன் இந்த நிலைமை
நான் அன்று அவளுக்கு
செய்த துரோகத்திற்கா
இன்று எனக்கு இந்த நிலைமை.

எஸ். செல்வராணி-சங்கத்தார்வயல்

### உயிருடன் இருக்க வேண்டுமா?

ஒட்டிய வயிறுடனும்
நரைத்த தாடியுடனும்
கசங்கிக் கிழிந்த - ஒரு
முழத்துணியுடனும்
கொட்டும் வெயிலிலே
எதை ஐயா தேடுகின்றீர்
சுனாமியால் பலியான
உமது மனைவியையா? அல்லது
போரின் போது பலியான
உமது பிள்ளைகளையா?
நானும் உம்மைப்போல தனிமையில்
வாடிவதங்கி நிற்கின்றேன்
வாழும் வயதிலே
எம் பிள்ளைகள் சருகாகிப்
போனார்கள் இந்நிலையில் நாமும்
உயிருடன் இருக்க வேண்டுமா?

ராணிமகள் றெசிந்தா, சங்கத்தார்வயல்.

### அநாதை

யாருமற்ற அநாதையாக
வாழ்வுதனைத்
தொலைத்துவிட்டு
வாழ வழி தெரியாமல்
அல்லற்படுகின்றீரா?
இவ்வுலகில்
யாரைத்தான் குற்றம்
சுமத்துவது...

ம. பைரவி, தெஹிவளை

## கவிதைப் போட்டி இல.897

### பாராட்டுக்குரியது



### மனதில்லா மனிதர்கள்

எலும்பும் தோலுமாய்
எழுந்திருக்க முடியாமல்
பசியும், பட்டினியுமாய்
பரிதவிக்கும் முதியவரே!
என்ன பாவம் செய்தீரோ
எங்கே உங்கள் பிள்ளைகள்
உதிரத்தை உணவாக்கி
உயர்வுடன் வளர்ந்துவிட
தந்தை உம்மை மறந்து
தன் தாரத்தின் பின்னே
உம்மை உதறிவிட்டு
உணர்வற்று சென்றாரோ?

மயில். வேல்மகள், புளியம்பொக்கணை




# உங்கள் பக்கம்

## தீர்வு கிடைக்குமா?

வடமராட்சிக் கிழக்குப் பிரதேசத்தில் கடந்த பல வருடங்களாகப் பிடிக்கப் படும் மீன்களைக் கடற்றொழிலாளர்கள் சங்கத்துக்குச் சொந்தமான கூறு விலை மண்டபங்களில் வைத்து கடலுணவுப் பொருட்களைச் சந்தைப்படுத்தி வந்தனர். இதன் மூலம் சார்ந்திருந்த சங்கங்களுக்கு அபிவிருத்தி நிதி வழங்கி வந்தனர். இந் நிதி மூலம் சங்கங்கள் ஒவ்வொன்றும் சங்க நிர்வாக நடவடிக்கைகள், பணியாளர் கொடுப்பனவு, அங்கத்தவர்கள் நலன்களைக் கவனித்து வந்தனர்.


நாலரை வருடங்களுக்குப் பின் இப்பிரதேசங்களில் மீளக் குடியமர்ந்த மக்கள் தமது வாழ்க்கை முறையைச் சீராக நடைமுறைப்படுத்த முன்னரும் கிராமிய மட்டச் சங்கங்கள் தமது சங்க நடவடிக்கைகளை ஆரம்பித்துள்ள நிலையிலும் பருத்தித்துறை பிரதேச சபையினர் கடந்த வருட இறுதிப்பகுதியில் அவசரம் அவசரமாகக் கூறுவிலை மண்டபங்களை தம்வசமாக்கிச் சந்தைப்படுத்தும் கடலுணவுகளுக்கு வரி அறவிடுவதற்காகக் கேள்விப்பத்திரம் கோரியிருந்தனர்.

சங்கங்களுக்குச் சொந்தமான கூறுவிலை மண்டபங்களில் கூடுதலானவற்றில் வரி அறவிடும் உரிமையைத் தனியார் பெற்றுக் கொண்டுள்ளனர். தற்போது கடலுணவுகளுக்காக வரி அறவிடுவோருக்கும் கடற்றொழிலாளர்களுக்குமிடையில் முறுகல் நிலை ஏற்பட்டுள்ளது.

முன்னர் நடைபெற்றது போல் கடலுணவு சந்தைப்படுத்தும் உரிமையைச் சங்கங்களுக்கே வழங்கும்படி சம்பந்தப்பட்ட சங்கங்கள் பலமுறை பருத்தித்துறை பிரதேச சபையினர் பிராந்திய உள்ளூராட்சி ஆணையாளர், யாழ்ப்பாண மாவட்ட அரசாங்க அதிபர், பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறுதொழில்கள் அபிவிருத்தி முயற்சி அமைச்சர் கௌரவ கே.என்.டக்ளஸ் தேவானந்தா, [illegible] தேச சமாச நிர்வாகத்தினர் ஆகியோரை நேரில் சந்தித்துத் தமது குறைகளைக் கூறியதற்கிணங்க சங்கங்களுக்குச் சாதகமான பதில் கிடைத்த போதும் பருத்தித்துறைப் பிரதேச சபையி-னர் உரிய நடவடிக்கைகள் எடுக்காமையால் இப்பிரச்சினை இழுபறி நிலையிலுள்ளது. இதில் சம்பந்தப்பட்ட அதிகாரிகள் உரிய வர்களுடன் தொடர்பு கொண்டு இவ் இழுபறி நிலைக்குத் தீர்வு கண்டுசங்க வளர்ச்சிக்கு உதவுமாறு இப்பிரதேச கடற்றொழிலாளர்கள் சங்கங்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

-கடற்றொழிலாளரகள் சங்கங்கள்.

# நெடுந்தீவு மக்களின் அச்சம் நிறைந்த கடல் பயணத்திற்கு நிரந்தரத் தீர்வு



**நெடுந்தீவு - குறிகட்டுவான் இடையிலான போக்குவரத்தில் ஈடுபடுவதற்காகக் கொண்டுவரப்பட்ட வடதாரகை II என்ற பயணிகள் கப்பலானது கடந்த திங்கட்கிழமை (14.02.2011) அன்று அமைச்சர டக்ளஸ் தேவானந்தாவினால் உத்தியோகபூர்வமாக நெடுந்தீவு மக்களுக்கான போக்குவரத்துச் சேவையில் ஈடுபடுத்தப்பட்டது. இதனால் நெடுந்தீவுப் பகுதியில் வாரம் சுமார் 5000 இற்கு மேற்பட்ட பொதுமக்கள் பயனடையவுள்ளனர்.**



யாழ்.குடாநாட்டிற்கும் நெடுந்தீவுப் பிரதேச மக்களுக்கான தொடர்பை ஏற்படுத்துகின்ற ஒரேயொரு கடல் மார்க்கமான குறிகட்டுவான்-நெடுந்தீவு இடையிலான இப்போக்குவரத்துச் சேவையில், யுத்த அனர்த்தங்கள் ஏற்படுவதற்கு முன்னர் சுமார் 7 பயணிகள் கப்பல்கள் சேவையில் ஈடுபடுத்தப்பட்டு வந்தன.

எனினும் 1990ஆம் ஆண்டு புலிகளுக்கும் இராணுவத்தினருக்கும் இடையிலான 'இரண்டாவது ஈழப்போர்' என அழைக்கப்பட்ட யுத்தம் ஆரம்பிக்கப்பட்டதையடுத்து, இப்போக்குவரத்துச் சீர்குலைந்திருந்தன. 1991 ஆம் ஆண்டு நெடுந்தீவுப் பிரதேசம் இராணுவக் கட்டுப்பாட்டின் கீழ் கொண்டுவரப்பட்டதைத் தொடர்ந்து, அப்பிரதேசத்தில் அரசியல் செயற்பாடுகளை ஆரம்பித்திருந்த அமைச்சர் டக்ளஸ் தேவானந்த தலைமையிலான ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியினரின் முயற்சியினால் மீண்டும் ஆரம்பிக்கப்பட்ட போக்குவரத்துச் சேவையில் 'குமுதினி' எனும் பயணிகள் கப்பல் சேவையில் ஈடுபடுத்தப்பட்டிருந்தது. எனினும் நாளடைவில் குமுதினிக் கப்பலும் பழுதடைந்தமையை அடுத்து சாதாரண சிறிய படகுகளில் பயணம் செய்வதில சிரமங்களை எதிர்கொண்ட மக்கள் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவிடம் தமது கோரிக்கையை முன்வைத்திருந்தனர்.

இதற்கமைய, அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவின் முயற்சியினால் வீதி அபிவிருத்தி அதிகார சபையின் நிதி ஒதுக்கீட்டில் கொழும்பு டொக்யாட் தளத்தில் 800 இலட்சம் ரூபாய் செலவில் உருவாக்கப்பட்ட வடதாரகை II என்ற கப்பல். மக்களின் பாவனைக்காக அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவினால் நாடாவெட்டி சேவையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

அதேபோன்று புதிதாக நிர்மாணிக்கப்பட்ட நெடுந்தீவு பலநோக்குக் கூட்டுறவுச் சங்க பணிமனையின் கட்டத்தைத் திறந்துவைத்த அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவிற்கு தமது நன்றியையும், பாராட்டுதல்களையும் தெரிவித்த நெடுந்தீவு வாழ் மக்கள் அமைச்சருக்குக் கிரீடம் அணிவித்து செங்கோல் வழங்கியதுடன், 'மக்கள் சேவை செய்யும் அரசன்' என்றும் பட்டமும் வழங்கிக் கௌரவித்தனர். அதேவேளை சேவையில் ஈடுபடுத்தப்பட்டுள்ள கப்பலின் பெயரை 'மஹிந்த தேவா' என மாற்றப்படவேண்டும் என்ற மக்களின் கோரிக்கைக்கு ஏற்ப அதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் தெரிகிறது.

## மக்கள் தீர்ப்பே மகேசன் தீர்ப்பு எகிப்தில் மீண்டும் நிரூபணம்

கடந்த முப்பது வருடங்களுக்கு மேலாக ஜனாதிபதி ஹுஸைனி முபாரக்கின் ஆட்சியின் கீழ் நந்து வந்த எகிப்திய தேசத்தில், அந்நாட்டு மக்கள், தமது ஜனாதிபதிக்கு எதிராகக் கிளர்ந்து எழும்பியதன் பின்னர் அந்நாட்டு அரசியலில் விநாடிக்கு விநாடி எனும் சொல்லும் அளவிற்கு விரைவான மாற்றங்கள் ஏற்பட்டுக்கொண்டிருக்கின்றன.

சர்வதேச கவனத்தை ஈர்த்திருக்கும் எகிப்திய அரசியல் புரட்சியின் பின்னணிகளையும் தாக்கங்களையும், "எரிகிறது எகிப்து. புதிய சர்வாதிகாரத்திற்குச் சாவுமணி" என்ற தலைப்பில் தினமுரசில் விரிவாக ஆராயப்பட்டுள்ளது.

அந்த ஆய்வுக் கட்டுரையில், ஜனாதிபதி முபாரக் பதவி விலகிய போதிலும், தஹ்ரீர சதுக்கத்தில் கூடியிருக்கும் மக்கள் கலைந்து செல்லாது அடுத்த கட்ட நகர்வுகளை எதிர்பார்த்திருப்பதாகவும், மக்கள் எதிர்பார்ப்பிற்கு புதிதாக அதிகாரத்தை ஏற்றிருக்கும் இராணுவம் எவ்வாறான பிரதிபலிப்பைக் காண்பிக்கப் போகின்றது? என்ற தொனியிலும் சில கேள்விகளுக்கான விடைகளுக்குப் பொறுத்திருக்க வேண்டும் எனவும் சுறுப்பட்டிருந்தது.

இந்நிலையில் எகிப்திய இடைக்கால ஆட்சி அதிகாரத்தைக் கையில் எடுத்திருக்கும் எகிப்திய இராணுவம், தமது எதிர்கால திட்டம் குறித்து விளக்க அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளது. அதில் பின்வரும் அம்சங்கள் முக்கியத்துவம் மிக்கதாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. அவையாவன

* அரசியலமைப்பு இரத்துச் செய்யப்படுமா
* ஆறுமாதங்களுக்குள் அல்லது தேர்தல்வரை மட்டுமே அதிகாரத்தில் இருத்தல்.
* இடைக்கால ஆட்சிக்காலத் தில் சட்டங்களை நடைமுறைப்படுத்தல்.
* அரசியலமைப்பை மீள ஏற்படுத்த சபை ஒன்றை ஏற்படுத்தல்,
* சீர்திருத்தத்திற்கான சட்டங்களை நடைமுறைப்படுத்தல்.
* புதிய அமைச்சரவை ஸ்தாபிக்கப்படும் வரை பிரதமர் அஹம்மட் ஷபீக்கின் அமைச்சரவைப் பணியைத் தொடர்தல்.
* ஜனாதிபதித் தேர்தல் மற்றும் பாராளுமன்றத்தேர்தலை நடாத்துதல்.
* அனைத்துச் சர்வதேச உடன்படிக்கைகளுக்கும் கௌரவமளித்தல்

## தபால் மூலம் வாக்காளர் விண்ணப்பத்தில் வீழ்ச்சி

அடுத்தமாதம் 17ஆம் திகதி நடைபெறவுள்ள உள்ளூராட்சி மன்றங்களுக் கான தேர்தலில் தபால் மூலம் வாக்களிப்பதற்கு 3,21,595 பேர் விண்ணப்பித்துள்ளதாக தேர்தல்கள் திணைகளம் தெரிவித்துள்ளது.

கடந்த காலத் தேர்தல்களுடன் ஒப்பிடுகையில் இந்தத் தேர்தலில் தபால் மூலம் வாக்களிப்பதற்கு விண்ணப்பித்தோரின் எண்ணிக்கை மிகவும் குறைவானதாகும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. 2010 ஆம் ஆண்டு நடைபெற்ற பாராளுமன்றத் தேர்தலுடன் ஒப்பிடுகையில் இந்த எண்ணிக்கை குறைந்துள்ளது. அந்தத் தேர்தலில் தபால் மூலம் வாக்களிப்பதற்கு 4,77,742 பேர் விண்ணப்பித்திருந்தனர். மார்ச் 17ஆம் திகதி நடைபெறவிருக்கின்ற உள்ளூராட்சி மன்றங்களுக்கான தேர்தலுக்கான தபால்மூல வாக்குப்பதிவை மார்ச் 8ஆம், 9 ஆம் திகதிகளில் நடத்துவதற்கு தேர்தல்கள் திணைக்களம் நடவடிக்கைகளை மேற்கொண்டுவருவதாகவும் தெரிவிக்கப்படுகின்றது

## சூடான் போன்ற கருத்துக்கணிப்பு சாத்தியமே இல்லை என்கிறது அரசு

பிரிவினை தொடர்பாக சூடானில் நடத்தப்பட்டது போன்ற கருத்துக்கணிப்பு இலங்கையிலும் நடத்தப்பட வேண்டும் என்ற கோரிக்கையை அரசாங்கம் நிராகரித்துள்ளது.

சூடானில் இருந்து தென்சூடான் பிரிந்து செல்வதற்கு கருத்துக்கணிப்பு நடத்தப்பட்டது போன்று இலங்கையிலும் நடத்தப்பட வேண்டும் என்றும் அதற்கு அரசை ஐ.நா இணங்க வைக்க வேண்டும் என்றும் நாடு கடந்த தமிழீழ அரசு மற்றும் புலம்பெயர் தமிழர் அமைப்புகள், அனைத்துலக உதவி நிறுவனங்கள் சிலவும் வலியுறுத்தி வருகின்றன.

இதுதொடர்பாக கருத்து வெளியிட்ட முன்னாள் சமாதான செயலகப் பணிப்பாளரும், ஆளும்கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினருமான பேராசிரியர் ரஜீவ விஜேசிங்க தெரிவிக்கையில், சூடான் நிலைமையும், இலங்கையின் நிலைமையும் வித்தியாசமானவை என்றும் இங்கு அத்தகைய கருத்துக்கணிப்பு நடத்தப்பட வேண்டிய அவசியம் கிடையாது என்றும் "இரு நாடுகளினதும் வரலாற்றுப் பின்னணியும், அரசியல் கோட்பாடுகளும் வித்தியாசமானவை. சூடானில் நிலைமை முற்றிலும் வித்தியாசமானது. அங்கு சில பிரதேசங்கள் சூடானிய அரசாங்கத்தின் நிர்வாகத்திலும் இல்லை - அதற்கான விநியோகங்களும் இடம்பெறுவதில்லை. ஆனால் இலங்கையில் நிலைமை அப்படியில்லை. என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

## கண்டியில் வீதி மூடப்பட்டது

கண்டி மகியங்கனை பிரதான வீதி திருத்தவேலை காரணமாக மூடப்பட்டுள்ளதாக வீதி அபிவிருத்தி அதிகாரசபை அறிவித்துள்ளது.

மூடப்பட்டுள்ள இந்த வீதியானது முன்னர் ஒருமுறை திருத்த வேலைக் காக மூடப்பட்டபோதிலும் மக்களின் ஆர்ப்பாட்டத்தினால் தற்காலிகமாகத் திறந்து விடப்பட்டது.

இந்த வீதிக்குப் பதிலாக விக்டோரியா ரந்தெனியகல வழியாக மகியங்கனை வழியைப் பயன்படுத்துமாறும் பொதுமக்களிடம் வீதி அபிவிருத்தி அதிகாரசபை கேட்டுள்ளது.

இருப்பினும் இவ் வீதியும் ரந்தெனிகலை நீர்த்தேக்கத்திற்கு அருகில் கீழிறங்கும் அபாயத்தை எதிர்நோக்கியுள்ளதால் வாகனங்கள் மட்டுப்படுத்தப் பட்டுள்ளதாகவும் வீதி அதிகார சபை தெரிவித்துள்ளது.

## சாவகச்சேரியில் வெள்ளைவான்!

யாழ்ப்பாணம் தென்மராட்சியின் சாவகச்சேரி நகரப் பகுதி யில் வெள்ளைவான் கும்பல் எனச் சந்தேகிக்கப்படும் ஐவர் கொண்ட குழுவி னரை காவற்துறையினர் கைது செய்துள்ளனர். ஒரு நபர் தப்பி ஓடியுள்ளார். சாவகச்சேரி நகரில் கடந்த திங்கள் இரவு 9 மணியளவில் சந்தேகத்திற்கு இடமான முறையில் சுற்றித் திரிந்த இவர்களின் வாகனம் தொடர்பாக பொதுமக்கள் பொலிசாருக்கு தகவல்களை வழங்கியிருந்தனர்.

இதனை அடுத்து பொலிசார் மேற்கொண்ட சுற்றி வளைப்பில் ஐவர் கைது செய்யப்பட்டு உள்ளனர். ஒருவர் தப்பி ஓடியுள்ளார். கைது செய்யப்பட்ட அனைவரும் சிலாபம் உள்ளிட்ட நாட்டின் ஏனைய பகுதிகளைச் சேர்ந்தவர்கள் எனத் தெரியவருகிறது. இவர்கள் யார் என்பது பற்றியோ எங்கிருந்து குடாநாட்டுக்குள் நுழைந்தார்கள் என்பது பற்றி தெரியவில்லை.

தினமுரசு வாரமலர்

த.பெ.இல:-1772, கொழும்பு.

த.பெ.இல:-167, யாழ்ப்பாணம்.



தொலைபேசி: -021 222 1811

தொலைநகல்(Fax):- 021 222 1811

ஈ-மெயில்(E-mail):- thinamurasu@live.com


## முரசம்

## என்ன நடக்கின்றது?

### அன்புள்ள உங்களுக்கு, வணக்கம்.

என்ன நடக்கின்றது நாட்டில் ஒன்றும் புரிந்துகொள்ளும் படியாக இல்லை. கடல் வலயத் தடைகள் எல்லாம் நீக்கப்பட்டதாகச் சொன்னார்கள். இப்போது யாழ்ப்பாணத்தில் வடமராட்சிப்பகுதியில் மீன்பிடிக்கச் செல்வோர் பாதுகாப்பு அனுமதி பெறவேண்டும், அங்கு வழங்கப்படும் அனுமதியுடன் தான் கடலில் இறங்க வேண்டும் என்று சொல்லப்படுகின்றது.

என்ன நடக்கின்றது நாட்டில் ஒன்றும் புரிந்துகொள்ளும்படியாக இல்லை.

புலிகளை முற்றாக அழித்தாகிவிட்டது. எஞ்சியவர்களையும், புனர்வாழ்வு அளிக்கப்பட்டு கட்டம் கட்டமாக விடுவிக்கப்படுகின்றார்கள் என்றார்கள். இப்போது மீண்டும் குடும்பப் புகைப்படம், பொலிஸ்பதிவு, வீதிகளில் பழையபடி பரிசோதனைகள், வீதியில் நிறுத்தியே கைகளை உயர்த்திப் பரிசோதனை நடக்கிறது. மீண்டும் இராணுவப் பிரசன்னங்கள் அதிகரித்துக் காணப்படுகின்றன. இவை வெளிப்படுத்தும் செய்த என்ன? மீண்டும் புலிகள் இயங்கத் தொடங்கிவிட்டார்களாம்? அல்லது புலிகள்போன்று இயங்கக் கூடிய அமைப்புக்கள் உருவாக்கம் பெறும் வாய்ப்பு உள்ளதென்று அச்சம் ஏற்பட்டுள்ளதா? அல்லது கடல்வழியாக ஓடித்தப்பிய புலிகளோ அல்லது வேறு நாட்டுப் பயங்கரவாதச் சக்திகளோ நாட்டுக்குள் ஊடுருவும் வாய்ப்புள்ளதா? தமிழ் மக்களை நெருக்கும் அளவுக்கு நாட்டில் ஏற்பட்டிருக்கும் மாற்றம் என்ன? அதற்கு நாட்டு மக்கள் உதவமாட்டார்களா? மக்களுக்கு வெளிப்படையாக நிலைமையைச் சொன்னால் கூடாதா? விஷயம் என்னவென்று தெரிந்தால் நாட்டு மக்களும் நெருக்கடியைச் சகித்துக்கொள்வார்கள் அல்லவா. உண்மை புரியும் அல்லவா? நடக்கின்ற சம்பவங்களையிட்டு ஒட்டுமொத்தமாக வெறுப்புக்கொள்ளும் நிலைமை மக்களுக்கு ஏற்பட்டுள்ளது. அங்கொன்று சொல்லப்படுகின்றது. இங்கே வேறொன்று நடக்கிறது. பொறுப்புச் சொல்லும் பொறுப்பு யாரிடம் உண்டு.

என்ன நடக்கிறது நாட்டில்? ஒன்றும் புரிந்துகொள்ளும்படியாக இல்லை.

கிழக்கில் வெள்ளம், சுமார் பன்னிரண்டு இலட்சம் பேர் அகதிகளாயினர். பல கிராமங்கள் தொடர்புகளையே துண்டித்த நிலையிலிருந்தன. அநுராதபுரம், வவுனியா, மலையகம் எனப் பல பகுதிகள் அனர்த்தத்திற்கு முகங்கொடுத்தது. சில அமைச்சர்களின் விருப்பு வெறுப்புக்களுக்கு ஏற்ப சில பாராளுமன்ற உறுப்பினர் ஒருசிலர் தண்ணீரில் இறங்கிநின்ற படியும், வேட்டிகளைத் தூக்கியபடியும் போட்டோவுக்குப் போஸ் கொடுத்தனர். அமைச்சர்களின் இணைப்பாளர்கள் செல்போனும் கையுமாகக் குடைபிடிக்கும் உதவியாளர்களுமாக பாவம் கஸ்ரப்பட்டார்கள்.

உள்ளூராட்சி சபைகளுக்குப் போட்டி போடும் எதிர்கால அரசியல் தலைவர்கள் பாண் கொடுப்பதாகவும், பிஸ்கட் கொடுப்பதாகவும், சாப்பாட்டுப் பார்சல் கொடுப்பதாகவும் தமது கையிருப்புக்கேற்ப உதவி. அதையும் பத்திரிகையில் வரச்செய்வதில் கவனமெடுத்தார்கள். இதைப்பார்க்கின்ற போது அடுத்து நடக்கவிருப்பது நாடு தழுவிய ரீதியிலான பாராளுமன்றத் தேர்தலாக இருந்திருந்தால் ஒருவேளை பலபேரை கோவணங்களுடன் உதவிப் பணிகளில் பார்த்திருக்கலாம்.

அரசியல் என்பதே ஒரு ரூபா போட்டால் இரண்டு ரூபா கிடைக்குமா என்றாகிவிட்டதே.

என்ன நடக்கிறது நாட்டில். ஒன்றும் புரியும்படியாக இல்லை.

எதிர்க்கட்சியினர் எகிப்தில், துனிசிலாவில் நடந்துவிட்டது, நாளை இது இலங்கையிலும் நடக்கும் என்ற கனவோடு அறிக்கைவிட்டு காலத்தைக் கடத்திக்கொண்டிருக்கிறார்கள். உட்கட்சிப் பூசலை சரிசெய்ய முடியாதவர்கள் எகிப்துக் கனவில் உலாவருகின்றார்கள்.

பொருட்களின் விலையுயர்வுக்கு முடிவு காணப்படும்வரை எவர்

என்ன சொன்னாலும் எல்லாமே ஏமாற்றுத்தான். இப்படியே நாடு போனால் நாட்டுப் பிரஜைகளின் பலம் இதுதான். என்ன நடக்கிறது நாட்டில். ஒன்றும் புரியும்படியாக இல்லையே.

மீண்டும் மறுமடலில்
வந்து கலக்கும்வரை
என்றென்றும் அன்புடன்,
ஆசிரியர்.

# எரிகிறது எகிப்து!

**எகிப்து நைல் நதிக்கரையோரம் இருக்கும் அழகிய தேசம். கிரேக்கர்கள், உரோமர்கள் போன்று எகிப்தியர்களும் மனித வரலாற்றில் கலை, பண்பாடு காத்தவர்கள். மதநம்பிக்கை, பெண்தெய்வ வழிபாடு, மதுமாது என கிரேக்க, உரோம சாம்ராஜ்ஜியங்களின் பழக்கவழக்கங்களைப் பின்பற்றியவர்கள். எகிப்தியர்களின் நுண்ணறிவு, மருத்துவ அறிவு என்பவற்றுக்குச் சான்றாக பிரெமிட் மம்மிகளைக் கருதலாம்.**

**இறந்துபோனவர்கள் மீது மீண்டும் அவர்களது ஆன்மா வந்து சேரும் என்று நம்பினார்கள். அது அவர்களின் மூடநம்பிக்கையாக இருந்தாலும், அந்த நம்பிக்கையின் பலனாக இறந்தவர்களின் உடம்பைப் பதப்படுத்திப் பல ஆண்டுகளுக்கு பழுதுபடாமல் பாதுகாக்கும் சூட்சுமம் தெரிந்தவர்கள் அதுதான் மம்மிகள்.**

**கி.மு.160 ஆண்டுகளுக்குப் பிறகு எகிப்தின் வரலாற்றைப் பார்த்தால் 1952 ஆண்டுவரை அரச ஆட்சியே எகிப்தில் இருந்து வந்துள்ளது.**

**1952 ஜுலை 23 ஆம் திகதி சுதந்திர அதிகாரிகள் இயக்கம் (Free Offices Movement) நடத்திய இராணுவப் புரட்சிதான் எகிப்தின் மன்னர் ஆட்சிக்கு முடிவு கட்டியது. அத்தோடு எகிப்தைக் குடியரசாகவும் மாற்றமடையவும் செய்தது. இந்த இராணுவப் புரட்சியின் வெற்றிதான் பல அரபு ஆபிரிக்க நாடுகளில் இருந்த ஊழல் மலிந்த ஆட்சியாளர்களைப் பதவி இறக்கப் போராடியவர்களுக்கு ஊக்கமளித்தது என்றால் அது மிகையாகாது.**

### அலசுவது - மதியூகி -

"அளவுக்கு மிஞ்சினால் அமிர்தமும் நஞ்சு" இப்படித்தான் ஆரம்பிக்க வேண்டும். எகிப்தில் நடந்திருப்பதும் அதுதான் . 'ஹோஸ்னி சயத் முபாரக்" உலக மக்கள் ஒவ்வொருவருக்கும் இந்தப் பெயர் அண்மைக்காலமாக நன்கு அறியப்பட்ட பெயர்.

உலக அதிசயமான பிரமிட்டுக்கள் எகிப்தின் உலக அடையாளம்.' கடந்த 30 வருடமாக தமது தலைவனாகக் கொண்டாடிய எகிப்து மக்கள் இப்போது "தொண்டனாக்கூட நீ வேண்டாம் ஓடிவிடு' என்று விரட்டியிருக்கின்றார்கள்.'

மாறிவரும் உலக ஒழுங்கையும், நாட்டு மக்களின் விருப்பு, வெறுப்புக்களையும், உணர்வுகளையும் புரிந்துகொள்ளாமல், புரிய விரும்பினாலும், ஆட்சி நடத்தினால் வரலாறு மாறுதலை ஏற்படுத்தும். ஹிட்லரைக் கூட ஜேர்மனியின் ஒரு பகுதி மக்கள் தமது தேசத் தந்தையாகத்தான் ஜேர்மனியின் பாதுகாப்பு, கௌரவம், தனித்துவமான தேசம் என்பதுதான் அவாவாக இருந்துள்ளது.

ஹிட்லரின் இந்த எண்ணங்கள் உலக நாடுகளின் விருப்பங்களுக்கும், வரவேற்புக்கும், ஜேர்மனியர்களின் நியாயமானதாக இருந்திருக்கும்.

ஆனால் ஹிட்லர் தமது வல்லமையைப் பிரதேசங்களை வீழ்ச்சியடையச் செய்வதிலும், எவரது உணர்வுகளுக்கும் இடமளிக்காததாகவும் பிரயோகித்ததால் இறுதியில் பரிதாபமான முடிவு பரிசளிக்கப்பட்டது. உலக வரலாற்றில் சர்வாதிகாரியாகச் சித்தரிக்கப்பட்டார்.

ஹிட்லருக்குப் பிறகும் உலகில் பலர் பாடம் கற்றுக்கொள்ளவில்லை. ஆட்சி அதிகாரவெறியும், அடக்கி ஆளும் குரூரமும் கொண்டு பலர் ஆடினார்கள். அவர்களை வரலாறு அடக்கியது. இந்த வரலாறை எழுதும் மக்கள் எங்கெல்லாம் எழுச்சி கொள்கின்றார்களோ அங்கெல்லாம் சர்வாதிகாரம் சிறந்த பாடத்தைக் கற்றுக்கொண்டுள்ளது.

இந்தக் கட்டுரையின் நோக்கம் ஹிட்லருக்குப் பிறகு தோற்கடிப்பட்ட சர்வாதிகாரிகளைப் பற்றி அலசுவதல்ல. அது சிறிய விடயமுமல்ல. எகிப்துக்குத் திரும்புவோம்.

நாட்டு மக்களின் உணர்வுகளுக்கு மதிப்பளிக்காமல், வேலை வாய்ப்பின்மை, தாங்க முடியாத பொருட்களின் விலையேற்றம், உரிமைகள் மறுக்கப்பட்டு, அடக்கியாளப்படும் உணர்வு, அரசியல் சுதந்திரமின்மை, குடும்ப ஆட்சி என்பன பல நாடுகளில் நிலவுகின்றது. இத்தகைய நிலைமை அதிகரிக்கும்போது மக்கள் எழுச்சியடைகின்றனர்.

அப்படி நவீன யுகத்தில் தமது உணர்வுகளை வெளிப்படுத்தியவர்கள் துனிசியா நாட்டு மக்கள்தான். 23 வருடங்களாக துனிசியாவை ஆட்சி செய்துவந்த அந்நாட்டு அதிபர் பென் அலி (Ban ali)க்கு எதிராக மக்கள் கிளர்ந்து எழுந்தனர். சர்வ அதிகாரங்களையும் பயன்படுத்தி மக்களின் போராட்டத்தை ஒடுக்க முற்பட்டபோதும் மக்கள் அசைந்து கொடுக்கவில்லை. இறுதி யில் துனிசியாவின் அதிபர் தனது பதவியிலிருந்து விலகினார். துனிசியா நாட்டு மக்களின் அந்தப் போராட்டம் உலக மக்களின் சிந்தனையைத் தூண்டிவிட்டது.

முப்பது வருடங்களாக ஆட்சிக்கதிரையைப் பிடித்து அதில் உறங்கிக் கொண்டிருந்ததோடு விட்டுவிடாமல் எதிர்வரும் செப்டெம்பர் மாதம் நடைபெறவிருக்கும் அதிபர் தேர்தலில் தனது மகனைப் போட்டியிடச் செய்து அதிபராக்கும் முயற்சியில் எகிப்தின் அதிபர் ஹோஸ்னி முபாரக் ஈடுபட்டார்.

எகிப்து தேசத்தை அவரின் குடும்பச் சொத்தாக நினைத்து விட்டார். தனக்குப் பாதுகாப்பு அமைச்சர்களாகவும், முக்கிய பதவிகளிலும் நியமித்திருந்தார். ஊழல் மோசடியின் அதிபதியாக ஹோஸ்னி முபாரக் தெரிந்தார். நாட்டு அதிபருக்கு எதிராக மக்கள் கொந்தளித்து எழுத்தயாராக இருந்தார்கள். அதை ஒழுங்குபடுத்தும் முயற்சியில், முஸ்லிம் சுகாதாரத்துவ இயக்கம் இறங்கியது.

எகிப்தின் ஹெய்ரோ நகரிலுள்ள ' தஹ்ரீர் சதுக்கத்தில் மக்கள் கூடினார்கள். நூறு ஆயிரமானது பின்னர் ஆயிரம் இலட்சமானது. இரவு பகல் மறந்தார்கள். உணவு, உறக்கம், இறை வணக்கம் எல்லாம் அதிபருக்கு எதிரான போராட்டத்துடனேயே




இரவு பகல் பாராது தொர்ச்சியாக போராட்டத்தில் குதித்திருந்த மக்கள் எவ்வித வேறுபாடுகளுமின்றி உணர்ச்சி பொங்க கொந்தளித்திருந்தனர்

இருந்தது.
எகிப்து ஏற்கனவே புரட்சிகளையும், பல போராட்டங்களையும் கண்டிருந்தது. அவற்றில் ஒன்றாகவே அதிபர் முபாரக் இம்முறையும் நினைத்தார்.
பாதுகாப்புப் படையினரை

இஸ்ரேல் போன்ற நாடுகளின் சதி என்றும் இதற்கு மக்கள் பலியாக வேண்டாம் என்றார். அதேவேளை தேர்தல் வரை தாம் ஜனாதிபதியாக இருந்து விட்டுப் பின்னர் பதவி விலகுவதாகவும் முபாரக் கூறினார்.

செயலகத்தை முற்றுகையிட திட்டமிட்டனர். அந்தப் பின்னணியில், இஸ்ரேலில் இருந்து எகிப்துக்கு எரிவாயு எடுத்துவரப்படும் குழாய் தாக்குதலுக்குட்பட்டுப் பெரும் சுவாலையோடு எரிந்தது.
உதவி ஜனாதிபதி

விரும்பாத முபாரக் எதிர்பார்ப்பாளர்கள், தேர்தல்வரை முபாரக் தனது பதவியதிகாரத்தை இராணுவத்தலைமையிடம் ஒப்படைக்க வேண்டுமென கூறினார்.
பழம் நழுவி பாலில்

# நவீன சர்வாதிகாரத்துக்கு சாவுமணி



முஹமது ஹோஸ்னி சயத் முபாரக் 1928 மே 14 ஆம் திகதி பிறந்தார். எகிப்தின் வான் படையில் பணிபுரிந்தார்.
1981ஆம் ஆண்டு செப்டெம்பர் மாதம் இராணுவ அணிவகுப்பொன்றின் போது அப்போதைய அதிபர் அன்வர் எல் சதாத் படைவீரர் ஒருவரால் சுட்டுக்கொல்லப்பட்டதைத் தொடர்ந்து 1981 ஒக்டோபர் 14 ஆம் திகதி முபாரக் எகிப்து குடியரசின் அதிபரானார்.
அன்வர் எல் சதார் 1970 செப்டெம்பர் 28 இல் அப்போதைய எகிப்தின் அதிபர் நாசீர் மாரடைப்பால் காலமானதைத் தொடர்ந்து ஆட்சியைப் பிடித்தவர் என்பது குறிப்பிடத்தக்கது.
1970-1981 வரையான பதினொரு ஆண்டுகள் எகிப்தின் ஆட்சியும் இரும்பு ஆட்சியாகவே இருந்தது. முதலில் அமெரிக்க, இஸ்ரேல் நாடுகளின் அன்புக்குரியவராக இருந்தார். பின்னர் முரண்பட்டார். எகிப்துக்கும்-இஸ்ரேலுக்கும் எப்போதுமே முரண்பாடு இருந்து வருகின்றது. அமெரிக்கா சமரசம் செய்யும் பாணியில் இஸ்ரேலுக்கு உதவி செய்யும். இதனால் பனிப்போர் தொடர்ந்தது.
எகிப்து தனியே முஸ்லிம் இராஜ்ஜியமாக இருந்துவிடக் கூடாது என்பதும், இஸ்ரேலுக்கு எதிராகவும் இருந்துவிடக் கூடாது என்பதும் அமெரிக்காவின் கவலையாகும்.
இதற்காகப் பதவிக்கு ஆட்கள் வருவதையும், அதே பதவியாளர்களைத் தூக்கி எறிவதையும் ஏதாவது ஒரு முகத்தோடு அமெரிக்கா நிகழ்த்தி வருகிறது என்ற குற்றச்சாட்டும் உண்டு.
1981 அன்வர் கொல்லப்பட்டதில் முபாரக்குக்கும் தொடர்பு உண்டு என்றும், முபாரக்கைப் பதவிக்குக் கொண்டுவர அமெரிக்காவே சதி செய்தது என்று கூறப்பட்டது. இப்போது அதே முபாரக்குக்கும் அதுவே நடந்திருக்கின்றது.

விட்டு ஆர்ப்பாட்டக்காரர்களை விரட்ட முற்பட்டார். கண்ணீர்ப்புகை கொண்டு தாக்கினார். மக்களுக்கும் படையினருக்கும் கலவரம் வெடித்தது. பலர் உயிரிழந்தார்கள். பலர் காயமடைந்தார்கள். நாளுக்கு நாள் மக்கள் அதிகரித்தார்களேயன்றி கூட்டம் குறையவில்லை. அதுமட்டுமல்லாமல் நாட்டின் பல பகுதிகளிலும் மக்கள் அதிபருக்கு எதிராக வீதியில் இறங்கினார்கள்.

அதிபர் முபாரக் உடனடியாக பதவியிலிருந்து விலக வேண்டும் என்பதே மக்களின் கோரிக்கையாக இருந்தது.

எகிப்து மக்களின் போராட்டம் உலக மக்களின் கவனத்தை ஈர்த்தது. மற்ற நாடுகள் நிலைமையை அவதானித்த போதும், அமெரிக்காவும், இஸ்ரேலும் தமது உள்ளுணர்வுகளை அடக்க முடியாமல் வாய்திறந்தன.

மக்களின் உணர்வுகளுக்கு மதிப்பளித்து முபாரக் பதவி விலக வேண்டுமெனக் கூறின. முதல் ஒரு வாரம்வரை மக்களை எதிர்த்த எகிப்து இராணுவம் தனது நிலைப்பாட்டை மாற்றிக்கொண்டு மக்களுக்கு ஆதரவாகச் செயல்பட்டது.

இராணுவம் தனக்கு எதிராக திரும்பியிருப்பதை உணர்ந்த முபாரக், எதிர்வரும் அதிபர் தேர்தலில் தனது மகனை போட்டியிடச் செய்வதில்லை என்று அறிவித்தார்.

இந்த அறிவிப்பை மக்கள் ஏற்கவில்லை. அதிபர் பதவியிலிருந்து முபாரக் விலக வேண்டும் என்று வலியுறுத்தினர்.

அமெரிக்கா மற்றும்

முபாரக்கின் இந்த வாக்குறுதியை ஏற்கத் தயாரில்லாத மக்கள் முபாரக் பதவி விலகா விட்டால் தமது போராட்டம் இன்னொரு பரிமாணத்தை அடையும் எனவும், அது முபாரக் மற்றும் அவரது குடும்பத்தினருக்கும் முடிவு கட்டும் என்றும் கொந்தளித்தனர்.

மக்களின் இந்த ஆத்திரம் கலந்த எதிரொலிப்பைத் தொடர்ந்து முபாரக்கின்

சுலைமானைப் படுகொலை செய்ய எடுக்கப்பட்ட முயற்சி தடுக்கப்பட்டது. இப்படி மக்கள் நடத்திய ஜனநாயகப் போராட்டம் நாளாக நாளாக வன்முறையாகப் பயங்கரவாதமாக மாற்றமடையும் ஆபத்து சூழ்ந்தது. எகிப்து மக்களின் போராட்டம் வன்முறையாகிவிடக்கூடாது என்று உலக மக்கள் கருதினார்கள்.

மக்களின் அகிம்சைப்

விழுந்தது போல் இராணுவம் உசாரடைந்தது. முபாரக்கின் ஆதரவாளர்களை கலவரக்காரர்களாகக் காட்டி அடக்கியது. இராணுவத்தின் தீவிர நடவடிக்கையும், மக்களின் எழுச்சியும் ஒரே நேர்கோட்டில் சங்கமித்தது. பிரான்ஸ், அமெரிக்கா உள்ளிட்ட நாடுகள் நிலைமையின் தீவிரத்தைப் புரிந்துகெண்டன.




ஜனாதிபதி முபாரக்கின் ஆட்சி முடிவுக்கு வந்ததன் மகிழ்ச்சியை கொண்டாட்டங்கள் எகிப்திய தேசத்தில் மட்டுமன்றி அமெரிக்காக உள்ளிட்ட எகிப்தியர் வாழும் நாடுகளில் எல்லாம் களைகட்டிக் கொண்டிருக்கிறது.

மனைவி சுசான் மற்றும் பிள்ளைகளான அலா. ஜமால் ஆகியோர் நாட்டைவிட்டு தனி விமானத்தில் ஓடித்தப்பினார்கள். அவர்கள் பெருந்தொகைப் பணத்தையும், தங்கங்களையும் கொண்டு சென்றதாகப் பின்னர் கூறப்பட்டது.

இந்தச் செய்தி பரவியதும் மக்கள் முபாரக்கின்

போராட்டம், வன்முறையாக மாறினால் உலக நாடுகள் வரவேற்காது என்று எண்ணிய முபாரக் தமது ஆதரவாளர்களை ஏவிவிட்டார். இதன் விளைவாக முபாரக்கின் எதிர்பார்ப்பாளர்களுக்கும் ஆதரவாளர்களுக்குமிடையே கலவரங்கள் வெடித்தன.

பாதுகாப்புப் படையினரின் ஆதரவை இழக்க

முபாரக்கின் பாதுகாப்பு கேள்விக்குறியாகி வருவதை எச்சரித்தன.

பெப்ரவரி 11 ஆம் திகதிவரை 17 நாட்களாகத் தொடர்ந்த மக்கள் போராட்டத்துக்கு முடிவுகாண விரும்புவதாகவும் முபாரக் பதவி விலகாவிட்டால் அவரின் செயலகத்தை முற்றுகையிட்டு முபாரக்கைத் தூக்கில் தொங்கவிடப்போவதாகவும் மக்கள் எச்சரித்ததோடு, முழு நாட்டு மக்களையும் ஒன்று திரட்டினர். இதை அறிந்த முபாரக் தாம் பதவி விலகுவதாகவும், தேர்தல் வரை பாதுகாப்பு அமைச்சரும், படைத்தளபதியுமான 75 வயதான முஹமட் ஹுசைன் தன்ராவி தனது பொறுப்புக்களை வகிப்பார் என்றும் கூறினார்.

தேர்தல்வரை நாட்டை இராணுவக் கவுன்சில் நிர்வகிக்கும் என்றும் கூறினார். இந்த அறிவிப்பை உப ஜனாதிபதி ஓமர் சுலைமான் அறிவித்தார். இந்த அறிவிப்பைத் தொடர்ந்து எகிப்து மக்கள் ஆறுதல் அடைந்தனர். தஹ்ரீர் சதுக்கத்தில் கூடி இருக்கும் மக்களை இராணுவம் கலைந்துபோகுமாறு கூறியது பலர் கலைந்து போனாலும் பெருமளவானோர் தமது போராட்டத்தின் முடிவாக, முபாரக்கின் பதவி விலகளை அடுத்து, எவ்விதமான அரசியல் முன்னேற்றம் எடுக்கப்படவுள்ளது. அதன் கட்டமைப்பு என்ன? என்பதை இராணுவம் தெளிவுபடுத்த வேண்டும் என்று கூறி வருகின்றனர்.

மக்களின் இந்தக் கேள்விக்கு இராணுவம் நியாயமாக பதிலளிக்காமல் மக்களைக் கலைந்து செல்லுமாறு கூறி வருகின்றனர்.

அதிகாரத்தைக் கைப்பற்றியிருக்கும் இராணுவம் மக்களுக்குப் பதிலளிக்குமா? அல்லது மக்களோடு மோதுமா?, மக்களின் நிலைமை சட்டியிலிருந்து அடுப்பில் விழுந்த கதைதானா என்பதையெல்லாம் பொறுத்திருந்துதான் பார்க்க வேண்டும்.

## யார் அறிவார்?

நேற்று ருனிசியாவில், இன்று எகிப்தில் நாளை எங்கே? என்று சிந்தனை எழ முன்னரே ஜேமனில் மக்கள் அரசுக்கு எதிராக வீதியில் இறங்கிவிட்டனர்.

1978 முதல் ஜேமன் ஆட்சிக்கதிரையில் காலத்தைக் கடத்திக்கொண்டிருக்கும் அதிபர் அலி அப்துல்லா சலேயின் என்பவருக்கு எதிராக மக்கள் கிளர்ந்துள்ளனர். 33 வருடங்கள் ஆட்சி நடத்துகிறார். அவரின் குடும்பமும்-அவரது ஜால்ராக்களுமே சுகபோகமாக வாழ்கின்றனர்.

முதல்நாள் போராட்டத்திலேயே சுமார் 4000 பேர் கலந்துகொண்டுள்ளனர். இனி நாட்கள் நகர நகர போராட்டம் எந்த வடிவம் பெறும் என்பதைப் பார்க்கலாம்.

ஜேமனுக்குப் பரவியிருக்கும் இந்தக் காற்று அடுத்து வீசப்போவது அல்ஜீரியாவில். அங்குதான் மக்கள் சூறாவளிக்கான தாழமுக்கம் ஏற்பட்டுள்ளது.

இந்த அரபு தேசங்களிலிருந்து எதிரொலிக்கும் செய்தி நவீன சர்வாதிகாரிகளுக்குச் சாவுமணியாக அமையும். பஞ்சம் பட்டினி, அரசியல் சுதந்திரம் மறுப்பு, சமத்துவமின்மை, குடும்ப ஆட்சி, பதவி மோகமும், பதவி ஆணவமும், எங்கெல்லாம் தலைவிரித்தாடுகிறதோ அங்கெல்லாம் மக்கள் சக்தியின் பலமான கரங்கள் ஒருநாள் தட்டும். நவீன சர்வாதிகாரிகளை ஓட ஓட விரட்டும், மக்கள் எல்லா நாளும் மௌனமாக இருக்கமாட்டார்கள். தோளில் தூக்கிக் கொண்டாடும் மக்களே ஓடித்தப்ப காலக்கெடு வழங்கியதே உலக வரலாறு, உலக நியதி இதுதான் என்றால் எவரும் விதிவிலக்காக இருக்க முடியாது. இன்று முபாரக் காத்திருப்போம். நாளை யார் யாரோ யார் அறிவார்?




# காதலர்களுக்கான இணையத்தளம்

**உலகில்** பல்வேறுவிதமான இணையத்தளங்கள் இருக்கின்றன. இந்த உலகில் வாழ்கின்ற மனிதர்கள் இப்போது இணையத்தளத்தைப் பார்த்தே எல்லா விடயங்களையும் அறிந்து கொள்ளக்கூடியநிலை காணப்படுகின்றது. தற்போது உலகில் எல்லோருடைய கவனத்தையும் ஈர்த்திருக்கும் இணையத்தளம் WWW.wikihow.com/make your girlfriend happy இணையத்தளம் ஆகும். ஒரு இணையத்தளத்தின் வெற்றிக்கும் அதன் பெயருக்கும் முக்கிய பங்கு உண்டு. எனவேதான் இணைய உலகில் வெற்றி பெற நினைப்பவர்கள் முதலில் அசத்தலான பெயரை தேட முற்படுகின்றனர்.

இணையத்தளத்தில் உள்ளடக்கப்படுகின்ற விடயங்களை பெயராக அப்படியே நீளமாக வைத்து விடுவார்கள். மேக் யுவர் கேர்ல் பிரண்ட் ஹப்பி இணையத்தளம் இந்த ரகத்தை சேர்ந்தது தான். நீளமான இணையப் பெயர் பாதகமானது என்னும் கருத்திற்கு மாறாக பெயரை சொன்னவுடனே கவனத்தை கவரும் வகையில் இந்த தளத்தின் பெயர் அமைந்துள்ளது.

காதலியை மகிழ்ச்சியாக வைத்திருக்க வழி காட்டுவதற்காக உருவாக்கப்பட்டுள்ள இந்தத் தளம் அதனையே தனது பெயராக வைத்திருக்கின்றது. ஒரு மேம்பட்ட காதலனாக இருங்கள் என்று கூறும் இந்தத் தளம் அதற்கான வழியாக காதலியின் பிறந்தநாளை மறக்காமல் இருந்து வாழ்த்து சொல்வது போன்ற அம்சங்களை வலியுறுத்துகிறது. காதலி தொடர்பான முக்கிய தினங்களை நினைவூட்டுவது, காதலி அகமகிழ்ந்து போகக்கூடிய பரிசுப் பொருள் வாங்கிக்கொடுக்க உதவுவது, தேவைப்பட்டால் காதல் ஆலோசனைகளை தருவது போன்ற சேவைகளை வழங்குகிறது.

சொந்த உபயோகத்திற்காக உருவாக்கப்பட்டு பின்னர் மற்ற காதலர்களுக்கும் உதவும் என்பதால் இந்த தளம் அமைக்கப்பட்டதாக குறிப்பிடப்பட்டுள்ளது. எல்லா தகவல்களுமே நடைமுறை சாத்தியம் கொண்டதாக, சுவையானதாக இருக்க வேண்டும் என்னும் அடிப்படையில் ஆலோசனைகளும் வழிகளும் உருவாக்கப்பட்டுள்ளனவாம். காதலியை கவர்வதற்கான ஆலோசனைகளும் கொடுக்கப்பட்டுள்ளன. காதலன்களுக்கான ஆலோசனை மட்டும்தானா? காதலிகளுக்கு எதுவும் இல்லையா என்று கேட்கலாம். கவலையே வேண்டாம் பெண்களுக்கு என்று தனிப்பகுதி உள்ளது. காதலர்களுக்கு உதவுங்கள் என்று அழைக்கும் அந்த பகுதி காதலிகள் தங்கள் எதிர்பார்ப்பையும், மனதையும் தெரிவிக்க வழிகள் கூறப்பட்டுள்ளன.

# நட்பு - காதல்

## தேர்வு உங்கள் கையில்

**ஆண் தோழன்,** பெண் தோழி என்ற வித்தியாசங்களைக் கடந்து, நட்பு என்ற வட்டத்தின் எல்லை கடக்கத் தூண்டும் பதின்பருவத் தீண்டல்கள். விரும்பியவர்களிடத்தில் மனம் சில விதிகளை மீற விரும்பும். எதிர்ப்பாலின நட்பில் மட்டும் மனம் ஆயிரம் ஜாலம் காட்டும். நட்புக்கும் காதலுக்கும் எது எல்லைக் கோடு? எதைக் கடந்தால் காதல்? உறக்கம் தொலைக்கவைக்கும் உணர்வை, உறவை, உளவியலைப் பற்றிச் உளவியல் நிபுணர்கள் என்ன சொல்கின்றார்களெனில்,

பலருக்கு நட்பும் காதலும் பாலும் நீரும் போலக் கலந்திருப்பதால், குழப்பத்திலேயே திளைப்பார்கள். ஓரளவுக்கு நெருங்கிப் பழகிய பிறகு தெரியாத நபரையே, தெரிந்த நபரே நல்லது என்று பெண்கள் உணர்கிறார்கள். நன்றாகப் பழகும் நண்பர்களிடையே காதல் ஏற்படுவதற்கு காரணங்கள் நான்கு இருக்கின்றன. முதல் காரணம், நெருக்கம். மிக அருகருகே இருப்பதால், அடிக்கடி பார்ப்பதால், பேசுவதால் காதல் ஏற்படும்.

இரண்டாவது நிறம், நடை, உடை, பாவனை, பிடித்த விடயங்கள், கோட்பாடு, கொள்கை, சினிமா, வேலை என இருவருக்குமே ஒரே மாதிரியான கருத்து ஒத்திசைவால் ஏற்படும் காதல். பரஸ்பர உதவி, அக்கறை காரணமாக ஏற்படுவது. மூன்றாவது பிறந்த நாள் வாழ்த்து சொல்வது, பரிசுப் பொருள் வழங்குவது. உடல்நலம் இல்லாத சமயம் கவனித்துக்கொள்வது போன்றவற்றால் காதல் அரும்பலாம். நான்காவதாக, இரு பாலினத்தவரும் எதிர் பாலினத்தவர் மீது வைத்திருக்கும். உடல்ரீதியான கவர்ச்சி, அழகுணர்ச்சி ஆகிய காரணங்களால் காதல் ஏற்படுவதாக கூறப்படுகின்றது.

ஆண்களைப் பொறுத்தவரை பெரும்பாலானவர்கள் அழகாக இருக்கின்ற பெண்களைத்தான் காதலிப்பார்கள். ஆனால் பெண்கள் அப்படி அல்ல. பெண்கள், தன்மேல் அன்பாக, அக்கறையாக, மனம் குதூகலிக்கப் பேசுபவனாக, தனக்குப் பாதுகாப்பாக இவன் இருப்பான் என்று எந்த ஆணை நினைக்கிறார்களோ அவர்களைத்தான் காதலிப்பார்கள். அதாவது பெண்ணின் அழகைப் பார்த்தே ஆண்களுக்கு காதல் அரும்புகின்றது. ஆனால் பெண்களிடமோ ஆணின் அரவணைக்கும் குணமே காதலைத் தூண்டும் சக்தியாக இருக்கிறது.

ஆண் காதல் சொல்லி பெண் ஏற்கவில்லை எனில், மன்னித்துவிடு நண்பர்களாகப் பழகலாம் என்று சொல்லி மறுத்தாலும், அது அவன் அடிமனதில் வண்டல் மண் போலத் தேங்கி இருக்கும். அடுத்தடுத்து தொடர்ச்சியாகத் தன் காதலை சமயம் கிடைக்கும்போது எல்லாம் வெளிப்படுத்திக்கொண்டே இருப்பான்

இறுதி வரை ஆணின் எண்ணம் மாறாது. ஆண் - பெண் நட்பு கம்பி மேல் நடப்பதற்குச் சமம். அந்த நட்பில் அதிகம் பேசப் பேச நெருக்கம் அதிகமாகும். நட்பு, காதலாகும் என்ற உண்மையை, அதில் இருக்கும் நல்லது கெட்டதுகளை உணர்ந்து, இறுதிவரை நட்பாகவே இருக்கலாம். அல்லது அந்த நட்பு காதலாக உருமாறும் சமயம் அது உங்களுக்கு உண்மையாக, நம்பிக்கையான வாழ்நாள் துணையாக இருக்கும் என்று நீங்கள் நினைத்தால், மேற்கொண்டு தொடரலாம்! ஆதலினால், நட்பின் கணவாய் வழியே காதல் தேசம் புகுதல் சரி/தவறு. உங்கள் தேர்வு எது என்பது உங்கள் கையில்!



# கண்ணதாசனின் அர்த்தமுள்ள இந்துமதம்

பாகம் - 08

158



வசதியுள்ளவன், பிறரை ஏமாற்றாமல் இருப்பது பெருமையின் ஒரு கூறு.

நன்கு வாழும்போதே ஒருவன் யோகியாவது, உயர்ந்த நிலை.

விரக்தியுற்ற நிலையில் யோகியாவது, தாழ்ந்த நிலை.

'தமோ'வாக 'ரஜோ'வாக மாறி 'சத்வ' குணத்துக்குத் தள்ளப்படும் யோகத்தில் பெருமை இல்லை.

ரஜோ குணத்தையும், தமோ குணத்தையும் பார்த்துச் சிரித்தபடி யோக நிலையை எட்டுவதே தெய்வீகம.

இமயமலையிலும் அதன் அடிவாரங்களிலும் ஏராளமான சாதுக்கள் திரிகிறார்கள்.

பலர் ஏற்படுத்திய மிஷன் அமைப்புக்களில், பலவகையான சந்நியாசிகள் இருக்கிறார்கள்.

இவர்களில் மூன்று வகையினர் உண்டு.

ஒரு வகையினர், சிறுவயதிலேயே ஞானம் கைவரப்பெற்று அப்படியானவர்கள். இன்னொருவகையினர் குடும்பத்தினல் சிக்கிச் சீரழிந்து வந்தவர்கள்.

மூன்றாவது வகையினர், பிறப்பிலேயே ஆண் தன்மை இல்லாதவர்கள்.

இவர்களிலே ஞானிகள் உண்டு, துறவிகள் உண்டு, சந்நியாசிகள் உண்டு, ஆனால் யோகிகள் இல்லை.

'யோகி' என்பவன் சித்தத்தை மட்டும் அடக்கிப் பழகியவனல்ல, ஜகத்தையும் அடக்கி வெற்றி பெற்றவன்.

அவர்களுடைய திருஷ்டியில் மூன்று காலங்களும் தோன்றும்.

அவர்கள் தங்கள் கண்களால் எதைப் பார்த்தாலும் வசியமாகும்.

யோகிகளின் பார்வையில் புலி அடங்கும்.

மயில் ஆடும்.

மேகம் மழை பொழியும்.

அவனை நெருப்புச் சுடாது.

குளிர் அவனை அடக்காது.

மார்கழி மாதத்தில் சமவெளியில் நம்மால் உலவ முடியவில்லை.

அவர்கள் வெள்ளிப் பனிமலையில் உலாவுகிறார்கள்!

பனிக்கட்டிகள் மிதந்து வரும் நீரில் நீராடுகிறார்கள்!

கிடைக்கும் உணவை உண்கிறார்களா.

போகத்திற்கு அலைவதில்லை.

ரோகம் அவர்களைத் தீண்டுவதில்லை.

மருந்து மாத்திரைகளுக்கு அங்கே வேலை இல்லை.

நாம் எல்லோருமே அப்படி யோகிகளாக முடியுமா? முடியாது.

அப்படி ஆகத்தான் வேண்டுமா?

தேவை இல்லை. யோகியாக இல்லாமலேயே, யோகம் கைவரப் பெற்றவனாக லௌகிக வாழ்க்கையை ஒருவன் நடத்த முடியும்.

ஒருவன், மனைவியோடு வாழலாம், ஆனாலும் அவனைத் தீண்டாமலிருக்கவும் கற்றுக் கொள்ள வேண்டும்.

ஒருவனுக்கு நிறைய உணவு வசதிகள் இருக்கலாம். பசி எடுத்தாலும் அந்த உணவை உண்ணாமலிருக்கப் பழக்கிக்கொள்ள வேண்டும்.

இதுதான் இயக்கத்தில் இயங்காமை. இதுவே லௌகிக மனிதனுக்குத் தேவையான யோகம்.

பதவி என்றால் எல்லோருக்கும் ஆசைதான். ஆனால் நேரம் வரும்போது, அந்தப் பதவியைத் தூக்கியெறியும் திராணி எல்லோருக்கும் வந்துவிடுவதில்லை.

'நம்மை அது அடக்குவதா, அதை நாம் அடக்குவதா?' என்று வரும் போது, 'எதையும் நான் அடக்க முடியும்' என்ற நிலைக்கு வருவதே யோகம்.

அழகான பெண்ணொருத்தி தனிமையிலே காத்திருக்கிறாள், நமக்காக.

நமக்கோ இரத்தம் உடம்பில் துறுதுறுவென்று ஓடுகிறது. இந்த நிலையில் அந்தப் பெண்ணை வெறுக்கக் கற்றுக் கொள்வது யோகம்.

எது கிடைத்தாலும், 'எனக்கு, எனக்கு' என்ற ஓடுகிறவன் போகி.

பின்பு ஒரு நாள் அவன் ரோகி.

'எதையும் விடத்தான் உயர்ந்தவன்' எனக் கருதக் கூடியவன் யோகி.

வாரியார் சுவாமிகள் சொன்ன கதை ஒன்று, எனக்கு நினைவுக்கு வருகிறது.

ஒரு குறுகலான பாலம், நன்றாகக் குளித்துவிட்டு நெற்றியில் விபூதிப் பூச்சோடு அந்தப் பாலத்தில் வந்து கொண்டிருக்கிறது ஒரு யானை. எதிரிலே அசிங்கமாக வந்துகொண்டிருக்கிறது. ஒரு பன்றி, பன்றி, வாலை ஆட்டிக்கொண்டு கம்பீரமாக வருகின்ற வேகத்தில், சக்தி வாய்ந்த யானைக்குக் கோபம் வரவில்லை. அது ஒதுங்கி நின்று வழி விடுகிறது. பன்றிக்கோ தான் வெற்றி பெற்றுவிட்டதாக நினைவு. யானையே தனக்குப் பயந்துவிட்டதாக ஒரு கனவு. ஆனால், யானையினுடைய நினைவோ, 'பாவம் பன்றி! விட்டு விடுவோம்' என்பதாகும்.

தனனை உயரத்தில் வைத்துப் பார்க்கும் ஆணவம் இல்லாமல் யானை ஒதுங்கிற்று.

இன்னொரு யானைக் கதை.

ஒரு யானையின் மீது சவாரி செய்ய ஒரு அணில் விரும்பிற்று. 'சரி, முதுகில் ஏறிக்கொள்!' என்றது யானை. அணில் ஏறிக்கொண்டது.

யானை அதைச் சுமந்து செல்லும் போது யானையின் தலையில் ஒரு தென்னை மட்டை விழுந்தது.

யானை ஒரு பிளிறு பிளிறிற்று.

உடனே அணில் கேட்டது, "நான் முதுகில் இருக்கிறது வலிக்கிறதா?" என்று. யானைக்கு அணில் ஒரு சுமையா?

ஆனாலும் அணிலுக்கு அப்படி ஒரு நினைவு.

தாழ்ந்தவர்கள் தங்களை உயர்வாகக் கருதும் போது, உயர்ந்தவர்கள் சிரித்துதுக்கொண்டே ஒதுங்கிவிட வேண்டும்.

அதுவும் யோகம் தான்.

'என்னைவிட நீ உயர்வா?" என்று சண்டைக்குப் போகக் கூடாது.

'உலகத்தில் கடவுள் தனக்கு அடுத்தபடியாக நம்மை வைத்திருக்கிறான்" என்று கருதி, அந்தத் தெய்வீக நிலையை எட்டிவிடுகிறவனே யோகி.

'பட்டதெல்லாம் போதுமடா பகவனே' என்ற பட்டினத்தார் யோகம் அனுபவ யோகம்.

**தொடர்ச்சி அடுத்த வாரம்...**

# அடைமழையால் முடக்கப்பட்டிருக்கும் வாழ்வாதாரம்



கிருபா-ஜனோ

அடை மழையாலும் வெள்ளத்தாலும் பாதிக்கப்பட்ட மக்கள் இப்பொழுதுதான் சொந்த இடங்களுக்குத் திரும்பிக் கொண்டிருக்கிறார்கள். இந்நிலையில் திரும்பவும் கடும் மழை பெய்யத் தொடங்கியிருப்பது மக்கள் மத்தியில் பெரும் பாதிப்பையும் அதிருப்தியையும் ஏற்படுத்தியுள்ளது.

நாடு பூராகவும் 13 இலட்சம் மக்கள் பாதிக்கப்பட்டுள்ளதோடு 2 இலட்சத்து 50 ஆயிரம் மக்கள் மீண்டும் தமது சொந்த இடங்களிலிருந்து வெளியேறி 700 தற்காலிக முகாம்களிலும் உறவினர் வீடுகளிலும் தங்கியுள்ளார்கள். பதினோராயிரம் வீடுகள் சேதமடைந்துள்ளன. மக்களின் வாழ்விடங்களை விட்டு வெளியேற்றிய வெள்ளம் அவர்களின் நிம்மதியைச் சீர்குலைத்ததோடு ஜீவனோபாயத்தையும் கேள்விக்குள்ளாக்கியிருக்கிறது.

நம் நாட்டு மக்களின் வாழ்வாதாரம் பிரதானமாக விவசாயத்தையும் மீன்பிடியையும்தான் நம்பியுள்ளது. சேனைப்பயிர், கால்நடைகள் மற்றும் குடிசைக் கைத்தொழில்கள் உள்ளடங்கலாக இவர்களது ஜீவனோபாயம் காணப்படுகிறது. கடந்த மாதம் நிலவிய தொடரும் சீரற்ற காலநிலை காரணமாக நாளாந்த ஜீவியம் மிகமோசமாகப் பாதிக்கப்பட்டுள்ளது.

குறிப்பாக மட்டக்களப்பு மாவட்டத்தில் மாத்திரம் சுமார் ஒரு இலட்சம் நெல் வயல்கள் கரை புரண்டோடும் காட்டாற்று வெள்ளத்தினால் அடித்துச் செல்லப்பட்டுள்ளன. கடந்த வெள்ளத்தின் போது பகுதியளவில் சேதமாகி காப்பாற்றப்பட்ட வயல்நிலங்களும் இம்முறை வெள்ளத்தில் அள்ளுண்டு போயுள்ளன. அறுவடைக்குத் தயாராகவிருந்த நெல்வயல்கள் கிழித்துக்கொண்டு ஓடும் தண்ணி அடித்துச் செல்லப்படுவது நெஞ்சை நெகிழவைக்கிறது.

இந்நிலை எதிர்காலத்தில் நெல்லின் விலையில் அதிகரிப்பை ஏற்படுத்தும் என்ற ஐயத்தினையும் ஏற்படுத்தியிருக்கிறது. இலங்கையின் நெல் உற்பத்தியில் பாரிய பங்கினை கிழக்கு மாகாணம் வகிக்கிறது. இம்முறை பெரும்பாலான விளைநிலங்கள் வெள்ளத்தில் மூழ்கியிருப்பதால் இந்த பங்கை இழக்கும் நிலையும் ஏற்பட்டுள்ளது.

இதனால் அரிசியின் விலையில் ஏற்படப்போகும் மாற்றங்களை எதிர் பார்த்துள்ளார்கள், சாதாரண மக்கள் உட்பட விவசாயிகளும் முதலீட்டாளர்களும்.

விவசாயக் குடும்பங்களின் நிலை இவ்வாறிருக்க, தினமும் கூலி வேலைக்குச் சென்று தமது வயிற்றைக் கழுவும் அன்றாடங் காய்ச்சிகள் பட்டினியால் வாடி அல்லோலகல்லோலப்பட்டுப்போய் என்ன செய்வது என்று புரியாதவர்களாய் திகைத்துப்போய் நிற்கிறார்கள் இந்த பேசும் ஊமைகள்.

கடைத்தெருக்களும் வியாபார நிலையங்களும் வெறிச்சோடிப்போய் காணப்படுகின்றன. மட்டக்களப்பு சந்தைக்கட்டிட தொகுதியில் அமைந்திருக்கும் பல கடைகள் வெள்ளத்தில் நாசமாகி உள்ளன. இதுவரைக்கும் பாதிக்கப்பட்ட வியாபாரிகளுக்கு எந்தவித உதவிகளோ நஷ்டஈடோ கிடைக்கவில்லை என்றும் அவர்கள் விசனம் தெரிவிக்கிறார்கள்.

இதுபோன்றே மீன்பிடியை நம்பி வாழும் குடும்பங்களின் நிலை இவ்வாறு கழிகிறது. கடலில் ஏற்பட்டுள்ள தாழமுக்கம் காரணமாக மீனவர்கள் கடலுக்குச் செல்ல வேண்டாம் என்று அறிவுறுத்தப்பட்டிருக்கிறார்கள். இந்நிலையில் மீனவர்களுக்கு கைகொடுத்திருப்பது உள்ளூர் வாவிகளும் ஆறுகளும்தான்.

ஆறுகளையும் குளங்களையும் நம்பி வாழும் குடும்பங்கள் ஏராளம். மட்டக்களப்பு கல்லடியில் வசிக்கும் சிசுந்தரலிங்கம் என்கின்ற மீனவரும் இந்த ஆற்றில் பிடிக்கும் மீன்களை விற்று பெறும் வருமானத்தில் தனது குடும்பத்தைக் காப்பாற்றுபவராவார்.

கல்லடி முகத்துவாரம். இந்த முகத்துவாரத்தினூடாகத்தான் ஆற்றுநீர் கடலுடன் சேர்கிறது. குளத்து மீன்கள் இச்சந்தர்ப்பத்தில் கடலுடன் கலக்கின்றன. இத்தருணம் மீனவர்களுக்கு வேட்டைதான். இங்கு மீன் பிடித்துக்கொண்டிருந்த மீனவரான சுந்தரலிங்கத்தை என்னால் சந்திக்க முடிந்தது.

"என்ன அண்ண மீன் பிடிபடுதா" என்று பேச்சுக்கொடுத்தேன்.

"என்ன பிள்ள கனநாளைக்குப் பிறகு இன்றுதான் கொஞ்ச மீன் பட்டிருக்கு. ச்ச.. முன்னரெல்லாம் ஒவ்வொரு நாளும் அதிகாலை நான்கு மணிக்கு ஆற்றுக்கு மீன்வீச போயிடுவன். மதியம் வீட்டுக்கு வந்து சாப்பிட்டு விட்டு மீண்டும் ஆற்றுக்குப் போய் பின்நேரம் வீடு திரும்பி மறுபடியும் ஆற்றுக்குப் போவதாகவும் கூறும் சுந்தரலிங்கம், ஒவ்வொருநாளும் சுமார் மூவாயிரம் வரை சம்பாதிப்பதாகவும் பெருமைப் பட்டுக்கொள்கிறார். கதைத்துக் கொண்டிருந்தவரின் குரலில் சோர்வை உணரமுடிந்தது.

"இப்ப என்ன, வெளியிலையும் போக முடியாதளவுக்கு மழை பெய்யுது. ஆத்திலையும் தண்ணி கூடிற்று. வீசிறது கஷ்டம். அப்படிப் போனாலும் தோணியில போய்த்தான் வீசனும். அதுவும் ஆபத்தான நிலை. பகலில் மட்டும் போய் ஒரு பாடு பார்த்துவிட்டு வீடு திரும்புறதான் என்று சலித்துக் கொண்ட அவர், இரண்டு கிழமைக்குப் பின்னர் இன்றைக்குத்தான் கொஞ்சம் மீன் பிடிச்சிருக்கன் என்று சற்று நிம்மதிப் பெருமூச்சுவிட்டார்.

சுந்தரலிங்கம் போன்ற ஏராளமான மீனவர்களின் வாழ்க்கை இவ்வாறுதான் கழிகிறது. எப்போது இந்த வானம் வெளிக்கும் என்ற எதிர்பார்ப்புடனும் ஏக்கத்துடனும் காத்துக்கொண்டிருக்கிறார்கள் இவர் போன்ற ஏராளமான மீனவக்குடும்பங்கள்.

இவ்வாறு மோசமாகப் பாதிக்கப் பட்டுப்போயுள்ள வாழ்வாதாரம் தொடர்பாக, மட்டக்களப்பு மாவட்ட இடர் முகாமைத்துவ நிலையத்தின் இணைப்பதிகாரி முஹமட் கசீரிடம் தொடர்பு கொண்டு கேட்ட போது, "மட்டக்களப்பு மாவட்டத்தின் வாழ்வாதாரம் நூற்றுக்கு எழுபத்தைந்து வீதம் நேரடியாகவும் மறை முகமாகவும் பாதித்துள்ளது. நெல்வயல்கள், சேனைப்பயிர்கள், கால்நடைகள், மீன்பிடியாளர்கள், மருந்துப்பொருள் விற்பனையாளர்கள், மில்லுக்காரர்கள் மற்றும் முதலீட்டாளர்கள் என்று அனைவரும் பலத்த நஷ்டத்துக்கு உள்ளாகியிருக்கிறார்கள்.

போருக்குப் பின்னர் ஓரளவு மீட்சி பெற்ற மக்கள் மீண்டும் பலத்த அடியினைச் சந்தித்துள்ளார்கள். இடர்முகாமைத்துவ நிலையத்தினூடாக பாதிக்கப்பட்டவர்களின் கணக்கெடுப்புகள் சேகரிக்கப்பட்டு அமைச்சுக்கு வழங்கப்பட்டுள்ளது. அவர்களை உடனடியாக இத்தாக்கத்திலிருந்து மீட்டெடுப்பதற்காக பன்னிரெண்டு கோடி ஐம்பத்தைந்து இலட்சம் ரூபாவை இடர் முகாமைத்துவ அமைச்சு ஒதுக்கீடு செய்துள்ளது. பாதிக்கப்பட்டுள்ள மக்களுக்கான உதவிகளும் நஷ்டஈடுகளும் காலக்கிரமத்தில் அவர்களுக்கு கிடைக்கும் எனவும் கசீர் அவர்கள் நம்பிக்கை வெளியிட்டார்.

மேலும் அவர் தெரிவிக்கையில், அபிவிருத்தி நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் போது அபிவிருத்தியின் பங்காளர்களிடையே ஒழுங்கான கூட்டிணைப்பு இல்லாமையினாலேயே இடர்கள் ஏற்படுமிடத்து உட்கட்டமைப்புகள் உடனடிப் பாதிப்புக்கு உள்ளாகின்றன. இதனைத் தவிர்க்கவும் நீடித்து நிலைத்து நிற்கவும் இடர்முகாமைத்துவ நிலையத்துடன் கூட்டிணைப்பை ஏற்படுத்தி நிலைத்து நிற்கும் அபிவிருத்திக்கு வழிகோலுமாறும் வேண்டுகோள் விடுக்கிறார்.

பாதிக்கப்பட்டுள்ள வாழ்வாதாரத்தை மீளக்கட்டியெழுப்பவும் அதனைச் சீர்செய்வதற்குமான உடனடித் தேவைகளையறிந்து அதிகாரிகள் மெத்தனப்போக்கை கடைப்பிடிக்காது விரைந்து செயற்பட்டு நாட்டின் அபிவிருத்திக்கும் பாதிக்கப்பட்டுள்ள சமூகத்தின் எழுச்சிக்கும் உடனடி நடவடிக்கைகளை எடுக்கவேண்டும் என்பதே அனைவரதும் எதிர்பார்ப்பாக உள்ளது.

o

# பெருவெள்ளம் விட்டுச் சென்ற துயரம் வற்றவில்லை !

(ஏ.எச்.ஏ. ஹுஸைன்)

**இந்த வருடத்தின்** பெப்ரவரி 10ஆம் திகதி கிழக்கு மாகாண மக்களுக்கு மறக்க முடியாத நாளாக நினைவில் நிறைந்துவிட்டதில் ஆச்சரியப்பட எதுவுமில்லை. அது இயற்கை இடருக்குள் சிக்குண்டு துயரத்தால் வாடிய மக்களுக்கு துணிவூட்டிய நன்நாளாகப் பார்க்கப்படுகிறது.

கடந்த இரண்டு மாதங்களுக்கு மேலாக அஞ்சிப்பயந்து நடுங்கி வீட்டுக்குள்ளே அடைபட்டுக்கிடந்த மக்கள் தெருவுக்கு வந்து வானத்தைப் பார்த்து மகிழ்ச்சி தெரிவித்த நாள் தான் அது. சாதி சமய வேறுபாடுகளுக்கப்பாற்பட்ட திருநாளாகவும் கொண்டாட்டமாகவும் பெப்ரவரி 10ஆம் நாளை மக்கள் வரவேற்றதில் அர்த்தம் இருக்கிறது.

'எதுவுமே வேண்டாம் கிழக்கு வானம் வெளுத்தால் போதும்' என்று ஏங்கிய மக்களின் அவலக்குரல்களைக் கேட்டு இயற்கை இரங்கிவிட்டது என்றே எல்லோரும் நிம்மதிப் பெருமூச்சு விடுகிறார்கள்.

இரண்டு மாதங்களாக இருண்டு கிடந்த கிழக்கு வானம் இப்பொழுது கதிரவனின் ஒளியால் பிரகாசிக்கிறது. அடர்ந்திருந்த காரிருள் அகன்றுவிட்டது. இரவில் தெளிவான வானத்தினூடே நிலா எறிப்பதைக் காணமுடிகிறது. நட்சத்திரங்கள் கண் சிமிட்டுகின்றன. இயற்கை இரங்கிவிட்டதால் அஞ்சிப் பயந்து நடுங்கி அடைபட்டுக்கிடந்த மக்களின் மனங்களிலும் துயரச் சுமை நீங்கி மகிழ்ச்சி நிலவுகிறது.

காலைக் கதிரவனின் ஒளியால் கிழக்கு செக்கச் சிவந்திருப்பதைக் காணத் துடித்த கிழக்கு மக்கள் இப்பொழுது அதனைக் கண்டுணர்கிறார்கள்.

அடைமழையும் அதனால் பலதடவைகள் ( மட்டக்களப்பு மாவட்டம் டிசெம்பர் மாதத்திலிருந்து பெப்ரவரி 10ஆம் திகதி வரை ஐந்து வெள்ளப்பெருக்குகளுக்கு முகம் கொடுத்திருக்கிறது. இவற்றில் கடைசியாக பெப்ரவரி 03 ஆம் திகதி ஏற்பட்டது. கடந்த நூறு வருடங்களில் ஏற்பட்ட பெருவெள்ளமாக குறிப்பில் தடம் பதித்துச் சென்றுள்ளது.) ஏற்பட்ட வெள்ளப்பெருக்குகளும் எல்லோருக்கும் ஏதோ ஒருவகையில் பாதிப்பை ஏற்படுத்தி விட்டுத்தான் சென்றுள்ளது.

அடைமழையும் பெருவெள்ளமும் ஏற்படுத்திய தடயங்கள் நாளாந்த ஜீவனோபாயம், விவசாயம், மீன்பிடி, வியாபாரம், கால்நடை வளர்ப்பு என்று உயிர் உடைமை அழிவுகளாகவும் உள்ளக் குமுறல்களாகவும் ஓங்கி ஒலிக்கின்றன.

பத்து வயதுடைய சிறுவன் முஹம்மது சுஹைப் பெருவெள்ளத்தினால் பரிதாபகரமாக அடித்துச் செல்லப்பட்ட துயரக் கதையைக் கண்ணீர் மல்கக் கூறினார் அவனது தாய் ஜெமீலா உம்மா. டிசெம்பர் 14ஆம் திகதியிலிருந்து பெய்யத்துவங்கிய அடைமழை ஜனவரி 13ஆம் திகதி ஓய்வு கண்டது. ஒரு மாதத்திற்குப் பின்னர் அன்றைய தினம்தான் கிழக்கு மக்கள் முதன்முறையாக சூரியக்கதிர்களைக் கண்டு வீட்டுக்கு வெளியே வந்தார்கள்.

ஒரு மாதகாலமாக வீட்டுக்குள் அடைபட்டுக் கிடந்த சுஹைப்பும் விளையாட ஆசைப்பட்டு தெருவுக்குச் சென்றிருக்கிறான். அன்றைய தினம் வெயில் எறித்தாலும் வெள்ளப்பெருக்கு வற்றியிருக்கவில்லை. மெது மெதுவாக வெள்ளநீருக்குள் இறங்க ஆரம்பித்தவனின் செருப்புக்கள் நீரில் அடித்துச் செல்லப்பட, அதனை எட்டிப்பிடிக்க முயற்சித்தவன் பாய்ந்து சென்ற வெள்ளப்பெருக்கிற்குப் பலியாகியிருக்கிறான்.

மறுநாள் காலைதான் கடற்படையினரால் இறந்த உடல் கண்டு பிடித்துக் கொடுக்கப்பட்டது.

இப்பொழுதும் தனது மகன் அணிந்த சப்பாத்து, பள்ளிச்சீருடை, கொப்பி புத்தகங்கள், அவன் வரைந்த சித்திரங்கள் என்பனவற்றை கையில் வைத்துக் கொண்டு கதறியழுகிறார் ஏறாவூரைச் சேர்ந்த ஜெமீலா உம்மா.

ஏறாவூர் வாவி கரையே தெரியாமல் பொங்கிப் பிரவாகித்தபோது கரையோரப் பகுதியிலிருந்த ஏறாவூர்ப் பிரதேச செயலகம் உட்பட வீடுகள், தொழிலிடங்கள் எல்லாமே வெள்ள நீருக்குள் அமிழ்ந்துபோயின.

வாவியோரம் இருந்த அரிசி ஆலைகள் முற்றாகப் பாதிக்கப்பட்டுள்ளன. அந்த அரிசி ஆலை ஒன்றின் உரிமையாளருக்குச் சுமார் 25 இலட்சம் ரூபா நஷ்டம் ஏற்பட்டுள்ளதாகக் கூறப்படுகிறது. அவரது அரிசி ஆலைக்குள் சுமார் 10 அடி உயரத்திற்கு மேலாகப் பரவிய பெருவெள்ளம் அங்கு களத்தில் போடப்பட்டிருந்த 350 மூடை நெல்லையும் 150 மூடை அரிசியையும் கழுவிச் சென்றிருக்கிறது.

கடந்து சென்ற வெள்ளம் எல்லோரையும் ஏதோ ஒருவகையில் பாதிப்புக்கு உள்ளாக்கியிருந்தாலும் விவசாயிகளுக்கு அது ஏற்படுத்திய தாக்கம் இலகுவில் ஈடுசெய்ய முடியாத ஒன்றாகவே கருதப்படுகிறது. விவசாயிகள் செய்கை பண்ணிய நெற்காணி நீரினால் அடித்துச் செல்லப்பட்டுள்ளதோடு நெல் வயல்கள் ஆற்று மணலால் மூடப்பட்டுள்ளது.

நகைகளை அடைவு வைத்து, வானம் பார்த்த பூமியை நம்பிச்செய்த விவசாயம் அடிபட்டுப் போனதால் இதிலிருந்து மீள்வதற்கு முடியாமல் பலர் திண்டாடுவதையும் அவதானிக்கக் கூடியதாக இருக்கின்றது.

மட்டக்களப்பு மாவட்டத்தில் சுமார் தொண்ணூறு விகிதத்திற்கு மேற்பட்ட செய்கை பண்ணப்பட்டு அறுவடைக்குத்தயாராகவிருந்த விவசாய நிலங்கள் முற்றுமுழுதாக அழிவடைந்து விட்டன.

இந்த விவசாய இழப்புக்களிலிருந்து மீள முடியாது என அவர்கள் கருதியதால் மட்டக்களப்பில் சில விவசாயிகள் தற்கொலை செய்திருப்பதான தகவல்களும் வெளியாகியுள்ளன.

விவசாயப் பாதிப்பு இப்படியென்றால் அதனோடு இணைந்ததாக உள்ள பண்ணை வளர்ப்பும் வெகுவாகப் பாதிக்கப்பட்டிருக்கிறது. இதனைவிட கால்நடைகளும் பெருமளவில் உயிரிழந்துள்ளன. குறிப்பாக ஊத்துச்சேனை என்கின்ற இடத்தில் மேய்ச்சலுக்குச் சென்ற அவரது மாடுகளில் 45 கால்நடைகள் காட்டாற்று வெள்ளத்தில் அடித்துச் செல்லப்பட்டுள்ளன. செத்து மிதந்த அந்த மாடுகளின் பெறுமதி சுமார் 12 இலட்சம் ரூபாவாக மதிப்பிடப் பட்டுள்ளது.

மாவடி ஓடை எனும் மேய்ச்சல் பகுதியில் வளர்க்கப்பட்ட நூற்றி எழுபது ஆடுகளில் நடுங்கும் குளிரிலும் மடை திறந்த வெள்ளத்திலும் அகப்பட்டு 40 ஆடுகள் மாண்டுபோயுள்ளன.

(தொடர்ச்சி 22ஆம் பக்கம்)

# மௌனித்துக் கிடக்கும் மலையகத்துக்குள் மறைந்திருப்பவை

மௌனித்துள்ள மலையகத்தில் இடம்பெறும் சம்பவங்கள் வெறும் செய்திகளாகவே வெளியாகிக் கொண்டிருக்கின்றன. ஆனால் அங்குள்ள மக்களுக்கு ஏற்பட்டுள்ள நிலைமை, அங்குள்ள மக்கள் எதிர்கொள்ளும் இன்னல்கள், அவர்களின் சவால்கள் என்பன இலங்கையின் உள்ளூர் மட்டத்தில் கூட உரிய கவனத்தை ஈர்க்கவில்லை. இதன்காரணமாக அந்த மக்கள் மீது இலங்கையின் அரசாங்கங்கள் கூட உரிய செல்வாக்கை செலுத்த தவறிவருகின்றன. இதற்கு அந்த மக்களின் தலைமைகளில் உள்ள தவறுகள் அல்லது குறைபாடுகள் என்பதைகாட்டிலும் அந்த மக்களின் அறியாமையும் முக்கிய இடத்தை வகிக்கிறது. மலையகம் எனும் அங்கு பிரதான நகரில் வசிக்கும் மக்களும் அவர்களை

அல்லது, துரை எனப்படும் தோட்டமுகாமையாளருக்கு தேவைப்பட்டவர்களாக இருந்தனர். அவர்களுக்கு ஏனையவர்களை காட்டிலும் அதிக வீட்டு வசதிகளையும், தோட்ட முகாமைகள் வழங்கி வந்தன. எனவே இந்த பெரிய கங்காணிமார் தமக்கு கீழ் தொழிலாளர் கூட்டம் ஒன்றை வைத்துக்கொண்டு அவர்களை தோட்ட முகாமைகளுக்கு ஆதரவாக செயற்படுவதில் ஈடுபடுத்தி வந்தனர். அத்துடன் இந்த கங்காணிமார், மனித உரிமைகளை மீறுபவர்களாகவும் செயற்பட்டு வந்தனர். குறித்த கங்காணிமார், தமக்குச் சாதமாக நடந்துக்கொள்ளும் தொழிலாளர்களுக்கு விசேட அதாவது இலகுவான பணிகளை வழங்கி ஏனையவர்களுக்கு கடுமையான பணிகளை வழங்கிவந்தனர்.

தோட்டத்தொழிலாளர்களுக்கு தேவையான அனைத்து அத்தியாவசிய பொருட்களும் அங்குகிடைக்கும் வகையில், வசதிகள் செய்து கொடுக்கப்பட்டன. இதன் காரணமாக அந்த மக்கள் வெளியுலகமே தெரியாதவகையில் வாழ்க்கையை நடத்தி வந்தனர். இந்தநிலை, இலங்கை சுதந்திரம் அடைந்ததன் பின்னரும் மாற்றம் பெறவில்லை என்பதே இன்றும் கவலைக்குரிய செய்தியாகும். காலத்தின் மாற்றங்களுக்கு ஏற்ற வகையில் இலங்கை பொதுமக்களின் வாழ்க்கைத் தரம் மாறுபட்டபோதும் இன்றும் அந்த தொழிலாளர்கள், பாரிய மாற்றங்களுக்குள் உள்வாங்கப்படவில்லை. இதற்கு மலையகத்தின் அரசியல்வாதிகளும் காரணம் என குறிப்பிடவேண்டும். ஏனெனில், சுதந்திரத்துக்கு பின்னர், மக்கள் தமது பிரதிநிதிகளை தெரிவுசெய்து வருகின்றனர்.

கூறவேண்டும். அவர்கள், தமது மக்களுக்கு உண்மையான சுதந்திரத்தை மனித உரிமைகளை பெற்றுக்கொடுப்பதை காட்டிலும் அவர்களுக்கு தீங்கையே விளைவித்துள்ளார்கள் என்ற குற்றச்சாட்டு சுமத்தப்படுகிறது. ஏனைய மக்களைக் காட்டிலும் சுதந்திரக் காற்றை அனுபவித்திராத மலையக மக்களுக்குச் சுதந்திரம் தொடர்பில், கற்றுக்கொடுக்க வேண்டிய பொறுப்புக்களை கொண்டிருந்தபோதும் அதனை அவை நிறைவேற்றவில்லை. இதற்கு ஒரு காரணம் ஏனைய சமூகங்களை போல மலையகத்தில் 'பிரஷர் குரூப்' எனப்படும் அழுத்தக் குழுக்கள் இல்லாமையாகும். மலையகத்தில் கல்விகற்ற சமூகம் குறைந்த அளவில் இருந்தமையால், அந்தச் சமூகத்தினால், தமது தலைமைகளுக்கு அழுத்தங்களை பிரயோகிக்க முடியவில்லை. இதன் காரணமாக இன்றும் அந்த மக்கள் பிரித்தானியர்களின் காலத்தில் இருந்ததைப் போன்று, இன்றும் அடிமை சமூகமாக வாழ்ந்து வருகின்றனர். இலங்கையில் ஏனைய சமூகக் கட்டமைப்பில் இல்லாதவகையில் இரண்டு வருடங்களுக்கு

சமூகங்களால், மாற்றாந்தாய் மனப்பான்மையுடன் பார்க்கப்படுகின்றனர். புறக்கணிக்கப்படுகின்றனர். கட்டாயக்கல்வி இலங்கையில் அறிமுகப்படுத்தப்பட்டுள்ள போதும் கல்விக்கூடங்களுக்குச் செல்லவேண்டிய மலையகச் சிறுவர்கள் கொழும்பிலும் ஏனைய பகுதிகளிலும் வீடுகளிலும் வியாபாரத்தளங்களிலும் பணிகளுக்கு அமர்த்தப் பட்டுள்ளனர். எனினும் தற்போது மலையகத்தில் கல்வி நிலை உயர்ந்துவருகிறது. மக்கள் மத்தியில் அரசியல் எண்ணக்கருக்களில் மாற்றங்கள் ஏற்பட்டு வருகின்றன. இதனை மலையகத்தின் அண்மைக்கால அரசியல் மாற்றங்கள், மக்கள் மத்தியில் ஏற்பட்டுள்ள மாற்றங்கள் என்பன உணர்த்தி நிற்கின்றன. எனினும் இன்னும் மலையகத்தில் அழுத்தக் குழுக்கள் ஏற்படுத்தப்படவில்லை. இதற்கான காரணம் நாட்டில் இதுவரை இருந்த பயங்கரமான சூழ்நிலையாக இருந்திருக்கலாம். அந்த சூழ்நிலையில் தற்போது மாற்றம் ஏற்பட்டுள்ளது. எனவே மலையகத்தில் மாற்றங்களை ஏற்படுத்த அழுத்தக்குழுக்கள் உருவாக வேண்டியது அவசியமாகும். அதுவே

சுற்றிப்பெருமளவில் வசிக்கும் பெருந்தோட்ட தொழிலாளர்களும் அடங்குகின்றனர். 1800 ஆம் ஆண்டுகளின் பிற்பகுதியில் இலங்கையின் தேயிலைத் தோட்டங்களுக்கு தொழில் செய்வதற்காக அழைத்து வரப்பட்ட தமிழர்கள், இலங்கையில் தேயிலைப்பயிர்ச்செய்கை பயிரிடப்பட்ட இடங்களில் குடியேற்றப்பட்டனர். அந்தநேரத்தில் அவர்களுக்கு பாதுகாப்பு அச்சுறுத்தல்கள் எவையும் இருக்கவில்லை. எனினும் அவர்கள் ஒரே இடத்தில் லய்ன் என்ற வரிசைக்குடியிருப்புகளில் குடியமர்த்தப்பட்டனர். இதற்கு காரணம் அவர்கள் மத்தியில் ஒற்றுமை ஏற்படவேண்டும் என்பதற்காகவல்ல. ஒன்றாக இருக்கும் போது அவர்கள் மத்தியில் பிரச்சினைகள் ஏற்படும். எனவே அவர்கள் மத்தியில் ஒற்றுமை இருக்காது. இதன் காரணமாக, அவர்கள் தொழில்தருவோருக்கு எதிராகப் போராட்டங்களை நடத்தமாட்டார்கள். அவ்வாறு போராட்டங்களை நடத்துவதற்கு முனைப்புகள் மேற்கொள்ளப்பட்டாலும், ஒருவருக்கு ஒருவர் காட்டிக்கொடுக்கும் வகையில், தொழிலாளர்கள் மத்தியில் பிரித்தானியர்களால், பிரித்து வைத்து நிர்வகிக்கப்பட்டனர். அத்துடன் சாதிப்பாகுபாடுகள் ஊக்குவிக்கப்பட்டன. பெரியங்கங்காணி என்ற முறை ஏற்படுத்தப்பட்டு அவர்களே தொழில்தருநர்

அத்துடன், தமக்கு கட்டுப்படாதவர்களுக்கு இந்த கங்காணிமார், பணிகளை நிறுத்துவது உட்பட்ட கடுமையான தண்டனைகளையும் தோட்ட முகாமைகளுடன் இணைந்து மேற்கொண்டு வந்தனர். தோட்டத்துரை அல்லது தோட்ட முகாமையாளர் என்பவர், தொழிலாளர்களின் பணிகளை நிர்வகிப்பது மட்டுமல்லாமல், அவர்களின் கல்வி செயற்பாடுகளிலும் தலையிடுபவராக இருந்தார். பாடசாலை நாட்களை நிர்வகிப்பது, ஆசிரியர்களை நியமிப்பது உட்பட்ட விடயங்களில்கூட ஆரம்பத்தில், தோட்ட முகாமையாளர்களாக விளங்கிய, தோட்டத் துரைமார் அதிகாரம் கொண்டிருந்தனர். தோட்டத்தொழிலாளர்கள், தமது உணவுத்தேவை மற்றும் ஏனைய தேவைகளுக்காக நகர்ப்புறங்களுக்கு சென்று வந்தால் அவர்களுக்கு புரிந்துணர்வு ஏற்படும் என்றகாரணத்தினால் அந்த மக்களுக்காக, அவர்களின் தோட்டங்களிலேயே கூட்டுறவு கடைகள் அமைக்கப்பட்டன.

அமலன்

இந்த தெரிவின் மூலம் அவர்கள், தமது அபிலாசைகளை தேவைகளை இந்த அரசியல்வாதிகளின் ஊடாகவே பெற்றுக்கொள்ள முனைகின்றனர். எனினும் அதனை மலையக தலைமைகள் உரியமுறையில் நிறைவேற்றவில்லை என்றகுற்றச்சாட்டு சுமத்தப்படுகிறது. பிரித்தானியர்களின் ஆட்சியில் இருந்து விடுபட்ட மக்களுக்கு உரிய சுதந்திரத்தை காட்டவேண்டியதே இலங்கை நாட்டு அரசியல்வாதிகளின் கடமைகளாக இருக்கின்றன. எனினும், அதனை அரசியல்வாதிகள் உரியமுறையில் இதுவரை செயற்படுத்தவில்லை. அதிலும், மலையக அரசியல்வாதிகள் இந்த விடயத்தில், உண்மையாக செயற்படவில்லை என்றே

## புதிய கோணம் புதிய பார்வை

ஒருமுறையே அவர்களின் சம்பளங்கள் நிர்ணயிக்கப்படுகின்றன. தோட்டத்தொழிலாளர்கள் இன்றும் ஏனைய

மலையக மக்களுக்கு குறிப்பாக பெருந்தோட்ட மக்களுக்கு நன்மையை பயக்கக்கூடியதாக இருக்கும்.



# அவலம் சுமந்த அகதிகள்

அத்திமுகத்தோன் — அவலம் 18

**ஐயா** அழுவதைக் கண்டதும் பிள்ளைகள் இருவரும் திகைத்துப் போய்விட்டார்கள்.

"பொடியன் காயப்பட்டுப் போனானாம் பிள்ளை. ஆஸ்பத்திரியில வைச்சிருக்கினமாம்..." ஐயா அழுதுகொண்டே கூறினார்.

ஐயா அழுவதைக் கண்டதும் பிள்ளைகள் இருவரும் கண்கலங்கத் தொடங்கினர்.

"அவனுக்குச் சும்மா ஒரு சின்னக் காயம்தான் ஐயா. பயப்படுகிற அளவுக்கு ஒண்டுமில்லை..." அக்காள் அவரின் மன ஆறுதலுக்காய் அப்படிக் கூறினாலும், மனதுள் அவள் பயந்தே போயிருந்தாள்.

"நீ.. அழாதை ஐயா.. நாங்கள் தம்பியைப் போய்ப்பார்த்திட்டு வாறம். மத்தியானம் சாப்பிட்டியளே..." தங்கை கேட்டாள்.

"ஓம்.. அவள் சின்னவள் கொண்டு வந்து தந்தவள்..."

"அம்மா எங்கை ஆஸ்பத்திரியிலையே...?"

"ஓம்..."

"அப்ப நாங்கள் போய்ப் பார்த்திட்டு வாறம்..." இருவரும் கூறிவிட்டு கொட்டிலை விட்டு வெளியே வந்தார்கள். தெருவோரப் படலையடியில் ஐயாவின் மைத்துனர் இவர்களின் வரவை எதிர்பார்த்தபடி நின்றார்.

"எங்கை ஆஸ்பத்திரிக்கே போறியள்...?" அவர் கேட்டார்.

"ஓமோம்... தம்பிக்கு எப்படிக் கிடக்குது. போய்ப்பார்த்தனிங்களே...? அக்கா கேட்டாள்.

"ஓ... போய்ப் பார்த்தனான்..." அவர் கூறிய விதம் அவர்கள் இருவருக்கும் பயத்தையும், சந்தேகத்தையும் உண்டுபண்ணிவிட்டது.

"சரி நாங்கள் போய்பார்த்திட்டு வாறம்..." என்று கூறியபடி படலைத்தட்டியைத் திறந்துகொண்டு வெளியேறினார்கள்.

புழுதி நிறைந்த கப்பல் றோட்டு சனமிகுதியாக இருந்தது. இரு பக்கங்களிலும் வாகனங்கள் வரிசையாக நின்றிருந்தன. எதிரே மிதிவண்டிகளிலும், லாண்ட் மாஸ்ரர், உழவு இயந்திரங்களிலும் மக்கள் மூட்டை முடிச்சுக்களோடு வந்துகொண்டிருந்தனர். இவைகளை விலக்கிக்கொண்டு மாத்தளன் பிரதான பாதைக்குப் போவதென்பது சகோதரிகள் இருவருக்கும் சிரமமானதாக இருந்தது. மிதிவண்டிகளை உருட்டியபடி... ஏற்படும் இடைவெளிகளூடாக நுழைந்து ஒருவாறாக பிரதான பாதைக்கு வந்தபோது எதிரே சனம் குழுமி நிற்பதையும், இரண்டு பெண்கள் தரையில் உட்கார்ந்தபடி ஒருவரை ஒருவர் கட்டிப்பிடித்தபடி... குளறி அழுவதையும் அவர்களால் காணமுடிந்தது.

"என்னடியக்கா... சனம் குவிஞ்சு போய் நிற்குது. குளறியும் கேட்குது. ஆரையேனம் பிடிச்சிட்டாங்களோ...?"

"என்னெண்டு தெரியாமல் கிடக்குது. வா கிட்டப்போய்ப் பாப்பம்"

இருவரும் அந்த இடத்தை நோக்கி நடந்தார்கள்.

"ஐயோ! என்ர மாமி நான் எவ்வளவோ சொல்லியும் அவர் கேட்கேல்லை மாமி?. பட்டினி கிடந்து செத்தாலும் பரவாயில்லை. அங்காலை ஷெல் விழுகுது போகாதையுங்கோ எண்டு சொன்னான். கேட்கலை மாமி..."


ஒரு இளம் பெண் தலைவிரி கோலத்தில் நடுத்தரவயதுடைய இன்னொரு பெண்ணைக் கட்டிப்பிடித்தபடி... அழுதழுது கூறிக்கொண்டிருந்தாள்.

"என்னய்யா பிரச்சினை...?"

கூட்டத்தில் நின்ற ஒருவரிடம் தங்கை கேட்டாள்.

"வற்றாப்பளைப் பக்கம் வீடு பார்க்க இந்தப்பிள்ளையின்ர





மனிசன் போனவராம். ஷெல் விழுந்த இடத்தில 'பீஸ்' அடிச்சுச் செத்துப்போச்சுது. அதுதான் அழுகுது. பாவம்."

"வளவுக்கை காய்க்கிற தென்னையள் நிற்குது. தேங்காயள் பழுத்து விழுந்திருக்கும். எடுத்து உரிச்சுக்கொண்டு வந்துவித்தால் ரண்டு நாளைக்குச் சாப்பாட்டுக்குச் சமாளிக்கலாம்... எண்டு சொல்லிப் போட்டுப்போனவர் மாமி. ஐயோ... இனி நான் என்ர ரண்டு பிள்ளையளோடை என்ன செய்யிறது... ஆ... கடவுளே..."

மருமகள் குளறி அழுவதைச் சகிக்க முடியாமல் மாமியும் கைகளால் தன் தலையில் அடித்தபடி குளறி அழத் தொடங்கினாள்.

"எடி தங்கச்சி வாடி போவம்..." அக்கா தங்கையை அழைத்தாள்.

மாத்தளன் சந்திவரை மிதிவண்டிகளை உருட்டிக்கொண்டு சென்றவர்கள் கடற்கரைக்குச் செல்லும் பிரதான பாதையால் செல்வதற்கு தங்கள் மிதிவண்டிகளில் ஏறினார்கள்.

"இப்ப உழைப்புப் பிழைப்பு இல்லாமல் இருக்கிறதுகள் உப்பிடியும் போய்ச் சாகுதுகள்..."

மிதிவண்டியில் ஓடிக்கொண்டே... தங்கை கூறினாள்.

"எங்களுக்கு கொஞ்சம் வசதி வாய்ப்பு இருக்கிறதால வெளியில நடக்கிறது தெரியாமல் கிடக்குது. நிலைமை இன்னும் இறுகிச்சு எண்டால்தான் தெரியவரும்..." கூறிவி ட்டு அக்கா சிரித்தாள்.

"ஆமி வாறதைப் பார்த்தால் நாங்களும் மாத்தளன் பக்கம் தான் வரவேண்டிக் கிடக்கப்போகுது..." என்று கூறியபடி வந்த தங்கை திடீரென மிதிவண்டியின் வேகத்தைக் குறைத்தபடி... மிதிவண்டியை விட்டுக் கீழே இறங்கினாள்.

"என்னடி....?"

"சைக்கிளுக்குக் காத்துப் போட்டுது அக்கா..." குரலில் சலிப்புத் தொனிக்கக் கூறியபடி மிதிவண்டியை உருட்ட ஆரம்பிததாள்.

கடற்கரைக்குச் செல்லும் பிரதான வீதியில் சன நடமாட்டம் குறைந்து இருந்தது. வீதியின் கரையை அண்டிய இடங்களில் சிறுசிறு கடைகள் தோன்றியிருந்தன. வீதியோரம் வளர்ந்து நின்ற ஒரு புளியமரத்தின் கீழ் ஒரு குடும்பம் தாம் கொண்டு வந்த பொருட்களை இறக்கி வைத்துவிட்டு, 'இனி என்ன செய்வது...?' என்ற சிந்தனையில் ஆழ்ந்திருந்தது.

கிரவல் வீதியில் மிதிவண்டியை உருட்டிக்கொண்டு செல்வது தங்கைக்குச் சிரமமாக இருந்தது.

"அக்கா...! உதில கிடக்கிற சைக்கிள் கடையில விட்டிட்டு போவமே. பிறகு வரேக்கை எடுத்துக்கொண்டு போவம்..."

அக்கா அதற்குச் சம்மதிக்கவே, மிதிவண்டியை அந்தக் கடையில் ஒப்படைத்து... ஒட்டிவைக்கும்படி கூறிவிட்டு இருவருமாக மிதிவண்டியில் ஏறி ஆஸ்பத்திரி நோக்கிப் பயணித்தார்கள்.

"இந்தச் சைக்கிளுக்கும் காத்துக் காணாது. இடிக்குது...." அக்கா கூறிக்கொண்டே சற்று ஏற்றமாக இருந்த அந்த வீதியில் மிகவும் சிரமப்பட்டவாறு மிதிவண்டியின் பெடல்களை மிதித்துக்கொண்டிருந்தாள்.

அங்கைபாரடி அக்கா! சின்னத்தங்கச்சி வாறாள்." மிதிவண்டியின் பின்புறம் இருந்த தங்கை கூறவும், அக்கா மிதிவண்டியை நிறுத்தினாள்.

"தங்கச்சி... எடி சின்னத்தங்கச்சி..."

வைத்தியசாலையில் தனது அண்ணனைப் பார்த்துவிட்டு, வீடு திரும்பிக்கொண்டிருந்த அவர்களது கடைசித் தங்கை குரல்வந்த திக்கைப்பார்த்துவிட்டு அவர்களிடம் வந்தாள்.

தங்கையின் முகம் சிரிப்பிழந்து இருண்டு போய்க்கிடந்ததைக் கண்டுமூத்த சகோதரிகள் இருவரும் திகைத்து நின்றார்கள்.



அவலம் தொடரும்....







# முட்டாளும் புத்திசாலியும்

மழை! ஓயாத மழை! ஏரி நிறைந்து வழியும் அளவுக்கு மழை. அந்த ஏரி நீர் குளிர்ச்சி அடைந்து விட்டது. அந்தக் குளிரைத் தாங்க முடியாத ஒரு தவளை, மழை ஓய்ந்ததும் சற்று தூரத்திலுள்ள ஒரு கிணற்றுக்கு வந்தது. கிணற்று நீர் வெது வெதுப்பாக இருக்குமே என்பதால் கிணற்றிற்குள் குதித்தது.

அந்தக் கிணற்றில் பல காலமாக வாழ்ந்து வந்த ஒரு தவளை இந்தப் புதிய தவளையை வரவேற்றது. "நான் வெகுநாட்களாகப் பேசுத் துணைக்குக்கூட ஆளில்லாமல் தவித்துக் கொண்டிருந்தேன். உன்னைக் கண்டதும் எனக்கு மகிழ்ச்சி" எனக் கூறிப் பொந்தில் வைத்திருந்த உணவு வகைகளைப் புதிய தவளைக்குத் தந்தது.

இரண்டு தவளைகளும் பேசிக் கொண்டிருந்தன. கிணற்றிலிருந்த மற்ற தவளைகளுக்குப் புதிய தவளை வந்தது பிடிக்கவில்லை. "இங்கே கிடைக்கும் உணவு நமக்கே போதவில்லை. இதில் புதிய விருந்தாளி வேறு" எனக் கவலைப்பட்டன. புதிய விருந்தாளியை எப்படியும் துரத்திவிட முடிவு செய்தன.

இரண்டு தவளைகளும் பேசிக்கொண்டிருப்பதை அருகே சென்று வேடிக்கை பார்த்தன. அப்போது அக்கிணற்றுத் தவளை ஏரித் தவளையிடம், "நண்பனே! நீ இத்தனை நாளும் எங்கே தங்கியிருந்தாய்?" எனக் கேட்டது. "நான் ஏரியில் தங்கி இருந்தேன்" என்றது ஏரித் தவளை.

"ஏரியா? அப்படியென்றால் என்ன?" எனக் கேட்டது கிணற்றுத் தவளை.

"இந்தக் கிணற்றைப் போன்ற பெரிய நீர் நிலை. அதில் மீன், ஆமை, முதலை ஆகியவை உண்டு" என்றது ஏரித் தவளை.

"இந்தக் கிணற்றைப் போன்று அவ்வளவு உயிரினங்களா?" என்று கேட்டது கிணற்றுத் தவளை.

"இந்தக் கிணற்றைவிட மிகப்பெரியது ஏரி" என்றது ஏரித் தவளை. கிணற்றுத் தவளை நம்பவில்லை. "நண்பா நீ பொய் சொல்லுகிறாய். இந்த கிணற்றைவிட பெரிய நீர் நிலை உலகத்தில் இருக்க முடியாது" என்றது.

ஏரித் தவளை எவ்வளவோ எடுத்துச் சொல்லியும், கிணற்றுத் தவளை நம்பவில்லை. கூட இருந்த மற்ற தவளைகளும் நம்பவில்லை. எல்லாத் தவளைகளும் ஏரித் தவளை யைப் பார்த்து "நீ பொய்யன், புரட்டன். உன்னை நம்பி இங்கே வைத்திருந்தால் ஆபத்து" என்று கூறி ஏரித் தவளை யைத் தாக்க முயன்றன. அப்போது, கிணற்றிலிருந்து நீர் எடுக்க ஒரு பெண் வாளியை இறக்கிய போது, அதனுள் தாவிச் சென்று குதித்த ஏரித் தவளை தண்ணீருடன் மேலே சென்று தாவிக் குதித்து ஏரி நோக்கிச் சென்றது.

**முட்டாள்களிடம் வாதாடுவதைவிட அவர்களிட மிருந்து ஒதுங்கிச் செல்வதே சிறந்தது.**

**மனிதனின் குற்றங்களில் பெரும்பாலானவை அவனது நாவிலிருந்துதான் பிறக்கின்றன.**

-நபிகள் நாயகம்-

## உலக தினங்கள்


* உலக குடும்பங்கள் தினம்-மே 15
* உலக அருங்காட்சியகத் தினம் - மே 18
* உலக புகையிலை எதிர்ப்புத் தினம் - மே 31
* உலக சுற்றுச்சூழல் தினம் - ஜூன் 5
* உலக குழந்தை தொழிலாளர் எதிர்ப்புத் தினம் - ஜூன் 12
* உலக நகைச்சுவை தினம் - ஜூலை 1
* உலக மக்கள்தொகை தினம் - ஜூலை 11
* உலக நட்புதினம் - ஆகஸ்ட் 5
* உலக இளைஞர் தினம் - ஆகஸ்ட் 12
* உலக அமைதி தினம் - செப்டம்பர் 21
* உலக சுற்றுலா தினம் - செப்டம்பர் 26
* உலக முதியோர் தினம் - ஒக்டோபர் 1
* உலக ஆசிரியர் தினம் - ஒக்டோபர் 5
* உலக மனவளர்ச்சி குன்றியோருக்கான தினம் - ஒக்டோபர் 10
* உலக உணவுதினம் - ஒக்டோபர் 16
* உலக நினைவூட்டல் தினம் - நவம்பர் 11
* உலக பொறுமை தினம் - நவம்பர் 16
* உலக குழந்தைகள் தினம் - நவம்பர் 20
* உலக தொலைக்காட்சி தினம் - நவம்பர் 21
* உலக எயிட்ஸ்தினம் - டிசெம்பர் 1
* உலக உடல் ஊனமுற்றோர் தினம் -டிசெம்பர் 3
* உலக உரிமைகள் தினம் - டிசெம்பர் 10

## வானிலை அறிக்கை

காற்று மண்டலத்தில் தோன்றும் காற்றழுத்தக் குறைவு மையம், கடலில் நகர்ந்து வலுப்பெறுகிறது. இதன் மையத்தை நோக்கி பலத்த காற்று வீசும். இந்தக் காற்றுடன் மழை மேகங்களும் நகரும். இப்படி நகரும் காற்று கடற் கரையைக் கடக்கும்போது, அதிகளவில் காற்றும், மழையும் வீசி, காற்றழுத்தக்குறைவு மையம் வலுவிழக்கும். இதைத்தான் 'புயல்' என்று குறிப்பிடுகின்றனர். கடலில் புயல் உருவாவதை நாம் முன்கூட்டியே தெரிந்து கொள்ள முடியும். செயற்கைக்கோள்களின் உதவியால் மேகங்களைப் படம்பிடித்து, அவற்றின் திசைவேகம், தன்மை, பருமன், நீராவியின் அளவு ஆகியவற்றைக் கணக்கிட்டு புயலின் தன்மையை அறிய முடியும். இந்தத் தகவல்களைக் கணிப்பொறியின் துணைகொண்டு ஆராய்ந்து புயலின் மையம், காற்றழுத்தக்குறைவு, மையத்தின் திசைவேகம் ஆகியவற்றைக் கணித்து வானிலையை அறிய முடியும். இதை அறிக்கையாக மக்களுக்குத் தெரிவித்து முன்னெச்சரிக்கை செய்வதைத்தான் 'வானிலை அறிக்கை' என்கிறார்கள்.

## கண்டுபிடியுங்கள்

இங்குள்ள 03 துண்டுப் படங்களை சரியாகப் பொருத்தினால், அழகான சிறுமியின் உருவம் கிடைக்கும். நீங்களும் முயற்சித்துப் பார்க்கலாமே!






## குட்டிநாடு

மத்தியதரைக்கடல் ஓரத்தில் பிரான்சு அருகே உள்ள சிறிய நாடு மொனாக்கோ. இங்கு மன்னராட்சி நடைமுறையில் உள்ளது.

மொத்தப்பரப்பளவு:-2.02.சதுர கி.மி
மக்கள் தொகை:-30586
தலைநகர்:- மொனாகோ
முதன்மை நகரம்:-மாண்டோ கார்லோ
மொழிகள்:-பிரெஞ்சு, ஆங்கிலம்
இனம்:-பிரெஞ்சு மதம், ரோமன்கத்தோலிக்.
கல்வியறிவு:-90வீதம்
தொழில்:-சுற்றுலா, கட்டுமானத் தொழில், சிறுதொழில், நுகர்வேர் பொருள்.



## தகவல் துணுக்குகள்...

### புத்தகப் பிரியர்

அதி சிறந்த பாரசீக நாட்டு மன்னர் அப்துல்காசம் இஸ்மா யில் என்னும் மன்னர் 10ஆம் நூற்றாண்டில் வாழ்ந்தவர். இவர் ஒரு புத்தகப்பிரியர். 1,17,000 புத்தகங்கள் இவரது நூலகத்தில் இருந்தன. படையெடுப்புக் காலங்களில் அந்தப் புத்தகங்களையும் உடன் எடுத்துச் செல்வாராம். 400 ஒட்டகங்கள் புத்தகங்களை எடுத்துச் செல்ல நூலக அதிகாரிகளும் உடன் செல்வதோடு, மன்னர் கேட்கும் நூலை எடுத்துத் தருவார்களாம்.

### சீனப் பெருஞ்சுவர்

சீனப் பெருஞ்சுவரின் உயரம் 25 அடி. நீளம் 7500 கிலோ மீற்றர். சுவர்களுக்கு மத்தியில் உள்ள பாதையின் அகலம் 20 அடி. இது சில இடங்களில் 15 அடியாக உள்ளது. மேலும், இதுவரையிலான உலகின் மிகப்பெரிய கட்டுமானத் திட்டங்களில் இதுவே மிகப் பெரியதாகும். 2000 ஆண்டுகள் பழமை வாய்ந்தது.



### போர் நகரம்

ஆஷிவிட்ஸ் பகுதி. ஜெர்மானிய இராணுவத்தின் மிகப்பெரிய கொலைக்களங்களில் ஒன்றாக விளங்கியது. 1939 இல் போலந்தை வென்ற ஜெர்மானியப் படை போலந்திலிருந்து 286 கி.மீ.தொலைவிலிருந்த ஆஷிவிட் ஸில் அந்தக் கொலை முகாமை துவங்கியது. 1944 இல் ஜெர்மன் ஹோலோகோஸ்ட் ஒரு முடிவுக்கு வரும்போது சுமார் 40 லட்சம் பேர் ஆஷிவிட்ஸ் முகாம்களில் படுகொலை செய்யப்பட்டிருந்தனர்.

## சிறந்த வர்ணத்திற்கு பரிசு தரும் எண்ணம்!



போட்டியில் கலந்துகொள்பவர்கள் தாம் கல்வி கற்கும் தரத்தினை கட்டாயம் குறிப்பிட வேண்டும்.

மேலே உள்ள படத்தினை வர்ணம் தீட்டி தபாலட்டையில் ஒட்டி அனுப்புங்கள். சிறந்த வர்ணம் ஒன்றிற்கு புத்தகமொன்று பரிசாகக் காத்திருக்கிறது. அனுப்ப வேண்டிய கடைசித் திகதி 28.02.2011

வர்ணம் தீட்டும் போட்டி இல.879
தினமுரசு வாரமலர்
த.பெ.இல:1772, கொழும்பு. த.பெ.இல:167, யாழ்ப்பாணம்.

**வர்ணம் தீட்டும் போட்டி இல: 877**

**பரிசுக்குரியவர்:** அ.கீர்த்திகாயா,நவாலி கிழக்கு, மானிப்பாய்


**பாராட்டுக்குரியவர்கள்**

01. க.பிரதீபன்,வாழைச்சேனை, மட்டக்களப்பு.
02. சி.சிறிதரன், லைடன் கொம்பனி, கொட்டடி, யாழ்ப்பாணம.
03. ரா.தேனுயா,தாளையடி வடக்கு, தாளையடி.
04. யோ.சிவரஞ்சினி, சரசாலை தெற்கு, சாவகச்சேரி.
06. ந.சிந்துஜன்,ஆத்தியடி வீதி, கச்சாய் றோட், கொடிகாமம்.
07. அ.சோபிதன்,நுணாவில் மேற்கு சாவகச்சேரி.
08. எஸ்.பவானந்தன், திருகோணமலை.

நம் வாழ்க்கை முறையில் ஏற்பட்டுள்ள மாற்றங்கள் காரணமாக உடல் உழைப்பு குறைந்துவிட்டது என்பது அனைவரும் அறிந்த உண்மை. இதுபோன்ற சூழலில் ஒரு சிலரால் மட்டுமே உயரத்திற்குத் தகுந்த உடல் எடையைக் கட்டுக்குள் வைத்திருக்க முடிகிறது. பலரால் முடிவதில்லை. தேவையைவிட 20 விழுக்காடு எடை கூடும்போதே மாரடைப்பு தோன்றும் அபாயம் 2 அல்லது 3 மடங்கு அதிகரித்துவிடும். இது போதாதென்று இவர்களிடம் உயர் இரத்த அழுத்தம், நீரிழிவு, கொலஸ்ரோல் அதிகரிப்பு ஆகியவையும் வருவதற்கு வாய்ப்புகள் அதிகம்.

மாரடைப்பு (coronary Attack, Myocardial Information): 'ஆஞ்ஜைனா', வலி அல்லது மார்பில் இறுக்கமான ஓர் உணர்வு ஏற்பட்டு, இந்நிலை 15 நிமிடங்களுக்கு மேல் நீடிக்குமானால் மாரடைப்பு ஏற்பட்டுள்ளதாகக் கருதலாம். அதாவது இதயத்தசையில் ஒரு பகுதி போதிய பிராண வாயுவைப் பெற முடியாமல் சிதைந்துவிட்டது என்பதாகும். கொழுப்புப் படிந்து தடித்துவிட்ட கொரனரி இரத்த நாளங்களில் போதிய இரத்தம் இதயத்திற்குப் போவதில்லை. மற்றும் இரத்த நாளங்களில் இரத்தம் உறைந்து கட்டியாகிவிடும். இந்த இரு காரணங்களினால் மாரடைப்பு ஏற்படுகிறது.

# மாரடைப்பு ஏற்படக் காரணம்?




இவற்றில் குறிப்பாக இரத்தத்தில் கொலஸ்ரோலின் அளவு அதிகரிக்கும்போது கொரனரி இரத்த நாளங்களில் கொலஸ்ரோல் போன்ற இரத்தக் கொழுப்புச் சத்துக்கள் படிந்து, (Atheroscierosis) சிறிது சிறிதாக அடைப்பை ஏற்படுத்தும். இதன் விளைவாக உண்டாகும் கேடுகளே எவ்வித முன்னெச்சரிக்கையுமின்றி திடீரெனத் தாக்கும்.

மாரடைப்பும் முன்னெச்சரிக்கையின்றி திடீரென ஏற்படலாம். இதற்கு கொரனரி இரத்தநாள நோய்கள் தோன்றி நெடு நாட்களாகியுள்ளதே பெரும்பாலும் காரணமாகும். 'ஆஞ்ஜைனா' (Angina) என்றழைக்கப்படும் நெஞ்சுவலி ஏற்படுவதே ஒரு முக்கிய அறிகுறியாகும். நெஞ்சுவலி, நடு மார்பில் தோன்றி, அங்கிருந்து பரவி கழுத்து, தாடை, இரு கைகள், முழங்கை அல்லது மணிக்கட்டு வரை செல்லக்கூடும். இதயம் அதிக இரத்தம் வேண்டி 'அழும் குரலே' இவ்வலியாகும். அதிக உடல் உழைப்பில் ஈடுபடும்போதும் (Physical exertion) உள்ளம் உணர்ச்சி வசப்படும்போது (EMOTIONAL UPSET) வயிறு நிறைய உண்ட பின்பும் இவ்வலி பெரும்பாலும் தாக்கக்கூடும். அப்பொழுது ஓய்வு எடுத்தாலோ அதற்குரிய மாத்திரையை நாக்கிற்கு அடியில் வைத்து சப்பிக்கொண்டாலோ, வலி நீங்கிவிடும். 'ஆஞ்ஜைனா' வலி மாரடைப்பல்ல. இதயத்தசை, தற்காலிகமாகத் தேவையான அளவு பிராண வாயுவைப் பெற முடியாத நிலையில் இதற்குப் பழுது ஏற்பட்டுவிடாமல் காக்க வேண்டி பிராண வாயுவைப்பெற இதயம் மேற்கொள்ளும் முயற்சியே இவ்வலியாகும். 'ஆஞ்ஜைனா' வலியால் பாதிக்கப்படுபவர்கள், உரிய மருத்துவ ஆலோசனை பெற வேண்டும்.

இரத்தக் கட்டி ஏற்படுவதற்குரிய காரணங்கள்: இதய இயக்கத்தில் மாற்றம் (Rhythm Disturbance). இரத்த ஓட்டத்தில் தொய்வு (Sluggish blood flow), புகைப்பிடித்தல், மன உளைச்சல், பெண்கள் கருத்தடை மாத்திரை உட்கொள்ளுதல் முதலியனவாகும்.

இவ்வாறு இதய இரத்த நாளங்களில் ஏற்பட்டுள்ள அடைப்பை நீக்குவதற்காக ஆஞ்சியோபிளாஸ்டி அல்லது பைபாஸ் சத்திரசிகிச்சை ஆகியவைதான் தீர்வு எனப் பல பெரிய மருத்துவ நிபுணர்களும் கருதுகின்றனர். ஆனால் இதற்கு இலட்சக்கணக்கில் செலவு செய்ய வேண்டும். தற்போது இதய இரத்த நாளங்களில் ஏற்பட்டுள்ள அடைப்புப் பிரச்சினைக்குத் தீர்வுகாண ஜெர்மனியில் ஓர் புதிய மருத்துவ அறிவியல் சார்ந்த சிகிச்சை முறையை உருவாக்கியுள்ளனர். அதற்கு ESMR என்று பெயர். அதாவது(ExtraCorporealShock Wave Myocardial Revascularisation) என்பதின் சுருக்கமே ESMR.

இந்தப் புதிய சிகிச்சை முறையின்படி அறுவை சிகிச்சை எதுவும் தேவையில்லை. பல நாட்களுக்கு மருத்துவ மனையில் தங்கி தவம் கிடக்க வேண்டிய அவசியமும் இல்லை. மேலும் இது சிக்கனமான முறையும்கூட.

ஆனால் மாரடைப்பு ஏற்பட மேற்கூறிய காரணங்கள் இருந்தாலும், பரம்பரை பரம்பரையாகவும் இந்த நோய் தாக்க வாய்ப்புள்ளது. எனவே, நமது முன்னோர்களுக்கு மாரடைப்பு ஏற்பட்டிருந்தால், நாம் முன்னெச்சரிக்கையாக இருக்க வேண்டியது அவசியமாகும்.

**நன்றி இணையம்**



# 42 திருப்பங்கள் நிறைந்த பூலான்தேவியின் வாழ்க்கை வரலாறு

> எல்லோருக்கும் – அவள் பயங்கரக் கொள்ளைக்காரி, படு பயங்கரக் கொலை காரி என்று தான் தெரியும். அவள் அதுவும் ஒரு பெண் – ஏன் அப்படி மாறினாள் என்று எத்தனை பேருக்குத் தெரியும்? பூ ஒன்று புயலான கதை. ஏற்கனவே முரசில் புரட்டப்பட்ட இப்பக்கங்கள், வாசகர்களின் வேண்டுகோளுக்கிணங்க மீண்டும் பிரசுரிக்கப்படுகிறது.

அவனும் என்னையே தான் பார்த்துக்கொண்டு இருந்தான். நான் பார்த்ததும் அவன் முகத்தைத் திருப்பிக்கொண்டு வேறெங்கோ பார்த்தான். அவன் கண்களில் தெரிந்தது, பரிவா, அல்லது அலட்சியமா என்று என்னால் உடனே புரிந்துகொள்ள முடியவில்லை. "என்னடி யோசனை? படு என்றால் உடனே படுத்துவிட வேண்டும்! அப்படிப் படுக்கச் சொன்னாலும் எங்கே படுக்கச் சொன்னாலும் படுக்கத்தான் வேண்டும்! அட... படு, படடி!" என்று கத்தினான் கரடி பாபுசிங் குஜார். இனியும் தாமதித்தால் அடிப்பான் அல்லது ஏதாவது வம்பு செய்வான். அதனால் கைக்கட்டோடு மண்டியிட்டு அமர்ந்து அப்படியே குப்பறப்படுத்துக் கொண்டேன். என் முகத்துக்கு அருகே ஒரே நரகல். நான் கண்மூடிக்கொண்டு கிடந்தேன். கைகள் பின்புறமாகக் கட்டப்பட்டிருந்தமையால் தோள் மூட்டில் மரண வலியாக இருந்தது. நீண்ட தூரம் நான் நடந்து வந்ததால் உடல் அசதியாக இருந்தது. என்னை அறியாமலே தூங்கி விட்டேன். ஒருவன் என் பின் புறத்தில் பூட்ஸ் காலால் உதைத்தான். கரை வந்துவிட்டது, எல்லோரும் இறங்கிக் கொண்டார்கள். படகுச் சொந்தக்காரனாக ஒரு கட்டாக இருந்த நோட்டுக்களை எடுத்து நீட்டினான் பாபுசிங் குஜார்.

படகுச் சொந்தக்காரன் முகமெல்லாம் பல்லாக இளித்துக் கொண்டே பாபுசிங் குஜாரின் பாதங்களைத் தொட்டு கண்களில் ஒற்றிக்கொண்டான்.

யாரோ என் புறமாக நின்று கைக்கட்டுக்களை அறுத்துவிட்டார்கள். அதுவே பெரிய ஆறுதலாக இருந்தது எனக்கு. மெல்லத் திரும்பிப் பார்த்தேன். கட்டை அறுத்துவிட்ட கத்தியோடு நின்றுகொண்டிருந்தான் விக்கிரம் மல்லா. முதலில் அவன் கண்களைத்தான் பார்த்தேன் அந்தக் கண்களுக்குள் ஏதோ ஒரு காந்தசக்தி இருப்பது போல



தெரிந்தது.

இது என்ன அவன் என் கண்களைத்தான் பார்க்கிறானா? அப்போது தான் எனக்குள் அந்த மாற்றத்தை உணர்ந்தேன். நன்றாக குளிர்ந்து சில்லிட்ட நீரை யாரோ என் நெஞ்சுக்குள் கொட்டியது போல இருந்தது.

முதன் முதலாக எனக்கு வெட்கமாக இருந்தது. சட்டென்று அவன் கண்களிலிருந்து என் பார்வையை விலக்கிக் கொண்டு என் தலையைக் குனிந்து கொண்டேன். நன்றி சொல்லாமா என்று நின்னைத்தாலும் பேச்சு வரவில்லை. எனக்கே வியப்பாக இருந்தது. என்ன இது என்றுமே இல்லாத வெட்கமும், நாவடக்கமும் எத்தனை நேரம் அப்படியே நின்றிருப்பேன் என்று தெரியவில்லை.

"ம்... முன்னாலே போ! என்றும் குரல் கேட்டதும் வேறு உலகிலிருந்து மீண்டது போல் இருந்தது. நிமிர்ந்து பார்த்தேன். விக்கிரம் மல்லாவைக் காணவில்லை. அங்கே துப்பாக்கியுடன் ஒரு கழுதை நின்றுகொண்டிருந்தான்.

நான் விக்கிரம் மல்லாவின் முதுகையே பார்த்துக் கொண்டே நடந்தேன். 'விக்கிரம் மல்லா நீ நல்லவன். இவர்களை விட வல்லவன்' என்று அவனிடம் சொல்ல வேண்டும் போல இருந்தது. வழியில் ஒரேயொரு முறை மட்டும் விக்கிரம் மல்லா திரும்பிப் பார்த்தான். நான் சட்டென்று தலையைக் குனிந்து கொண்டேன். பின்னர் தான் நினைத்தேன் அவனை நோக்கி நன்றி கலந்து மெல்லச் சிரித்திருக்கலாம் என்று.

ஒரு பாழடைந்த கட்டடத்தில் எல்லோரும் தங்கினார்கள். தனது ஆட்களில் சிலரை பக்கத்து கிராமத்துக்கு அனுப்பி வைத்தான் பாபுசிங் குஜார். அவர்கள் சென்று உணவு சேர்த்துக் கொண்டு வந்தார்கள். ஒரு தட்டில் எனக்கும் உணவு தந்தார்கள். நான் மறுக்கவில்லை. பசியென்றால் அப்படியொரு பசி. நடப்பது நடக்கட்டும், உடலை காயப்போடுவானேன். மூக்கு முட்ட ஒரு பிடி பிடித்தேன்.

விக்கிரம் மல்லாவைத் தேடினேன். என் பார்வையில் அவன்படவில்லை. என்னருகே துப்பாக்கியுடன் ஒருவன் காவலிருந்தான்.

அந்தப் பாழடைந்த கட்டடத்தினுள்ளே தான் பாபுசிங் குஜார் தங்கியிருந்தான். வெளியே மரநிழலில் நானும் அவனது ஆட்களும் இருந்தோம். கிராமத்திலிருந்து சிலர் வந்து பாபுசிங் குஜாரைச் சந்தித்துவிட்டுச் சென்றார்கள். வரும்போது மூட்டைகளோடு வந்தார்கள். வெறுங்கையுடன் திரும்பிச் சென்றார்கள்.

இருளாகிக் கொண்டிருந்த போது, பாபுசிங் குஜார் என்னை அழைப்பதாகக் கூறி அவனிடம் அழைத்துச் சென்றார்கள். அவன் கண்கள் சிவந்திருந்தன. அவன் முன்பாக மதுப்புட்டிகளும் நெருப்பில் வாட்டிய இறைச்சித் துண்டுகளும் பரவிக் கிடந்தன.

என்னைக் கண்டதும் வழிகளை அகட்டிப் பார்த்தான். துப்பாக்கியைக் கையில் எடுத்து என் மார்பின் நடுவே முனையை வைத்து அழுத்திக்கொண்டே "சுட்டுவிடட்டுமா கண்ணு! சுட்டுவிடட்டுமா?" என்று கேட்டான். நிறைவெறியில் அவன் பேச்சுத் தெளிவில்லாமல் இருந்தது. நான் மௌனமாக நின்றேன். துப்பாக்கி முனையை நெஞ்சிலிருந்து விலக்கி என் கால்களிடையே செருகினான். கண்களைச் சிமிட்டி இளித்தான். நான் அப்படியே அசையாமல் நின்றேன். என்ன நினைத்தானோ தெரியாது. துப்பாக்கியை ஒரு ஓரமாக வைத்துவிட்டு என் அருகே வந்தான்.

(திருப்பங்கள் தொடரும்...)



# கௌரவ வேடத்தில் லோரன்ஸ் காத

இந்தியில் ஹிட்டான படம், '3 இடியட்ஸ்'. படத்தை ஜெமினி பிலிம் சர்க்யூட் நிறுவனம் தமிழில் 'நண்பன்' என்ற பெயரில் தயாரிக்கின்றார்கள். எந்திரன் வெற்றிக்குப் பின்னர் சங்கர் இயக்கும் இந்த படத்தில் அமிர்கான் வேடத்தில் விஜய் நடிக்கிறார். இந்தப் படத்தில் இலியானா, ஜீவா, ஸ்ரீகாந்த், சத்யராஜ், அனுயா உட்பட பலர் நடிக்கின்றனர். நண்பன் படத்தில் இயக்குனர் எஸ்.ஜே.சூர்யா கெஸ்ட் ரோலில் நடிக்கிறார்.

மனோஜ் பரமஹம்சா ஒளிப்பதிவு செய்கிறார். ஹாரிஸ் ஜெயராஜ் இசை அமைக்கிறார். நா.முத்துக்குமார் பாடல்கள். படத்தின் படப்பிடிப்பு ஊட்டியில் நடந்து வருகிறது. இம்மாதம் 25ஆம் திகதி முதல் விஜய் நடிக்கும் காட்சி படமாக்கப்படுகிறது. நண்பன் படத்தில் கௌரவ வேடத்தில் ராகவா லோரன்ஸ் நடிக்கவுள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளன. முதலில் இந்த கௌரவவேடத்தில் நடிகர் பிரசன்னாவைத்தான் கேட்டிருந்தார்களாம். திகதிகள் இல்லாத காரணத்தால் அவருக்குப் பதில் ராகவா லோரன்ஸ் நடிக்கவுள்ளராம்.

பிதாமக
வெளிக்
படத்தில்
இது ப
வந்து.
விட்டே
வயதுக்
பாத்திர
தம்பிக்
சம்மதித்
மன்மத
தாயாக
ஒருவன்
நடித்தே
சின்னப்

# படத்துக்காக உறியடி திருவிழா

அய்யனார் படத்தைத் தொடர்ந்து அரவானி போன்ற படங்களைத் தொடர்ந்து ஆதி நடிக்கும் புதிய படம் 'ஆடு புலி'. இந்தப் படத்திற்காக கும்பகோணத்தில் உறியடி திருவிழா ஏற்பாடு செய்யப்பட்டு படப்பிடிப்பு நடத்தப்பட்டுள்ளது. படத்தை பாக்யராஜின் முன்னாள் உதவியாளர் விஜய் பிரகாஷ் இயக்கியுள்ளார். ஆக்ஷன் படமான இந்தப்படத்தை மைக்கேல் ராயப்பன் தயாரித்துள்ளார். சுந்தர் சி.பாபு இசையமைக்கும் இந்தப் படத்தில் ஆதி ஜோடியாக பூர்ணா நடிக்கிறார். இளைய திலகம் பிரபு முக்கிய கதாபாத்திரத்தில் நடித்துள்ளார்.



# மதுரையில் மங்காத்தா

வெங்கட் பிரபு இயக்கத்தில் நீண்ட இடைவெளிக்குப் பின்னர் அஜீத் நடிக்கும் 50வது படமான மங்காத்தா படத்தின் அடுத்தகட்ட படிப்பிடிப்பு படுவேகமாக நடந்து வருகிறது.

இதனையடுத்து இயக்குநர் வெங்கட் பிரபும், தயாரிப்பாளர் தயாநிதி அழகிரியும் மங்காத்தா படத்தை அஜித்தின் பிறந்தநாள் அன்று வெளியிட முடிவு செய்துள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளது.

படத்தின் இறுதிக்கட்ட படப்பிடிப்பு மதுரையில் நடைபெறவுள்ளது. மதுரையில் மார்ச் 1ஆம் திகதி முதல் படப்பிடிப்பு நடைபெறவுள்ளது

பட
திரண்
இதன
இதை
வருத்

# கோவை குண்டுவெடிப்பில் பிரகாஷ்

பிருத்விராஜ், பிரகாஷ்ராஜ் நடிப்பில் மலையாளத்தில் வெளியான 'அன்வர்' படம், தமிழில் பயணம் என்ற பெயரில் விரைவில் வருகிறது. தீவிரவாதத்தால் நாட்டிற்கு ஏற்படும் பாதிப்பு, அதை களைய மக்கள் என்ன செய்ய வேண்டும் என்பதே படத்தின் கரு.

கோவை குண்டுவெடிப்பு முதல் மும்பையில் தீவிரவாதிகள் தாக்கிய சம்பவம் வரை கோர்வையாக திரைக்கதை அமைக்கப்பட்டுள்ளது. மும்பை தாக்குதலின்போது காவல்துறை அதிகாரி கர்காரே வீரமரணம் அடைந்தார். அவரது

கதாபாத்திரத்தில் பிரகாஷ்ராஜ் நடி
'இப்படியொரு வேடத்தில் நடித்தை
மிகப் பெருமையாக கருதுகிறேன்' எ
பிரகாஷ்ராஜ். மதத் தலைவர் ஒருவ
கையாளாக பிருத்விராஜ் நடிக்கிறார்.
மம்தா மோகன்தாஸ் நடிக்கிறார்.
இப்படத்துக்காக குண்டுவெடிப்பு சம்
படமாக்கப்பட்டன. குண்டுவெடிப்பின்
என்ன என்பதை இக்காட்சி தத்ரூபமா
விளக்கியுள்ளது. இம்மாத இறுதியில்
திரைக்கு வருகிறது.

# தெலுங்கில் கதை கேட்கும் கார்த்தி!

சமீபத்தில் வெளிவந்து வெற்றிகரமாக ஓடிக்கொண்டிருக்கும் 'சிறுத்தை' படத்தைத் தொடர்ந்து அடுத்த படத்துக்காக சில புதுமுக இயக்குநர்களிடம் கதை கேட்டு வருகிறார் கார்த்தி.

தெலுங்கிலும் இவருக்கு ரசிகப் பட்டாளம் ஏராளம். இதனால் தெலுங்கு ரசிகர்களையும் திருப்திபடுத்த விரும்புகிறார் கார்த்தி.

தெலுங்கு இயக்குநர்களை தமிழுக்கு கொண்டு வர கார்த்தி பெரும் முயிற்சி செய்து வருவதாக சினிமா வட்டாரத்தில் பேசப்படுகின்றது. இதற்காக பொம்மரிலு பாஸ்கர், கருணாகரன் என்ற பல தெலுங்கு முன்னணி இயக்குனர்களிடம் கதை கேட்டு வருகிறாராம் கார்த்தி.

# நம்பிக்கை இல்லாதவர் ஜெய

காதல் மீது நம்பிக்கை இல்லாதவரா
வலம் வருகிறார் ஜெயம் ரவி. இது
நிஜத்தில் அல்ல படத்தில் தான்.
பிரபுதேவா இயக்கத்தில் ஜெயம் ர
நடித்துள்ள 'எங்கேயும் காதல்' பட
விரைவில் திரைக்கு வர இருக்கிறது
'எங்கேயும் காதல்' படத்தில் காதல்
சுத்தமாக நம்பிக்கை இல்லாதவராக
நடிக்கிறாராம் ஜெயம் ரவி. காதலை
வெறுக்கும் ஜெயம் ரவி எப்படி ஹ
மீது காதல் கொள்கிறார் என்பதை
பிரபுதேவா வித்தியாசமான முறையி
கொடுத்திருக்கிறாராம்.

...ன்ஸ்

கிறார்.
ர்.
படப்பிடிப்பு
காட்சி பட
ரவ வேடத்தில்
கவல்கள்
வத்தான்
காரணத்தால்
டிக்கவுள்ளரப.

## காதல் சலித்து விட்டது - சங்கீதா

பிதாமகன் படத்தில் தனது வித்தியாசமான நடிப்பின் மூலம் திறமையை வெளிக்காட்டியிருக்கிறார் சங்கீதா. தற்போது 'தம்பிக்கோட்டை' படத்தில் வில்லியாக நடித்திருக்கிறார்.

இது பற்றி சங்கீத கூறும் போது 17 வயதில் நடிக்க வந்து. இதுவரை ஏகப்பட்ட காதலி வேடங்களில் நடித்து விட்டேன். காதல் காட்சிகள் போரடித்துவிட்டது. எனது வயதுக்கும், தோற்றத்துக்கும் ஏற்ற வித்தியாசமான பாத்திரங்களில் நடிப்பதை விரும்புகிறேன். அதனால்தான் தம்பிக்கோட்டைப் படத்தில் தாதாவாக நடிக்க சம்மதித்தேன்.

'மன்மதன் அம்பு' படத்தில் இரண்டு குழந்தைக்கு தாயாக நடித்தேன். அதுவும் புதிதில்லை. 'எவனோ ஒருவன்' படத்தில் நடுத்தர வயது பெண்ணாக நடித்தேன். மனதுக்கு பிடித்த பாத்திரம் சின்னப் படத்தில் கிடைத்தாலும் நடிப்பேன். 'புத்திரன்' படத்தில் ஒய். ஜி.மகேந்திரனுக்கு ஜோடியாக நடிக்கிறேன். இனி வரும் காலங்களில் எனது வயதுக்கேற்ற வேடங்களில் நடிக்கத் தீர்மானித்திருக்கின்றேன்.



## ...விழா

தொடர்ந்து
கோணத்தில்



## ஐந்து வேடங்களில் சூர்யா

கே.வி.ஆனந்த் -சூர்யா கூட்டணி அயன் படத்திற்குப் பின்னர் மாற்றான் படத்தில் இணைகின்றார்கள். வழக்கம் போல இரட்டை எழுத்தாளர்கள்தான். கதை தான் மாற்றான்.

இந்தப் படத்தில் சூர்யா வித்தியாசமான ஐந்து வேடங்களில் நடிக்கிறார் என தகவல்கள் வெளியாகியுள்ளன. ஐந்தில் ஒன்று ஒட்டிப் பிறந்த இரட்டை குழந்தை கதாபாத்திரம் என்றும் கூறப்படுகின்றது.

## வேலாயுதம் படப்பிடிப்பில் தடியடி

காவலன் படத்தைத் தொடர்ந்து விஜய் நடிக்கும் வேலாயுதம் படத்தின் படப்பிடிப்பு வேகமாக நடந்து வருகின்றது. கடந்த மாதம் பொள்ளாச்சியில் நடந்த வேலாயுதம் படப்பிடிப்பில் விஜயை காணும் ஆவலோடு தினசரி இருபதாயிரம் பேர் திரண்டிருந்தனர்.

இதனால் கடுப்பான காவல்துறை தடியடி நடித்தி கூட்டத்தைக் கலைத்திருக்கிறது. இதைக் கேள்விப்பட்ட விஜய், காவல் நிலையத்துக்குச் சென்று தனது வருத்தத்தை பதிவு செய்திருக்கிறார்.

## ரஜினி, விஜய்யுடன் நடிக்க ஆசை! - சமீரா ரெட்டி

வாரணம் ஆயிரம், படத்தின் மூலம் தமிழில் கதாநாயகியாக அறி முகமான சமீரா ரெட்டி ரஜனி மற்றும் விஜய்யுடன் சேர்ந்து நடிக்க ஆசை என்று கூறியிருக்கின்றார். அசல் படத்தில் அஜீத்துக்கு ஜோடியாக நடித்ததன் பின்னர் கௌதம் மேனன் இயக்கத்தில் 'நடுநிசி நாய்கள்' என்ற படத்தில் நடித்துள்ளார்.

தனது தமிழ்ப் பட அனுபவங்கள் பற்றி கருத்துத் தெரிவித்த போது, இதனை அவர் கூறியிருக்கின்றார். வாரணம் ஆயிரம் மறக்க முடியாத படம். கொஞ்ச நேரம் வந்தாலும் ரசிகர்களின் இதயத்தில் எனக்கு இடம் தந்த படம் அது. கௌதம் மேனன் திறமையான இயக்குநர். அவரது நடுநிசி நாய்கள் படத்திலும் நான் நடித்துள்ளேன். இது மர்மம் நிறைந்த கதை. சைக்கோ கொலையாளியிடம் மாட்டி அவனிடம் இருந்து தப்பிக்க போராட்டம் நடத்தும் ஒரு கல்லூரி மாணவியின் கதை இது. படம் பிரமாதமாக வந்துள்ளது. நிஜவாழ்வில் திகில் சம்பவங்களை நான் சந்தித்தது இல்லை. ரஜினியின் ரசிகை நான். அவருடன் ஜோடியாக ஒரு படத்திலாவது நடிக்க ஆசை. விஜய்யும் எனக்குப் பிடித்த நடிகர்தான். அவருடனும் நடிக்க ஆசை என்றார் சமீரா ரெட்டி.

## உறுமி படத்தில் நடிக்கவில்லை ஆர்யா

சந்தோஷ் சிவன் இயக்கும் உறுமி படத்தில் ஆர்யா, ஒரு சிறிய வேடத்தில் நடிப்பதாக தகவல்கள் வெளியாகின. இதனை ஆரியா மறுத்திருக்கின்றார். இது குறித்து அவர் அளித்த பேட்டியில் கூறியிருப்பதாவது:-

நான் உறுமி படத்தில் நடிக்கவில்லை. சந்தோஷ்சிவன் படங்களில் நான் நடிக்க ஆர்வமாக உள்ளேன். அவர் படங்களில் நடிப்பதன் மூலம் உலக அளவில் அங்கீகாரம் கிடைக்கும். பாலாவின் 'அவன் இவன்' படத்தில் உள்ள ஒலிப்பதிவு வேலைகள் முடிந்தபின் நான் வெளிநாடு செல்லவிருக்கிறேன். சில நாட்கள் அங்கு இருந்துவிட்டு மார்ச் 2ஆம் திகதி திரும்புகிறேன். அதன்பின் லிங்குசாமி இயக்கத்தில் வேட்டை என்ற படத்தில் மாதவ... சமீரா வுடன் நடிக்கவுள்... ...று கூறி... ...யா.

## ...ல் பிரகாஷ்ராஜ்

...ரத்தில் பிரகாஷ்ராஜ் நடிக்கிறார்.
...யொரு வேடத்தில் நடித்ததை
...ருமையாக கருதுகிறேன்' என்றார்
...ஜ. மதத் தலைவர் ஒருவருடைய
... பிருத்விராஜ் நடிக்கிறார். நாயகியாக
...கன்தாஸ் நடிக்கிறார்.
...க்காக குண்டுவெடிப்பு சம்பவங்கள்
...பட்டன. குண்டுவெடிப்பின் கொடூரம்
...பதை இக்காட்சி தத்ரூபமாக
...ளது. இம்மாத இறுதியில் படம்
வருகிறது.



## ...கை இல்லாதவர் ஜெயம் ரவி!

... நம்பிக்கை இல்லாதவராக
...கிறார் ஜெயம் ரவி. இது
... அல்ல படத்தில் தான்.
... இயக்கத்தில் ஜெயம் ரவி
... 'எங்கேயும் காதல்' படம்
... திரைக்கு வர இருக்கிறது.
... காதல்' படத்தில் காதல் மீது
...நம்பிக்கை இல்லாதவராக
...ாம் ஜெயம் ரவி. காதலை
... ஜெயம் ரவி எப்படி ஹன்சிகா
... கொள்கிறார் என்பதை
... வித்தியாசமான முறையில்
...ருக்கிறாராம்.

# ஆசைக்கும் அளவுண்டு

"ஒரு மனிதனின் வாழ்க்கையின் மொத்த வடிவத்தை, புரிந்து கொள்வது மிகவும் கடினமானது. ஒரு மனிதன் விட்டுச்சென்ற விடயங்களை வைத்து, அவனது வாழ்க்கையைக் கணித்துக் கொள்ள முடியுமென கூறப்படுகின்றது. இன்னும் சிலரோ, ஒருவன் கொண்டுள்ள நம்பிக்கையின் அடிப்படையில் கணிக்க முடியுமென நம்புகின்றனர். சிலர் அன்பு என்று கூடச் சொல்கின்றனர். ஏனையவர்களோ, வாழ்க்கைக்கு எந்தவித அர்த்தமுமேயில்லை என்று சொல்லிவிடுகிறார்கள்."

**ஆசைகளை அடைந்து கொள்ளும் பொருட்டு, ஒவ்வொரு தனிநபரும் தமது முயற்சிகளை முன்னெடுப்பதை தொடங்க முன்னமே, அதற்கான தன்பக்க நியாயங்களையும் காலங்காலமாக வரும் அனுமானங்களையும் யாருமே ஆராயக்கூடாதென்ற வகையில் கட்டியெழுப்பப்பட்ட சதியாலோசனைகளையும் தமக்கு வலிமை சேர்க்கும் வகையாக சேகரித்துக் கொள்கின்றான் மனிதன்.**

மனிதன் தனது பிறப்பின் ஆரம்ப அவதியிலிருந்தே, ஆசை பற்றிய அறிவோடு தான் தன்னை உருவாக்கிக் கொள்கின்றான். ஆசைகள் யாவற்றையும் துறந்த மனிதரை யாராலும் காட்ட முடிகின்றதென்றால், அங்கே பொய் சொல்லப்படுகிறது என்றே அர்த்தம் கொள்ளப்பட வேண்டும். இங்கு ஆசைகளை நீங்கள் ஒரு வரையறைக்குள் கொண்டு வந்து விடக்கூடாது.

அத்தியாவசிய தேவை, அவசியம் என்றெல்லாம் மொழி, ஆசைகளை வெவ்வேறு வகையாக பார்க்க வழி செய்து தந்திருக்கிறது. கனவுகளின் தொடர்ச்சிதான் இந்த ஆசைகளின் எழுச்சி. கனவுகள் எப்படி முக்கியமோ அது போலவே ஆசைகளும் முக்கியமானவையே என்று நீங்கள் புரிந்து கொள்ளக்கூடாது.

ஆனாலும், மனிதனாகவிருக்கும் எவனிடமும் கட்டாயம் ஆசையிருக்கும். சின்னச் சின்ன ஆசைகள் எனத் தொடங்கி, அவன் யாரிடமும் சொல்லிவிடாத ஆடம்பர ஆசைகள் என ஆசைகளின் பட்டியல் நீண்டு கொண்டேதான் இருக்கும். ஆக்கம், அழிவு என்ற இரு சொற்களின் அர்த்தங்களை ஆசைதான் அதிகமாக உணர்த்தித் தரும்.

நாம் எல்லோரும் ஆசைகளோடுதான் வாழ்கிறோம். சில நேரங்களில் எமது ஆசைகளில் ஒன்று நடந்துவிடும் போது, "அதனை நான் ஆசைப்பட்டேன், எனக்கு கிடைத்து விட்டது" என்று சொல்லி அந்த ஆசையை அம்பலப்படுத்துகிறோம். ஆனால், பல ஆசைகளை பலரும் வெளியில் சொல்வதில்லை.

இப்படி ஆசை என்கின்ற கனதியான சொல்வடிவம், வாழ்க்கைக்கு தரும் அர்த்தங்கள் ஆச்சரியங்கள் நிறைந்தவையே. ஆசைகளின் பட்டியல் என்பது ஒவ்வொருத்தர் சார்பிலும் வேறுபடும். நாம் ஆசை கொண்டுள்ள விடயங்களை அடைந்துவிட வேண்டுமென்கின்ற ஆசை, எப்போதும் ஆசையின் வலிமையைச் சொல்லித்தரும்.

புராதன எகிப்தில் வாழ்ந்த மக்களிடம் மரணம் பற்றிய நம்பிக்கையொன்று இருந்தது. அவர்களில் யாரும் மரணித்துவிட்டால், அவர்கள் சுவர்க்கத்தின் நுழைவாயிலில் வைத்து இரண்டு கேள்விகள் கேட்கப்படுவார்கள். அந்த இரண்டு கேள்விக்குமான பதில்களே அவர்கள் சுவர்க்கத்திற்கு நுழையக்கூடியவர்களா இல்லையா என்பதைத் தீர்மானிக்கும்.

இவ்வாறு ஆசைகளை அடைந்து கொள்ளும் பொருட்டு, ஒவ்வொரு தனிநபரும் தமது முயற்சிகளை முன்னெடுப்பதை தொடங்க முன்னமே, அதற்கான தன்பக்க நியாயங்களையும் காலங்காலமாக வரும் அனுமானங்களையும் யாருமே ஆராயக்கூடாதென்ற வகையில் கட்டியெழுப்பப்பட்ட சதியாலோசனைகளையும் தமக்கு வலிமை சேர்க்கும் வகையாக சேகரித்துக் கொள்கின்றான் மனிதன்.

---

# தேன் கிண்ணம்

## உனக்குத்தான் தெரியும்

நீ நல்லவன் என்று நினைக்கிறாய்
நல்லதைச் செய்வதாகச் சொல்கிறாய்
பிழையே செய்வதில்லை
என்று அடம்பிடிக்கிறாய்.
ஆனால் உன்மீது பழிகள்...
ஒன்றல்ல; இரண்டல்ல...

நீ செல்லும் வழியில்
காகத்தின் குஞ்சு கரணமடிக்கிறது
சிறகை விரிக்கிறது; எழும்பிப் பறக்கிறது
கீழே விழுகிறது; இப்படியே பல தடவை
உனக்கோ இளகிய மனம்-
அடுத்தவர்கள் கல்லெறிந்து ரசிக்க
நீ மட்டும் அதைப்பிடிக்க நினைக்கிறாய்
மெதுவாய் அதைப் பிடித்து
பற்றை மறைவில் விடுவதற்கு
உன் மனம் துடிக்கிறது
நீ நினைப்பது எவ்வளவு அழகானது?

உன் கரங்கள் குஞ்சின் மீது பதிய
நீ எதிர்பாராமல் உன் தலையில்...
தாய்ப்பறவை குண்டு போடுகிறது
துரத்தித் துரத்திக் கொத்துகிறது
தாங்க முடியாத துயரத்தில் நீ...
இப்பொழுதும் நீ செய்வது
உ[illegible]னே தெரியும்!

"ம[illegible]னா"



## தாய்மை

கருவறைத் தசையில்
நெஞ்றை சுமையோடு
மாதம் பத்து காத்து
உயிருக்கு வித்திட்டவள்...

வஞ்சியவள் பாலகன்
பிஞ்சு விரல் பிடித்து...
கொஞ்சியொரு முத்தம்.

சத்தமிலாது துயில்கையிலே...
நெஞ்சோடு குஞ்சாய்
அடைகாக்கும் -தாய்மை
பெண்ணவளே...

யாழ். அஞ்சனா,
கல்லுவம்

## காணாமல் போன (அ)வள்...

எனது உயரம் இருப்பாள்
கொலுசு கூச்சப்பட நடப்பாள்.
யாரையும் நிமிர்ந்து பார்க்க மாட்டாள்
கன்னத்தில் குழி விழச்சிரிப்பாள்
பேர் ஊர் தெரியாது– ஆனால்
தமிழ் பேசுவாள்
பஸ்சில் ஜன்னல் ஓரத்தில்தான்
உட்கார்ந்து பயணிப்பாள்
தாவணி அணிந்திருப்பாள் –அழக்கடி
துப்பட்டாவை சரிபார்ப்பாள்
கீழ் உதட்டின் ஓரத்தில் –ஒரு
மச்சமும் இருக்கிறது
உள்ளங்கையில் மருதாணி
பூசி இருப்பாள்.
கைக்குட்டையை கசக்கி பிடித்திருப்பாள்
அவள் மாதிரி எவளும்
இல்லை – பூக்களுக்குத்தான்
அவள் சாயல் சாதுவாய் இருக்கிறது
மேலும் சொல்வதானால்... கூந்தல்
இரவைப்போலவும்
முகம் நிலவைப் போலவும் இருக்கும்
கடைசியாய் மஞ்சள் தாவணியில்தான்
காணாமல் போனாள்.
தகவல் தெரிந்தவர்கள் தொடர்புகொள்ளவும்
கேட்கும் சன்மானம் வழங்கப்படும்–அது
என் உயிர் என்றாலும் பரவாய் இல்லை...

நெடுந்தீவு–முகிலன்



## நீயே

என் கண் தேடும் முகம் நீயே
மனம் தேடும் காதல் நீயே
சுவாசம் தேடும் மூச்சு நீயே
தூக்கம் தேடும் மடி நீயே.

என் இருள் தேடும் வெளிச்சம் நீயே
நிலா தேடும் வானம் நீயே
அலை தேடும் கரை நீயே
ஆசை தேடும் பெண்ணும் நீயே.

யோ.சுதர்ஷன்,யாழ்ப்பாணம்

## புரிந்தது உயிரின் உன்னதம்

முழுநிலாக் காலத்தின்
ராத்திப் பொழுதொன்றில்
முள்ளிவாய்க்கால்
மணல்தனில்
முகவரிகள் தொலைத்துவிட்டு
உயிர்வாழும் போராட்டத்தின்
உக்கிரத்தில்
உ[illegible]ணக் கரம்பிடித்தேன்
உணர்வுகள் சங்கமிக்காத
புரிதலின்றிய இதயங்கள்
ஏதோ ஒன்றை மட்டும்
புரிந்து கொண்டன
அதனால் தான் பிரிதலின்றி
இதுநாள் வரை நானும் நீயும்.

ஆஷா -யாழ்ப்பாணம்

## எழுதப்படாத முன்னுரை...

சோக தாகங்களால்
குவிக்கப்பட்டிருக்கின்ற
வாழ்க்கையின் ஒவ்வொரு
விடியல்களும்:

உணர்வுகள் உறைந்து
கரைந்து போய்
இலட்சியக் கோபுரங்கள்
வீழ்ந்த எதிர்பாரா
உண்மைகளால்
எதிர்பார்த்த உண்மைகள்
சிதறியடிக்கப்பட்டது...
விதியா? சதியா?

துப்பித் தீர்த்த
உரையாடல்களும்
இலஞ்சங்களால்
வரைவிலக்கணப்படுத்தப்பட்ட
எதிர்காலமும் என்று மாறுமோ.

முற்றத்து வீட்டின்
பக்கத்துப் பார்வை
முற்றத்து வீம்பின்
முடிசூடா வாழ்வுக்கு
வழிவகுக்க முடிவு
காணப்படும்
எம்; இறைவனால்
என்றாவது ஒரு நாள்; அப்போது
என் கண்கள் விழிக்கும்.

கர்ப்பப் பைக்குள்
நீண்ட கர்ப்பச்சுருள்
அநீதிகளின் உலகை
எட்டிப் பார்த்துத் தவிக்கிறது.

இன்றைய சமூகங்களே!
உங்களிடமோர் வேண்டுகோள்
யாதெனில்
நம் சமூகம் வாழட்டும்
இலஞ்சங்கள் ஒழியட்டும்
தற்போதுதான் ஊருக்கு
உரமிட்டிருக்கிறோம்-இன்னும்
எவ்வளவோ வளர
வேண்டியிருக்கிறது - விடுங்கள்
வளரட்டும் எம் சமூகம்!!!

நஸார் M.இஃஜாஸ்,
கிண்ணியா–05

# Welcome லேடீஸ் ஸ்பெஷல்



பெண்கள் பக்கம்...

## குழந்தைகளைத் தண்டிக்காதீர்கள்



பெற்றோர்கள் குழந்தைகளின் உள் உணர்வுகளை நன்கு புரிந்து கொள்ள வேண்டும். வேண்டாத நடவடிக்கைகளுக்காக குழந்தைகள் மீது பழி சுமத்த வேண்டாம் இதற்காக மனமுடைந்து இருக்கவும் வேண்டாம். எவ்வளவு திட்டினாலும், தண்டனை தந்தாலும் முன் எச்சரிக்கை செய்தாலும், எதிர்மறை குறிப்புகளாலும், குழந்தைக்கு எந்தவித பயனும் உதவியும் இல்லை.

எப்பொழுதெல்லாம் குழந்தைகள் ஏமாற்றம், கோபம் அல்லது எதிர்பார்த்தது நடக்காவிடில் போன்ற உணர்வுகளால் தாக்கப்படுகிறார்களோ அப்பொழுதெல்லாம் அவர்கள் உடனே அழுவார்கள். பொருட்களை கோபத்துடன் உடைப்பார்கள் தரையில் விழுந்து புரளுவார்கள் உதைப்பதோ அல்லது முட்டுவதோ, மூச்சைப் பிடித்து கத்துவதோ செய்வார்கள். இத்தகைய நடத்தைகள் நடக்க விடக்கூடாது. இதற்காக ஊக்கமளித்தலும் கூடாது. பெற்றோர் குழந்தையின் சில செயல் களைத் தடுத்தால், அவர்கள் ஏன் அப்படிச் செய்தார்கள் என்பதையும் விளக்க வேண்டும். தவறான வழியில் செல்லும் குழந்தையைத் தடுத்து, சரி செய்ய வேண்டும்.

தண்டனை என்பது ஒரு பரிகாரமானது. சில பெற்றோர் தண்டனை தொடர்பான ஏதாவது விஷயங்கள் தேவை என நினைக்கின்றனர். குழந்தைகளை அடிக்கடி அடிக்கும் பழக்கம் நல்லதன்று. இது அவர்களை முழுதான ஆளுமையோடு வளரச் செய்யாது. அவர்கள் உடல் மன வளர்ச்சி குன்றிவிடும். சில பெற்றோர்கள் குழந்தைகளை அடிக்கவும், காதுகளை இழுத்துத் திருகி தப்பான வழிமுறைகளை கையாளுகிறார்கள். இத்தகைய குழந்தைகள் பிற்காலத்தில் சில தவிர்க்க முடியாத பிரச்சினைகளோடு வாழ்வார்கள். பெற்றோர்களே இதைக் கொஞ்சம் குறைப்பது நல்லதாகும்.

இன்றைய குழந்தைகள்தான் நம் நாட்டின் நாளைய குடிமகன்கள் என்பதை மறந்துவிடக் கூடாது. ஐரோப்பிய நாடுகளில் மாணவர் மீது அடி பட்டால் அது ஒரு குற்றவியல் சார்ந்த செயலாகவே எண்ணுகிறார்கள். வீட்டில் தண்டனை மற்றும் பள்ளியில் தண்டனையெல்லாம் தற்போது மறைந்த, தீய கனவு ஆகிவிட்டது. குழந்தைகள் தவறு செய்ய நேர்ந்தால், அவர்களுக்கு எச்சரிக்கை செய்யுங்கள். ஆனால் தண்டனை மட்டும் கொடுக்காதீர்கள். குழந்தைகளை சிந்திக்க அனுமதியுங்கள். அவர்களுக்கும் மூளை இருக்கிறது.

## சந்தோஷமாக இருக்கவேண்டுமா?

**நண்பர்களே!** பதற்றம் இல்லாமல் சிரித்துக் கொண்டே சந்தோஷமாக இருக்க ஆசையா? ஆசை மட்டும் இருந்தால் போதாது. அதற்காக சில செயல்களை நிச்சயமாக நாம் செய்யவேண்டும். அப்போது தான், நம்மால் பதற்றமில்லாமல் இருக்க முடியும்.

மற்றவரை மன்னியுங்கள்.! தவறு செய்வது மனித இயல்பு. எனவே, உங்களுக்கு பிறர் தீங்கு செய்யும் போது, அந்த தவறை நீங்கள் மன்னித்துவிடுங்கள். போன முறை அவன் தவறு செய்தான் மன்னித்தேன் இனியும் என்னால் முடியாது என்று கூறாதீர்கள். நீங்கள் பிறரை மன்னிக்க உங்கள் மனம் பண்படும். அதோடு, உங்களால் நிம்மதியாகவும் இருக்க முடியும். மருத்துவ ரீதியாகவும் இதற்கு நல்ல பலன் உண்டு.

ஒருவரை நீங்கள் மன்னிக்க முடியாமல் இருக்கும் போது, அவரைப் பார்த்த உடனேயே அவர் உங்களுக்கு செய்த தீங்கு தான் நினைவிற்கு வரும். அதனால், அவர் மீது கோபம் வரும். அந்த கோபம் பதற்றமாக மாறும். இதனால் உங்களுடைய இரத்த அழுத்தம் உயரும். இந்த இரத்த கொதிப்பு உங்களுக்கு பலவிதமான நோய்களை ஏற்படுத்தும். எனவே,'மறப்போம் மன்னிப்போம்' என்பதை உங்கள் தாரக மந்திரமாக வைத்துக் கொள்ளுங்கள். அதேபோல், நீங்கள் செய்யும் தவறுகளுக்கு மற்றவர்களிடம் மன்னிப்பு கேட்கத் தயங்காதீர்கள்.

உங்களை விட வயதிலோ, வசதியிலோ அல்லது ஏதோ ஒரு விதத்தில் தகுதி குறைவாக இருந்தாலும், அதைப் பொருட்படுத்தாமல், உங்கள் தவறை மட்டும் மனதில் கொண்டு மன்னிப்புக் கேளுங்கள். அப்படி நீங்கள் மன்னிப்பு கேட்கும் போது, உங்கள் எதிராளி நிச்சயம் பெருந்தன்மையாக நடந்து கொள்வார் என்பதில் சந்தேகம் வேண்டாம். அப்படி எதிராளி மன்னிக்கா விட்டாலும், கவலையை விடுங்கள்.




ப்ளீஸ், தாங்க்யூ, சொரி ஆகிய வார்த்தைகளை அடிக்கடி பயன்படுத்துங்கள். இந்த வார்த்தைகள் உங்களை எப்போதும் மகிழ்ச்சியாக வைத்திருக்க உதவும். அதே போல், வணக்கம், வாருங்கள் போன்ற சொற்களையும் தேவையான இடத்தில் தவறாமல் பயன்படுத்துங்கள். அவை உங்களை பண்புள்ளவர்களாகக் காட்டும். என்ன இதெல்லாம் செய்ய நீங்க ரெடியா? இனி சந்தோஷமாய் இருங்கள். வாழ்க்கை வாழ்வதற்கே!

## முகம் பளபளக்க...

**வீட்டிலேயே** கிடைக்கக் கூடிய பொருட்களைக் கொண்டு நம் வறண்ட சருமத்தை அழகாக பாதுகாப்பது எப்படி என்று பார்ப்போம்.

வறண்ட சருமம் உள்ளவர்கள் முகத்தில் பாலைத் தடவி, சிறிது நேரம் கழித்துக் கழுவலாம். அல்லது பன்னீர் இருந்தால் பாலையும் பன்னீரையும் கலந்து முகத்தில் தேய்த்து பதினைந்து நிமிஷங்கள் ஊறவைத்துப் பின் கழுவினால் முகம் பளபளப்பாக இருக்கும்



பயத்த மாவுடன் தேனும், பன்னீரும் கலந்து முகத்திற்குப் பேக் போட்டு ஊறவைத் துக் கழுவலாம். தேன் உபயோகிக்கும் பொழுது சுத்தமானதாக இருப்பது நல்லது. கசகசாவை வெந்நீரில் இரவில் ஊறவைத்து விட வேண்டும். அதைக் காலையில் அரைத்து முகம், கழுத்து போன்ற இடங்களில் தேய்த்து அரைமணிநேரம் ஊறவிட வேண்டும். மஞ்சள் வாழைப்பழத்தை நன்றாகக் கூழாக்க வேண்டும். இதில் பொட்டாசியம் சத்து அதிகம் இருக்கிறது. இத்துடன் தேன் கலந்து முகத்திலும், கழுத்திலும் பேக் போடவேண்டும். வெறும் அரை வாழைப்பழத்திற்கு 2 தேக்கரண்டி தேன் சேர்ப்பது போதுமானது. இந்த பேக்கை 15 முதல் 20 நிமிடங்கள் வரை ஊறவைத்துப் பின் முகம் கழுவினால் வேண்டும்.

ஒரு முட்டையை உடைத்துப் பால் சிறிதளவு, ரோஜா ஒயில், இரண்டு அல்லது மூன்று சொட்டுக்கள் சேர்த்து முகத்தில் தடவவும். பத்து நிமிடம் கழித்து முகத்தைக் குளிர்ந்த நீரில் கழுவினால் உலர் சருமத்திற்கான ஊட்டச்சத்து முட்டையின் மூலம் கிடைக்கும். பொதுவாக உலர்ந்த சருமம் உடையவர்கள் குளிர்ந்த நீரில், சாதாரண நீரில் முகம் கழுவுதல் நல்லது.

## விழியும் பொழுது...

காலையில் விழித்தெழும்போது, இன்றைய தினம் செய்ய வேண்டிய வேலைகள் என்னென்ன என்று சிந்தித்துக் கொண்டே எழுந்தால், பதற்றம் தானாகவே தொற்றிக் கொள்ளும். இதைத் தவிர்க்கலாம். கீழ்க்குறிப்பிடப்படும் விடயங்களை நீங்களும் பின்பற்றினால் பதற்றம் குறையும்

ஏற்கனவே, முதல் நாள் இரவே, அடுத்த நாள் செய்ய வேண்டிய வேலைகள், தொடர்பு கொள்ள வேண்டிய நபர்கள், வாங்க வேண்டிய பொருட்கள் என முக்கியமான வேலைகளை ஒரு பேப்பரில் எழுதி விட்டு, நிம்மதியாகப் படுத்துத் தூங்க வேண்டும்.

அடுத்த நாள் எழும்போது, இதைப் பற்றிய சிந்தனையே இல்லாமல், இனிமையான சங்கீதம் கேட்க வேண்டும். பல் துலக்குவது, தேநீர் குடிப்பது, காலைக் கடன்களை முடிப்பது உட்பட முதல் அரைமணி நேர வேலைகளை செய்து முடித்தபின், முதல் நாள் இரவு எழுதிய பட்டியலைப் பார்த்துக் கொண்டால், எந்தெந்த வேலைகளை முதலில் செய்வது என்ற தெளிவு பிறக்கும்.

ஒரு வேலை செய்து கொண்டிருக்கும்போது, தேவையற்ற விஷயங்களை மனதில் அசை போட வேண்டாம். அதுவே உங்களுக்கு ஆபத்தாய் அமைந்து விடும். முழுமையான பணி செய்த திருப்தி ஏற்படாது. மன நிம்மதி கெடும். மேலே சொல்லப்பட்டுள்ள விஷயங்கள் அனைத்தையும் பின்பற்றுவது மிகவும் கடினம் தான். வாழ்க்கையில் சந்தோஷமும் நிலைப்பதில்லை. துன்பங்களும் நிலைப்பதில்லை. இன்றைய தினத்தில் உள்ள கடமைகளையும், பணிகளையும் சீராகச் செய்யும்போது கிடைக்கும் நிம்மதியுடன், திருப்தியாக வாழப் பழகிக் கொள்ளுங்கள்.

## சமையல் குறிப்பு

### அசோகா அல்வா

**தேவையானவை:**

பயற்றம் பருப்பு - 1 கப்
சர்க்கரை - 3 கப்
கோதுமைமா - 1/4 கப்
நெய் - 2 கப்
கிராம்புப் பொடி - 1/2 மேசைக்கரண்டி
முந்திரி - கொஞ்சம்
கேசரி பவுடர் - கொஞ்சம்

**செய்முறை:**

பயற்றம் பருப்பை இலேசாக வெறும் வாணலியில் வறுத்து அடுப்பில் நன்கு குழைய வேக வைக்கவும். நெய்யில் முந்திரிப் பருப்பை வறுக்கவும். எண்ணெயில் கோதுமை மாவை சிவக்க வாசனை வரும் வரை வறுக்கவும். அதனுடன் வெந்த பருப்பு, சீனி, கேசரி பவுடர் சேர்த்துக் கிளறி, கிராம்புப் பொடி சேர்த்து நன்கு சுருண்டு வந்தவுடன் நெய்யில் வறுத்த முந்திரி சேர்த்து தட்டில் போட்டு வில்லைகள் போடவும்.

## வாரம் ஒரு அதிர்ஷ்டசாலி

**பரிசுப் போட்டி இல :- 258**

கேள்வி : மகிழ்ச்சியாக இருக்க உதவும் வார்த்தைகள் எவை?

பரிசு 1000/- ரூபா.

விடையைப் பக்கத்திலுள்ள கூப்பனில் எழுதி, தபாலட்டையில் அனுப்பி வைக்கவும்.
அனுப்பி வைக்க வேண்டிய முகவரி:

**வாரம் ஒரு அதிர்ஷ்டசாலி, பரிசுப் போட்டி இல : 258**
**தினமுரசு வாரமலர், த.பெ.இல : 1772, கொழும்பு, த.பெ.இல - 167, யாழ்ப்பாணம்.**
அனுப்ப வேண்டிய கடைசித் திகதி:- **28.02.2011**

சரியான விடையை எழுதியவர்களில் ஒருவர் குலுக்கல் முறையில் தெரிவு செய்யப்படுவார்.

பரிசுப் போட்டி இல:- 256 இற்கான விடை:-ரெல்வெரட்டால்.
பரிசு பெறும் அதிர்ஷ்டசாலி திருமதி.வி.சிறிதேவி, செம்பாடுவீதி, அல்லையம்பதி, துன்னாலை, கரவெட்டி

258

பெயர் : ..........
முகவரி : ..........
..........
..........
தே.அ. அட்டை இல : ..........
விடை : ..........
கையொப்பம் : ..........

# உலகக் கிண்ணம்

ICC Cricket World Cup 2011

## உலகக் கிண்ணம் போட்டியில் களமிறங்கும் அணிகள் பிரிவு அடிப்படையில்

| A | B |
|---|---|
| அவுஸ்திரேலியா | இந்தியா |
| பாகிஸ்தான் | தெ.ஆபிரிக்கா |
| நியூசிலாந்து | இங்கிலாந்து |
| இலங்கை | மே.இந்தியத் தீவுகள் |
| சிம்பாப்வே | பங்களாதேஷ் |
| கனடா | அயர்லாந்து |
| கென்யா | நெதர்லாந்து |

## நிறைவடைந்த சுற்றுப் போட்டிகள்

| வருடம் | WINNER | RUNNERS UP | VENUE |
|---|---|---|---|
| 1975 | மே.இந்தியத் தீவுகள் | அவுஸ்திரேலியா | இங்கிலாந்து |
| 1979 | மே.இந்தியத் தீவுகள் | இங்கிலாந்து | இங்கிலாந்து |
| 1983 | இந்தியா | மே.இந்தியத் தீவுகள் | இங்கிலாந்து |
| 1987 | அவுஸ்திரேலியா | இங்கிலாந்து | உபகண்டம் |
| 1992 | பாகிஸ்தான் | இங்கிலாந்து | அவுஸ்/நியூசிலாந்து |
| 1996 | இலங்கை | அவுஸ்திரேலியா | உபகண்டம் |
| 1999 | அவுஸ்திரேலியா | பாகிஸ்தான் | இங்கிலாந்து |
| 2003 | அவுஸ்திரேலியா | இந்தியா | தென் அபிரிக்கா |
| 2007 | அவுஸ்திரேலியா | இலங்கை | மே.இந்தியத் தீவுகள் |
| 2011 | யாருக்கு... | | |

## போட்டி அட்டவணை

| திகதி | நாடுகள் | நடைபெறும் நகரம் | நேரம் |
|---|---|---|---|
| | **பெப்ரவரி** | | |
| 19 | பங்களாதேஷ் எதிர் இந்தியா | டாக்கா | 14.30 |
| 20 | நியூசிலாந்து - கென்யா | சென்னை | 9.30 |
| 20 | இலங்கை - கனடா | ஹம்பாந்தோட்டை | 14.30 |
| 21 | அவுஸ் - சிம்பாப்வே | அகமதாபத் | 14.30 |
| 22 | இங்கிலாந்து - நெதர்லாந்து | நாக்பூர் | 14.30 |
| 23 | பாகிஸ்தான் - கென்யா | ஹம்பாந்தோட்டை | 14.30 |
| 24 | தெ. ஆபிரிக்கா - மே.இ.தீவுகள் | நியூடில்லி | 14.30 |
| 25 | அவுஸ் - நியூசிலாந்து | நாக்பூர் | 14.30 |
| 25 | பங்களாதேஷ் - அயர்லாந்து | டாக்கா | 9.30 |
| 26 | இலங்கை - பாகிஸ்தான் | கொழும்பு | 14.30 |
| 27 | இந்தியா - இங்கிலாந்து | பெங்களூர் | 14.30 |
| 28 | மே.இ.தீவுகள் - நெதர்லாந்து | நியூடில்லி | 14.30 |
| 28 | சிம்பாப்வே - கனடா | நாக்பூர் | 9.30 |
| | **மார்ச்** | | |
| 01 | இலங்கை - கென்யா | கொழும்பு | 14.30 |
| 02 | இங்கிலாந்து - அயர்லாந்து | பெங்களூர் | 14.30 |
| 03 | தெ.ஆபி - நெதர்லாந்து | மொகாலி | 9.30 |
| 03 | பாகிஸ்தான் - கனடா | கொழும்பு | 14.30 |
| 04 | நியூசிலாந்து - சிம்பாப்வே | அகமதாபாத் | 9.30 |
| 04 | பங்களாதேஷ் - மே.இ.தீவுகள் | டாக்கா | 14.30 |
| 05 | இலங்கை - அவுஸ்ரேலியா | கொழும்பு | 14.30 |
| 06 | இந்தியா - அயர்லாந்து | பெங்களூர் | 14.30 |
| 06 | இங்கிலாந்து - தெ.ஆபிரிக்கா | சென்னை | 14.30 |
| 07 | கென்யா - கனடா | நியூடில்லி | 14.30 |
| 08 | பாகிஸ்தான - நியூசிலாந்து | பல்லேகலே | 14.30 |
| 09 | இந்தியா - நெதர்லாந்து | நியூடில்லி | 14.30 |
| 10 | இலங்கை - சிம்பாப்வே | பல்லேகலே | 14.30 |
| 11 | மே.இ.தீவுகள் - அயர்லாந்து | மொஹாலி | 9.30 |
| 11 | பங்களதேஷ் - இங்கிலாந்து | சிட்டாகொங் | 14.30 |
| 12 | இந்தியா - தெ. ஆபிரிக்கா | நாக்பூர் | 14.30 |
| 13 | நியூசிலாந்து - கனடா | மும்பாய் | 9.30 |
| 13 | அவுஸ்திரேலியா - கென்யா | பெங்களூர் | 14.30 |
| 14 | பாகிஸ்தான் - சிம்பாப்வே | பல்லேகலே | 14.30 |
| 14 | பங்களாதேஷ் - நெதர்லாந்து | சிட்டாகொங் | 14.30 |
| 15 | தெ.ஆபிரிக்கா - அயர்லாந்து | கொல்கத்தா | 14.30 |
| 16 | அவுஸ்திரேலியா - கனடா | பெங்களூர் | 14.30 |
| 17 | இங்கிலாந்து - மே.இ.தீவுகள் | சென்னை | 14.30 |
| 18 | இலங்கை - நியூசிலாந்து | மும்பாய் | 14.30 |
| 18 | அயர்லாந்து - நெதர்லாந்து | கொல்கத்தா | 9.30 |
| 19 | அவுஸ்ரேலியா - பாகிஸ்தான் | கொழும்பு | 14.30 |
| 19 | பங்களாதேஷ் - தெ.ஆபிரிக்கா | டாக்கா | 9.30 |
| 20 | சிம்பாப்வே - கென்யா | கொல்கத்தா | 14.30 |
| 20 | இந்தியா - மே.இ.தீவுகள் | சென்னை | 14.30 |
| 23 | கால் இறுதிப்போட்டி | டாக்கா | 14.30 |
| 24 | கால் இறுதிப்போட்டி | கொழும்பு | 14.30 |
| 25 | கால் இறுதிப்போட்டி | டாக்கா | 14.30 |
| 26 | கால் இறுதிப்போட்டி | அஹமதாபாத் | 14.30 |
| 29 | அரையிறுதிப்போட்டி | கொழும்பு | 14.30 |
| 30 | அரையிறுதிப்போட்டி | மொஹாலி | 14.30 |
| | **ஏப்ரல்** | | |
| 02 | இறுதிப்போட்டி | மும்பாய் | 14.30 |

## கவனம்: இளிய எதிரி முன்னால்...

ஜோசப் கிருஸ்ணா

உலகக் கிண்ணக் கிரிக்கெட் போட்டிகள் எமது வாசல்கதவைத் தட்டிக் கொண்டிருக்கின்றன. இந்த நிலையில் தரவரிசையில் முதன்மை வாய்ந்த நான்கைந்து அணிகள் பற்றிய அலசல்கள் நிறைய இருக்குமே தவிர இதர அணிகளை ரசிகர்கள் கண்டு கொள்வதே இல்லை. பங்களா தேஷ் அணியும் அப்படித்தான் ஒரு காலத்தில் இருந்தது. ஆனால் கடந்த ஒரு சில வருடங்காளாக பங்களாதேஷ் ஒரு சில நாடுகளை உலுப்பிவிட்டது. குறிப்பாக மண்வாசனை அறிய வந்த நியூசிலாந்து அணியையும் சிம்பாப்வே அணியையும் பங்களாதேஷ் புளுதியில் போட்டு புரட்டியதற்கும் பிறகு திடீரென்று இவர்கள் பற்றிய ஆச்சரியக் கலந்துரையாடல்கள் ரசிகர்கள் மத்தியில் தீயெனப் பற்றிக் கொண்டது.

இம்முறை உலகக் கிண்ண முதல் போட்டி வங்கதேசத்திலேயே நடைபெறவுள்ளது. அதுவும் பங்களாதேஷ் அணிக்கும் இந்தியாவுக்கும் இடையில் நடைபெறவுள்ள போட்டி பல்வேறு உணர்வலைகளை உருவாக்கியுள்ளது. அதுவும் இந்திய அணி மிகப் பலமானது என்றாலும் இந்திய ரசிகர்களுக்கும் சிறிது சலனம் தான். ஏனெனில் கடந்த உலகக் கிண்ணப் போட்டிகளில் முதலாவது சுற்றில் இவர்கள் இந்தியாவைக் கவிழ்த்ததை இலகுவில் மறக்க முடியாது. அதேபோல இரண்டாவது சுற்றில் தென்னாபிரிக்காவைச் சரித்தார்கள். எனவேதான் இம்முறை .அப்படி ஏதும் நடந்துவிடக் கூடாதே என்ற தவிப்பில் சில தரப்பார் சற்றுப் பதறுகிறார்கள். மேலும் குறூப் ஆட்டங்கள் எல்லாம் பங்களாதேஷ் அணிக்குத் தம் மண்ணிலேயே அமைகின்றன. இது ஒரு பிளஸ் பொயின்ட். இவர்கள் சந்திக்கப் போகும் பலமான அணிகள் என்றால் இந்தியா, தென்னாபிரிக்கா, இங்கிலாந்து, மே.இந்தியத் தீவுகள், இந்த வகையில் ஜாம்பவான்களில் யாரை யாவது தோற்கடித்து அயர்லாந்து, மற்றும் நெதர்லாந்திடம் தோற்காமல் இருந்தால் கால் இறுதி இவர்களுக்கு நிச்சயம் என்கிறது கணிப்பு.

இம்முறை எப்படியும் முன்னைய காலங்களை விட அதிக மேம்பாட்டைக் காட்டும் என்பது விமர்சகர்கள் கணிப்பு. இதுவரை உலகக்கிண்ணப் போட்டிகளில் இருபது ஆட்டங்களில் நான்கில் மட்டுமே இவர்கள் வென்றிருக்கிறார்கள். இதுவரையில் அரை இறுதிப் போட்டிகளுக்கு தகுதி பெறவும் இல்லை. ஆனால் இந்தத் தரவு-களைக் கூறி பங்களாதேஷைக் குறைத்து மதிப்பிட யாரும் தயாராக இல்லை. சாகிப் உர் அசன் என்ற பெயரில் அற்புதமான தொரு வீரர் அணித் தலைவராக இருக்கிறார். உலகின் எந்தப் பலமான தேசிய அணியின் வாசற்கதவும் இவருக்காகத் திறந்திருக்கும். ஏனைய வீரர்கள் அண்மைக்காலத்தில் தம்மை நிருபித்திருக் கிறார்கள். எனவே இம்முறை பங்களாதேஷ் அணியுடன் மோதும் எந்தக் கொம்பனுக்கும் RED ALERT நிலையில் இருப்பது அவசியம்.

காலம் காலமாகக் கூறப்பட்டுவந்த பங்களாதேஷ் அணி யின் குறைகளின் எண்ணிக்கை குறைவடைந்து கொண்டே செல்கிறது. நிறைவுகள் அதிகரித்து ஆச்சரியப்பட வைக்கின்றன. எனவே கிரிக்கெட் ரசிகர்கள்



ஆச்சரியங்களை எதிர்பார்க்கலாம். வங்கத்தின் சிங்கங்கள் இம்முறை தங்கள் பாய்ச்சலைக் காட்டத் துடித்துக் கொண்டிருப் பார்கள். அதுவும் தம் சொந்த மண்ணில் மண்வாசனை என்பது உயர்ந்த தல்லவா?

# அவசரமானதும் அவசியமானதும் யதார்த்தமான சுயவிமர்சனமே!




**உலகின்**

நான்காவது பெரிய இராணுவத்தைத் துரத்திய, இந்தப் பிராந்தியத்தையே அச்சுறுத்தும் விதமாக முப்படைகளையும் வைத்திருந்த, குறுக்கிடுவதை எல்லாம் அகற்றுவதில் ஈவிரக்கமற்ற, குற்றங்களை மன்னிக்காத, பழிக்குப் பழிவாங்கியே தீரும், தன் மக்களுக்காகக் கண்ணுறக்கமில்லாமல் திட்டமிடும் ஒரு தலைவரையும் கொண்டிருந்ததாகக் கூறப்பட்ட புலிகள் இயக்கம்,

புத்தி குறைந்ததும்(!) வீர மரபில் வந்திராததுமான ஒரு இராணுவத்திடம் ரியூப்பில் காத்துப் போனது போல ஒரே-யடியாகத் தோற்று, அதாவது கடைசி-வரை மக்களைப் பாதுகாத்துக் கொள்ளும் மனோ பாவத்தைக் காட்டாமல் பாசிஸ விறைப்புடனேயே படார் முடிவெய்தி இரண்டு வருடங்களாகப் போகின்றன.

இன்னமும் அந்தத் தோல்வியின் காரணங்களை சுயவிமர்சனமாக நமக்குள் பரிசீலித்து ஒப்புக்கொள்ள நாம் தயாராகவில்லை. 'மக்களை மேய்த்த' கொலைமாவீரப் பிரலாபங்களின் மாயை, நம்மிடையே "படித்தவர்கள்" என நம்பப்பட்டு இருந்தவர்களும் மக்களுக்குக் காட்டிய "ஃபிலிம்" அல்லது இராணு-வவாதப் புல்லரிப்பு, நீதியை மனித அறத்தைக் காலின் கீழ் மிதித்துவிட்டு அவர்கள் பேசிய "விடுதலை" நியாயம், உலகையே நிராகரித்துவிட்டு உருவாக்கிக் கொண்ட "தமிழ்ஞாயம்", சாத்தியமில்லை எனத் தெரிந்த பிறகும் தனிநாட்டைச் சொல்லி உயிர்களை அழித்ததும், கடைசிவரை மக்களின் கண்களைப் பொத்தியபடியே கூட்டிச்சென்று கவிழ்த்ததும், வைகோ-சீமான்-உலகத்தமிழ் வகையறாக் கோமாளித்தன மோட்டுத்தனங்களோடு சமூக முதுகுநாணை முறித்து இந்தக் கதியில் கொண்டுவந்து விட்டிருப்பதும்." ஏன்? எதனால்? நம் தவறுகள் என்ன? நம்மை இனி மாற்றிக் கொள்வதாயின் எங்ஙனம்? என்ற சுயவிமர்சனங்களை நம்மவர்களிடமிருந்து காணமுடியவில்லை. அதுகுறித்த பிரக்ஞையும் வந்ததாகத் தெரியவில்லை.

இப்போதும் கூட, இந்தியா ஏமாற்றிவிட்டது, உலகநாடுகளும் கூட இலங்கையரசுக்கு சார்பாக நின்று நம்மைத் தோற்கடித்துவிட்டன, 'ச்சாய்' நம் மக்கள் இன்னும் கொஞ்சம் கூடச் செத்திருந்தால் ஒருவேளை ஐ.நா.வோ அமெரிக்காவோ வந்து இலங்கைப்படைகள் மீது குண்டு போட்டிருக்காதா என்றெல்லாம்தான் சிந்திக்க முடிகிறதே தவிர, நாம் நமக்குக் கிடைத்த எந்தெந்த சந்தர்ப்பங்களையெல்லாம் கோட்டை விட்டு வீணாய்க் கொத்துக் கொத்தாக அழிந்தோம் என்ற திசைக்கே நம் எண்ணத்தைத் திருப்ப முடியவில்லை. நாம் வாழ வேண்டுமானால், விட்டுவிட வேண்டிய வீம்புகளும் கவனத்தில் கொள்ள வேண்டிய யதார்த்தமும் பற்றி நிதானிக்க நம்மால் முடியவில்லை. பழம்பெருமை, இன்றைய காலத்திற்குப் பொருந்தாத வீரப்புழுகுகள், ஏட்டுக்கல்வியில் மட்டும் முன்னேறிவிட்டு நம்மை புத்திச்சமூகமாய் எண்ணிக்கொண்ட மாயை, மற்றவர்களை எல்லாம் மூடர்களாயும் இழிவாயும் நினைத்துக் கொண்டிருக்கும் கொழுப்பு, இதனால் மனங்களில் நிறையும் வன்மம் என இந்தச் சுமைகளே நம்மை மீள்வதற்கு விடுவதாயில்லை. என்ன மாதிரி ஒரு "நாம் தமிழர் எண்ணம்"!

நம் வெடிவீரர்களைப் பற்றி அளவுக்கதிகம் புகழ்ந்தும், நம்ப வைத்தும், உள்ளுக்குள் உளுத்தபடியே பெருமிதங்களைப் போர்த்து மூடிக்கொண்டும், மற்றவர்களுடன் உரையாட முடியாதவர்களாய் வாழ்வை வென்றெடுக்க முடியாதவர்களாய் முழுமுட்டாள்களாயடிக்கப்பட்டோம். முள்ளிவாய்க்கால் வரைக்கும் அள்ளுண்ட மந்தைகளாயிருந்தோம். சமூகத்தைப் பலவருடங்களுக்குப் பின்னோக்கி முடக்க அனுமதித்தோம். இப்போதும் நமது சண்டித்தனங்களே சரியானவை, நம் பீடுக்கும் பெருமைக்கும் நாம் யாருடனும் பேச வேண்டிய தேவையே இல்லை என்கிற தற்புகழ் போதையிலேயே வழிகளைத் தொலைத்து மக்களை வதைபட விட்டுக் கொண்டிருக்கிறோம்.

மகாபாரதத்தில் ஒரு சம்பவம்:

சூதாட்டத்தில் திரௌபதியைத் தோற்றது குறித்துக் கோபப்படும் அருச்சுனன், தருமனை சுடுசொற்களால் திட்டிவிடுகிறான். பாண்டவர்களிடையே ஒரு கட்டுப்பாடு உண்டு. அதாவது, யார் தருமனை திட்டினாலும் அவன் கொல்லப்பட்டுவிட வேண்டும் என்பதே அது. அதன்படி இப்போது அருச்சுனன் கொல்லப்பட வேண்டும் என்கிறான் வீமன். அருச்சுனன் கொல்லப்பட்டால் பாரதமே இல்லை. அப்போது அங்கு வரும் கிருஷ்ணன், அவர்களது பதற்றத்தைக் கண்டு விடயத்தைக் கேள்வியுற்று, 'அட, இவ்வளவுதானா? கொன்றுவிடலாம் அருச்சுனனை' என்கிறான். எல்லோரும் திகைக்க, 'ஒரு பெரிய சபையின் முன்னே நீ தொடர்ந்து உன்னையே புகழ்ந்து பேசிக்கொள்ள வேண்டும். அதுவே உனக்கு மரண தண்டனை" என்கிறான். அதன்படி அருச்சுனன் தன் வில்வித்தையைப் பற்றியும், தன் அழகைப் பற்றியும், வீரதீர பராக்கிரமத்தைப் பற்றியும் வாய் ஓயாமல் பேசுகிறான். கேட்பவர்கள் கெக்கலி கொட்டிச் சிரிக்க, அவனுக்கு அது மரணத்தைவிட மோசமாகத் தோன்றுகிறது.

இப்படி ஒரு தற்புகழ்ச்சியிலும், யதார்த்தத்தைப் புறக்கணித்த நிலைமறந்த வீர நினைப்புகளாலும் தான் நாமும் மரண அடி வாங்கினோம் என்பதொன்றும் இப்போது இரகசியமல்ல. நிதானமாக யோசித்தால் இதுபோல நம்மிடமிருந்த பல பல தவறுகள் பிடிபடக்கூடும். அவற்றைக் கண்டுகொள்ளாமல் நமக்கு மீட்சி கிடையாது. பரணி பாடிப் பாடியே அப்பாவி வாழ்வைப் போட்டுடைக்கக் காரணமாக இருந்தவர்கள், வெளிப்படையாக அந்தக் காரணங்களை விமர்சனம் செய்துகொள்ள வேண்டும். இல்லாவிட்டால் நம் சமூகமும் மக்கள் வாழ்வும் மீள்வதற்கான காலத்தைப் பின்போட்டுக் கொண்டே செல்லும் அதே தவறைத் தொடர்ந்தும் செய்வதாகவே இருக்கும்.

(தொடர்ச்சி 22ஆம் பக்கம்)

# அருமையாகக் கிடைக்கப்பெறுகின்ற 'அம்பா' பாடல்கள்

தேவிபரமலிங்கம்

**" ஆடிப்பாடி வேலை செய்தால்**
**அலுப்பு இருக்காது-அதில்**
**ஆணும் பெண்ணும் சேராவிட்டால்**
**அழகு இருக்காது"**

இது ஒரு சினிமாப் பாடல். என்றாலும் அதில் தெரிவிக்கப்பட்டிருக்கும் தகவல் முக்கியமான விடயம். மனித இயங்கியலுக்கு உலகளாவிய மட்டில் தொழிலே முக்கியத்துவம் பெறுகிறது.

தொழில் ஒன்றைச் செய்யாவிட்டால் மனித வாழ்க்கை அர்த்தமற்றதாகிவிடுகின்றது. இதனால் மனித ஜீவனோபாயத் தேவைக்குத் தொழில் இன்றியமையாத ஒன்றாகியும்விட்டது.

தொழிலில் ஈடுபடும் போது ஆணும், பெண்ணும் சேர்ந்து ஈடுபடுதல் அழகையும், ஆரோக்கியத்தையும் வழங்குகிறது என்றால் மிகையில்லை. அதனால் தொழில் செய்கையில் உடலில் ஏற்படக் கூடிய அசதியைக் கூடத் தெரியாமல் தொழிலைச் செய்யக்கூடியதாக இருப்பதும் உண்மையே.

விவசாயம் சேனைத்தொழில் மற்றும் கைத்தறி, தையல் போன்ற இன்னோரன்ன தொழில்களில் ஆண்களும், பெண்களும் சேர்ந்து ஈடுபடுதல் என்பது இன்று நேற்றல்ல பன்னெடுங்காலமாக நடைமுறையில் இருப்பதைக் கண்டுள்ளோம்.

ஆயினும் ஒரு சில தொழில்களில் அவ்விதம் இருபாலாரும் சேர்ந்து ஈடுபடுவதென்பது இன்று வரைக்கும் நடைமுறையில் இல்லை என்னும் போதும் – காலமாற்றங்களால் தொழில்களில் நவீன வசதிகளைப் புகுத்தியதன் காரணமாக மிகவும் அருந்தலாக அத்தொழில்களில் ஆண்களும், பெண்களும் ஈடுபடுவதும் உண்டு.

அத்தகைய ஒரு தொழிலே கடற்றொழில். கடற்தொழிலில் ஈடுபடுகின்ற மீனவத் தொழிலாளர்கள் அந்நேரங்களில் தமது உடல் அசதிகளை மறப்பதற்காகப் பாடுகின்ற பாடலே 'அம்பா' என்னும் மற்றுமோர் கிராமியம் சார் பாடலாகும்.

விவசாயிகள் மற்றும் தொழிலாளர்கள் தொழிலில் ஈடுபட்டிருக்கையில் பாடுகின்ற நாட்டார் பாடல்களுக்கு ஈடாக இந்த 'அம்பா' பாடல்களும் விளங்குகின்றன.

இப்பாடல்களை நாட்டார் பாடல்களைப் பாடிய படிப்பறிவு குறைந்த பாமர மக்களைப் போன்றே எழுத்தறிவு இல்லாத கடற்றொழிலாளர்கள் பாடியுள்ளதும் ஈண்டு குறிப்பிடத்தக்கது.

அத்தகைய அம்பா பாடல்கள் சிலவற்றைக் குருநகர் வாழ் கடற்றொழிலாளியான லொவுறேன் செல்லத்துரை(யோசெப்) என்பவர் பாடப்பாடக் கேட்டு அதனில் இளையோடுகின்ற புதினங்களை உங்களுடன் பகிர்ந்து கொள்ளவே இக்கட்டுரையை எழுதத் தொடங்கினேன்.

'அம்பா' பாடல்களில் கொச்சைத்தனமானதும், சாதிகள் சார்ந்ததும், அங்கதக் கருத்துக் கொண்டவைகளும் அடங்கும். அவற்றில் இருந்து தேர்ந்த சில அம்பாக்களை இக்கட்டுரையில் சேர்த்துள்ளேன். வாசித்துத் தான் பாருங்களேன்.

**"இடிஇடிக்க மழை பொழிய**
**இருகரையோ பெருகிவர**
**பெருகுதடா இராசவெள்ளம்**
**பெருங்கடல்போல் குமுறிவிழ"**

பற்றுக்கோடுகள் எதுவும் இல்லாத பெரும் கடற்பரப்பில் வள்ளத்துடன் இடிமழையுள் அகப்பட்டு மீனவர்கள் திக்குத்திசை தெரியாமல் போராடும் கணங்கள் பெருவாரியாக அவர்களது வாழ்வில் வந்து போகும். அத்தகைய சூழல் ஒன்றில் அம்பாபாடி தம் வலையை மேலெடுக்க அம்பாக்கள் அவர்களுக்குப் பேருதவியாக அமைவதை மறுத்துவிட முடியாது.

**"பாருக்குள்ளே பறியை வைப்பேன்**
**ஊருக்கெல்லாம் கறி கொடுப்பேன்**
**கறி கொடுத்த கோயிலெல்லாம்**
**கையெடுத்தே கும்பிடுவேன்!"**

கடலுக்குள் பெரும் பார்கள் இருக்கின்றன. அந்தக் கற்பார்களுள் பறியைச் சொருகி (இறுக்கி வைத்துவிட்டு அந்தப் பார்கற்களுக்குள் ஓய்வெடுத்திருக்கும் மீன்களைப் மண்டா)என்னும் இரும்பு ஆயுதங்களைக் கொண்டே குத்திப் பிடிப்பதும் உண்டு. அவ்விதம் பிடித்த கடலுணவை ஊரில் கறி சமைக்க விற்பனை செய்வதையும், அவ்வாறு கறி கொடுத்த கடலையே கோயில் எனக் கூறி கும்பிடுவர் மீனவர். அதையே மேற்காணும் அம்பாவில் காணலாம்.

**"சின்னம்மான் தோணியெண்டால்**
**சீறி விளையாடாதோ**
**ஆசையம்மான் தோணியெண்டால்**
**ஆகாயத்தில் எழும்பாதோ?"**

தோணி என்னும் கடற்கலம் தன்னில் மீனவர்கள் தொழிலுக்குப் புறப்பட்டுச் செல்கையில் இவ்விதம் உறவுமுறைக் காரர்களின் தோணிகளின் இயல்புகளை எடுத்தியம்புவதும் அம்பாவில் மிகுதியாகக் காணக்கூடியதாகவும் இருக்கிறது.

"நிலவோ நிலவெறிக்க
நிலவு பட்டால் ஆருதவி?"

ஏகாந்தமாகக் கடலில் செல்கையில் பால்போன்ற நிலவு எறித்து கடற்றொழிலாளர்களுக்குப் பக்கபலமாக இருப்பதுண்டு. அந்த நிலவும் குறிப்பிட்ட நேரங்களுள் மறைந்துவிடும். அதன் பின்பாக அவர்களுக்கு கும்மென்ற இருட்டே தெரியும். இருட்டில் திக்குத் திசை தெரிவதில்லை அல்லவா? வானத்தில் தோன்றும் விண்மீன்களின் வழிகாட்டலும், நேரக் குறிப்புமே மீனவர்களுக்கு பேருதவி புரியும்.


**"வாடை கடுக்குதடி**
**வடகடலோ இரையுதடி**
**வாராயோ சூபாரை..."**

சூபாரை என்பது சிறியவகை மீனினமாகும். பிள்ளைபெற்ற பெண்களுக்கு 'சரக்குத்தண்ணி' என்னும் கறி சமைக்க உகந்தது. அதனைக் கருவாடு செய்தும் பாவிப்பர். பச்சை மீனை விடவும் சூபாரைக் கருவாடு மிகவும் ருசியாக இருக்கும். அந்த மீன்களை வாடைக் காற்றுத் தலையெடுத்து நிற்கின்ற வேளைகளில் வடகடல் இரைச்சலோடு பெருந்தொகையாக எடுபட்டு வரும். வாடைக்காற்றுக் காலங்களில் மீனவர்கள் மேற்கூறிய அம்பாவைப் பாடித் தொழில் ஈடுபடுவார்கள்.

அம்பா பாடல்களில் அங்கதப் பாடல்களே அபரிமிதமாகக் காணக்கிடைக்கிறது. ஏனெனில் ஆண்கள் பெண்களைச் சீண்டிவிட்டு 'கிளுகிளுப்பை' அடைவதொன்றும் புதுமை இல்லை அல்லவா? அவ்வகை அம்பாக்கள் சிலவற்றை அடுத்துப் பார்ப்போம்.

(தொடர்ச்சி 22ஆம் பக்கம்)





# ஆபத்தானவர்கள் 29

அநேகமாக உங்கள் மாமாவாக இருக்கலாம் என்னைக் காப்பாற்றிக்கொள்ள என்னால் முடியும். இவ்வளவும் பேசிய பிறகு ரிசீவரை எடுத்து சாராம்மாவிடம் கொடுத்தான்.

"ஆமாம்... நான்தான். இப்போது எங்கு இருக்கிறீர்கள்? கெஸ்ட் ஹவுஸிலா... உடனே வருகிறீர்களா?" என்றவாறே அவள் ராபின்சனைப் பார்த்தாள்.

'வரட்டும் அவர்!" என்று ராபின்சன் சைகை காட்டினான்.

"சரி... வாருங்கள்!" சாராம்மா ரிசீவரை வைத்துவிட்டு அங்கிருந்து நகர்ந்தாள்.

"பயப்படாதீர்கள். வேஷம் மாறுவது எனக்குக் கைவந்த கலை. சமாளித்துவிடுகிறேன்."

மாமா சாதாரணமானவரல்ல. ஒரு குற்றவாளி போடும் எந்த வேடத்தையும் கண்டுபிடிக்க அவரால் முடியும். உயர்ந்த பட்சமாக அறுபத்துநான்கு உருவ மாற்றங்களை அவர் நிதானிக்க முடியும். ஸ்கொட்லாந்தில் சிறப்புப் பயிற்சி பெற்றவர். அவரை ராபின்சனால் எந்த அளவுக்கு ஏமாற்ற முடியும்?

எனவே, ராபின்சனை அவர் முதல் பார்வையிலேயே கண்டுபிடித்து விடுவார் என்று சாராம்மா திடமாக நம்பினாள். அப்படி எத்தனையோ சம்பவங்கள் நடந்துள்ளன. ஒருவேளை அவர் கண்டுபிடித்து விட்டால், தன்னைப் பற்றி என்ன நினைப்பார், தன் மீது அநாவசிய மான சந்தேகம் ஏற்படுமே!

"எனக்கு பயமாக இருக்கிறது!" சாராம்மா படபடப்புடன் பேசினாள்.

"நீங்கள் பயப்பட வேண்டியதில்லை. அந்தக் கவலையை என்னிடம் விட்டுவிடுங்கள். நான் சமாளித்துக் கொள்கிறேன்." ராபின்சன் அவளுக்கு ஆறுதல் கூறினான்.

பிறகு ஆஷ்ட்ரேயில் இருந்த சிகரெட் துண்டுகள் மற்றும் சாம்பலைக் குப்பைக் கூடையில் கொட்டினான்.

பிரீஃபகேஸ் ஒன்றைக் கையில் பிடித்தபடி சோபாவில் அமர்ந்துகொண்டான். ரோஸியை அவனுக்கு அருகில் உட்கார வைத்துக்கொண்டான்.

கார் ஒன்று கேட்டைத் தாண்டி வரும் சத்தம் கேட்டது.

அதிலிருந்து ஆஜானுபாகுவான மனிதர் ஒருவர் இறங்கி மிடுக்காக நடந்து வந்தார்.

ஹோலிங்பெல்லை ஒரு தடவை அழுத்திவிட்டு, கதவைத் திறந்துகொண்டு ஹோலுக்குள் வந்தார்.

எஸ்.பி.ஜோஸப் மாத்யூவுக்கு ஆறடி, இரண்டங்குல உயரம். உயரத்துக்கு ஏற்ற சரியான உடல்வாகு. முன் நெற்றியில் வழுக்கை. உரமேறிய கை கால்கள். நீண்ட மூக்கு, கூர்மையான பார்வை. சதுர முகம்.

வரவேற்பு அறைக்குள் நுழைந்த ஜோஸப் உடனே சுற்று முற்றும் பார்த்தார்.

சாராம்மா ஜேக்கப் எழுந்து நின்று கொண்டு இருந்தாள். ரோஸியும் உடனே சோபாவிலிருந்து எழுந்தாள். ஆனால், ராபின்சன் இருந்த இடத்திலேயே உட்கார்ந்திருந்தான்.

"இவர் என் அங்கிள். கிரைம்பிராஞ் எஸ்.பி.ஜோஸப் மாத்யூ!" சாராம்மா அறிமுகப்படுத்தியதும் முறையில் ராபின்சனைப் பார்த்துக் கூறினாள்.

உடனே ராபின்சன் தனது இருக்கையிலிருந்து எழுந்து கை நீட்டினான்.

"ஐ ம் டாக்டர் ராபின்சன், ஃபிரம் மெட்ராஸ்" எந்தவிதத் தயக்கமும் இன்றிப் பேசினான்.

எஸ்.பி.ஜோஸப் மாத்யூ அவனுடன் கை குலுக்கினார்.

இருவரும் அமர்ந்தனர்.

"அங்கிள், சாப்பிட ஏதாவது கொண்டு வரட்டுமா?" சாராம்மா, அவரது கவனத்தை எப்படியாவது திருப்பி அவரை அங்கிருந்து அப்புறப்படுத்துவதில் குறியாக இருந்தாள்.

"முதலில் நான் குளிக்க வேண்டும். அங்கு வெந்நீர் கிடையாது" அவர் எழுந்து உட்புறம் சென்றார்.

சாராம்மா பெருமூச்சுவிட்டாள்.

"மிஸ்டர் ராபின்சன், நல்ல வேளையாக அவர் இன்னும் உங்களை அடையாளம் தெரிந்துகொள்ளவில்லை. அவர் திரும்பி வருவதற்குக் கூட நீங்கள் தப்பித்துச் செல்ல வாய்ப்பு இருக்கிறது. நீங்கள் கிளம்பிவிட்டதாக நான் அவரிடம் சொல்லிக் கொள்கிறேன்.

"திடுதிப்பென்று இந்த மாலை நேரத்தில் நான் எங்கே போவது?"

"அது எனக்கு என்ன தெரியும்? உங்களது நன்மைக்காகத்தான் சொல்கிறேன். இல்லாவிட்டால், ஒட்டுமொத்தமாக நாம் எல்லோருமே மாட்டிக்கொள்வோம்" சாராம்மா உட்புறத்தைப் பார்த்தபடி பேசினாள்.

"நான் ஏற்கனவே சொல்லிவிட்டேன். நீங்கள் பயப்பட வேண்டியதில்லை. உடனே போய் அவருக்கு விருப்பமானதைச் சமைத்துப் போடுங்கள்." ராபின்சன் எந்தவிதப் பதற்றமும் இன்றிப் பேசினான்.

"என்ன நடக்கப் போகிறது என்றே எனக்குத் தெரியவில்லை!" என்ற சாராம்மா சமையலறை நோக்கி நடந்தாள்.

அப்போது பொலிஸ்கிளப்பிலில் புஷ்பராஜை மீண்டும் எப்படி கங்காபிரசாத்திடம் அனுப்பி வைப்பது என்பது தொடர்பான ஆலோசனை நடந்துகொண்டிருந்தது. உயர் அதிகாரிகள் ஒன்று கூடி விவாதித்தனர்.

"நான் ஒன்று சொல்லலாமா?" ஐ.ஜி.ஜமாலுதீன் பேசத் தொடங்கினார்.

புலனாய்வுத் துறையில் நெடுநாள் அனுபவம் வாய்ந்தவர் ஜமாலுதீன்.

(தொடரும்....)

# முன்னாள் புலி உறுப்பினரின் உணர்வலைகள்




நன்றி: இணையம்

பிணக்குவியலாக அப்படியே செத்துத்தானிருப்பம்.

ஒரு சாவின் மூலம் மக்களுக்கும் தாய் மண்ணுக்கும் ஏதாவது கிடைக்கும் என்றால், நானோ அல்லது மற்றப் போராளி களுமோ செத்திருக்கலாம். அது வீரச்சாவாகவும் கருதப்பட்டிருக்கும்.

ஆனால், அதுக்கெல்லாம் சந்தர்ப்பம் இல்லாமலே நாங்கள் சரணடைய வேண்டி வந்தது. பிறகென்ன, கைதியாக்கினார்கள். கைதி எண்டால் அவர்களுடைய கட்டுப்பாட்டில்,அவர்கள் எதைச் சொல்லுகிறார்கள். அதைச் செய்யும் நிலைதான் இருந்தது. இப்பவும் ஏறக்குறைய அதே நிலைமைதான்.

இப்ப வெளியாலே விடப் பட்டிருக்கிறம். இது பேரளவில தான். ஆனால் சுயாதீனமாக நாங்கள் வாழ முடியேல்ல. நாங்கள் முயன்றாலும் சூழல் அதுக்கு முழுக்க இடந்தராது. சிலவேளை சிலபேருக்கு இதெல்லாம் ஒரு பிரச்சினை மாதிரித் தெரியாமலிருக்கலாம். அவையள் எந்தச் சூழலுக்கையும் வாழக் கூடியமாதிரி தங்களை மாத்தியும் கொள்ளலாம்.

ஆனால் என்னால அங்காலையும் போகமுடிய வில்லை. இங்காலையும் போக முடியேல்ல. ஏதோ மனதுக்குள்ள கிடந்து உருட்டிக் கொண்டிருக்கும். நாங்கள் எங்கேயோ பிழை விட்டிருக்கிறம், கனக்கப் பிழையள். அதுதான் இப்ப எனக்குப் பிரச்சினை.

நாங்கள் பிடிபட்டுக் காம்பில இருக்கேக்க இதை உணர்ந்திருக்கிறன். பலரிட்டையும் இந்த மாதிரியான ஒரு நிலைமையைப் பார்த்திருக்கிறன். பொதுவாகக் கனபேர் கவலைப்பட்டார்கள்.

நாங்கள் கன இடத்தில பிழை விட்டிட்டம் எண்டதை வாய்விட்டே சொன்னார்கள். ஆனால் இனிப் பழைய இடத்துக்குத் திரும்பிப் போக முடியாது. ஆனால் நாங்கள் இப்படியே இருக்கவும் ஏலாது. இதைத்தான் திரும்பத் திரும்பச் சொல்லுவன்.

சரணடைந்தபோதே எங்களுக்குத் தெரியும். நாங்கள் விரும்பாத ஒரு இடத்துக்குத்தான் கொண்டு போறாங்கள் எண்டு நினைச்சம். அப்பிடியே நடந்தது. போராட்டத்தின்ர தோல்வியே நாங்கள் விரும்பாத ஒரு இடம்தானே. அதாவது அப்படியான நிலைமை எண்டது நாங்கள் விரும்பாத- நாங்கள் எதிர்பார்க் காத- நாங்கள் ஏற்றுக்கொள்ள முடியாத ஒரு நிலைதானே.

பிறகு இடைக்கிடை விசாரணைகள், தேவையில் லாத சந்தேகங்கள், எப்பவும் என்னை யாரோ கண்காணிக்கிற மாதிரி ஒரு உணர்வு. இதுதான் அடுத்த பெரிய பிரச்சினை.

இப்படியே எல்லாப் பக்கத் தாலையும் வதைபடுகிறதை விடச் சாகலாம். அல்லது இந்த நாட்டைவிட்டே எங்காவது தொலைஞ்சு போகலாம்.

பழைய இடங்களையும் தெரிஞ்ச சனங்களையும் பார்க்க எப்படியிருக்கும் எண்டு சொல்லுங்கோ பார்ப்பம்.

**சரி என்ன மாதிரியான பிழைகள் நடந்திருக்குது? அதை எப்படிச் சீர்ப்படுத்தியிருக்க முடியும் என்று நினைக்கிறீர்கள்?**

இதைப்பற்றி இஞ்ச இப்ப கதைக்க விரும்பேல்ல. அதுக்கு காலம் இருக்கு. அல்லது அதை நான் கதைக்க விரும்பேல்ல. அதில கன பக்கங்களிருக்கு. பல காரணங்களும் அந்தக் காரணங்களோட தொடர்பான இரு தரப்பும் இருக்கு. எல்லாத்தையும் சரியாக அறி யாமல் கதைக்கவும் முடியாது.

ஆனால் ஏதோ நடந்திருக்குது எண்டது மட்டும் உண்மை. இல்லையெண்டால், இந்தப் பெரிய அமைப்பும் போராட்டமும் இப்பிடிச் சட்டெண்டு முடிஞ்சு போகுமா?

இதையெல்லாம் ஆரோ ஒரு நாளைக்கு வெளியில சொல்லத்தான் போகினம். சிலர் -பல விசயங்களையும் அறிஞ்ச ஆட்கள்-இதை யெல்லாம் எழுதக் கூடும்.

என்னைப் பொறுத்தவரையும் நான் விசுவாசமாக வேலை செய்திருக்கிறன். சனத்துக்காகப் பாடுபட்டிருக்கிறன். இயக்கத்துக்காகவும் பாடுபட்டிருக்கிறன். போராட்டத்துக்காக உழைச்சிருக்கிறன். சில சந்தர்ப்பங்களில என் அறிவைக் கடந்தும் வேலை செய்திருக்கிறன். ஒரு அமைப்பில இருந்தால் அதின்ரை தலைமைக்குக் கட்டப்பட வேண்டிவரும். அது எங்க இருந்தாலும் அப்படித்தான்.

தமிழகத்தில கருணாநிதியின்ரை ஆட்சியையும் கதைகளையும் பார்க்க எங்களுக்கு விசர்தான் வரும். ஆனால், அவற்றை கட்சிக்கும் தொண்டர்கள் இருக்கிறார்கள். அவர்கள் தங்கட கட்சியின் வெற்றிக்காக உழைக்கிறார்கள். இது அமெரிக்காவுக்கும் பொருந்தும். சீனாவுக்கும் பொருந்தும் எண்டுதான் நினைக்கிறன்.

நாங்கள் எல்லாத்தையும் பட்டுக் கழிச்சிட்டம். இறுதிவரையும் நிண்டு பாத்தாச்சு. என்னைப் போல ஆயிரக்கணக்கானவையள் இப்பிடிக் கடுமையாகக் கஷ்ரப்பட்டிருக்கிறார்கள். இதுக்கு மேல நாங்கள் என்ன செய்ய முடியும்? ஆனால் எங்களுக்குத்தான் இப்பவும் கஷ்ரம். எங்களால கண்டபடி அங்க இங்க திரியிற நிலைமைக்குத் தக்கமாதிரிப் பாடவும் முடியாது, காரியம் பாக்கவும் முடியாது.

இயக்கம் எண்டது பெரிய மரத்தைப் போல. அது சரிந்தால் சும்மா கயிற்றைப் போட்டுக் கட்டி நிற்பாட்டேலாது. அதைப் போல அந்த மரம் இல்லாட்டித்தான் அதின்ரை அருமையும் அது இருந்த இடமும் தெரியும்.

(தொடர்ச்சி அடுத்த வாரம்)

# மனதுக்கு நிம்மதி

# உங்களின் கைகளில்தான் வாழ்க்கை...



**உங்கள்** வாழ்க்கை உங்கள் கையில். இது எத்தனை பேருக்கு புரிகிறது. உங்களது அமைதி, ஆனந்தம், ஆரோக்கியம் யாவுமே உங்களது மனப்போக்கின்படியேதான் அமைகிறது. உங்களது சிந்தனை, செயல்பாடு, மனப்போக்கு, வாழ்க்கை முறையே இதற்குக் காரணம்.

உங்களுடைய எண்ணங்கள் நீங்கள் சென்றடையும் இலக்கை நிர்ணயிக்கின்றன. எப்போதும் புதுமையாக சிந்தியுங்கள். அந்தத் தூய, நல்ல சிந்தனைகளை உங்கள் மனதிற்கு உரமிட்டு, நீங்கள் வாழ்க்கையில் முன்னேற வழி கோலுகிறது. மனவளத்தை வளர்த்துக் கொள்ளுங்கள். எப்போதும் நல்லதையே எண்ணுங்கள். நல்லவிதமாக கனவு காணுங்கள்.

எதிர்மறையான எண்ணங்கள் உங்கள் மனதில் தோன்றி வாட்டும் போதெல்லாம், மாற்றி யோசியுங்கள். ஏனெனில் எதிர்மறையான எண்ணங்களே உங்களது வீழ்ச்சிக்குக் காரணமாகின்றன.

ஆகவே, ஆக்கபூர்வமான, ஆரோக்கியமான எண்ணங்களை உரம்போட்டு வளர்த்துக் கொள்ளுங்கள். தண்ணீரில் விழுந்தவன், நீந்தத் தெரியாவிட்டாலும், தைரியமாக இருந்தால் எப்படியாவது நீந்திக் கரை சேர்ந்துவிடுவான். மாறாக பயந்தால் தண்ணீரில் மூழ்கி விடுவான்.

அடிக்கடி புதிய, புதிய நல்ல சிந்தனைகளை உங்கள் மனதில் நிரப்பிக் கொள்ளுங்கள். நீங்கள் புதிய மனிதராக மாறிவிடுவீர்கள். அனைவருக்கும் சந்தோஷத்தைக் கொடுங்கள். நீங்களும் சந்தோஷமாக வாழமுடியும்.

மனதில் அமைதியும் நிலவும். நீங்கள் அமைதியாக வாழ்வீர்கள். ஆகவே உங்கள் மனதை எப்போதும் அமைதிப் பூங்காவாக வைத்துக் கொள்ளுங்கள். உங்கள் மனதில் அமைதி எனும் பூங்காற்று எப்போதும் வீசிக்கொண்டிருந்தால் நீங்கள் உங்களைச் சுற்றி அமைதியான உலகத்தை உருவாக்க முடியும்.

என்னுடைய வாழ்க்கையில் எது முக்கியமானது? நான் சென்றடைய வேண்டிய இலக்கு என்ன? அதை எப்படி அடைவது என்று சற்றுநேரம் சிந்தியுங்கள்.

உங்கள் பிரச்சினை என்ன? அது உண்மையாகவே பிரச்சினையானதா? நீங்களாக ஒன்றுமில்லாத விஷயங்களைப் பிரச்சினை என்று கருதுகிறீர்களா? பிரச்சினைக்குத் தீர்வு உண்டா? எப்படி முயன்றால் அதற்குத் தீர்வு காணலாம். எலிப் பொறியில் எலி சிக்கிக் கொள்வது போல, நீங்களாக பிரச்சினை வலைக்குள் சிக்கிக் கொள்கிறீர்களா?

தீர்க்க முடியாத பிரச்சினை என்றால் அதை உடனே மறந்து விடுங்கள். மனதார ஏற்றுக்கொள்ளுங்கள். அப்போது பிரச்சினை உங்களை வருத்தாது. வீணாகத் தீராத, தீர்க்க முடியாத பிரச்சினைகளைப் பற்றியே எண்ணிக் கொண்டிருப்பீர்களேயா-னால், பிரச்சினை ஒருபோதும் தீராது. மாறாக உங்கள் கவலை உங்களை வருத்தத்தில் ஆழ்த்தும். மனவளமும், உடல் நலனும் கூட அதனால் பாதிக்கப்படும்.

கடந்தவைகளை மறந்துவிடுங்கள். அதனை மாற்ற முடியாது. அதைப்பற்றியே நினைத்துக் கொண்டிருந்தால் ஒரு பயனும் இல்லை. மாற்ற முடியாத அந்த நிகழ்வைப் பற்றியே ஏன் வீணாக நினைத்து நினைத்து மருகுகிறீர்கள்.

எதிர்காலம் நமது கையில் இல்லை. அதைப் பற்றி எண்ணி ஏன் ஆகாயக் கோட்டை கட்ட வேண்டும். நிகழ்காலம் உங்கள் கையில் உள்ளது. இப்போது நிகழ்ந்துள்ள வாழ்க்கையை நன்கு அனுபவியுங்கள். நிகழ்காலத்தில் வாழ்வீர்களானால், கடந்தகால நிகழ்ச்சிகளோ அல்லது எதிர்கால எதிர்பார்ப்புகளோ உங்களை ஒன்றும் செய்ய முடியாது.

நீங்கள் ஆனந்தமாக, அமைதியாக வாழ முடியும். தடைகளும், கஷ்டங்களும் நிறைந்ததுதான் வாழ்க்கை. அவைகள் உங்களை நிலைநிறுத்துவதற்காக வருகின்றன என்று எண்ணுங்கள். அதனை இடையூறாகக் கருதாதீர்கள். அவை உங்களை மிகவும் புத்திசாலியாக ஆக்குவதோடு நீங்கள் பல அனுபவங்கள் பெறவும், முன்னேறுவதற்கும் உதவக்கூடும்.

**எதிர்மறையான எண்ணங்கள் உங்கள் மனதில் தோன்றி வாட்டும் போதெல்லாம், மாற்றி யோசியுங்கள். ஏனெனில் எதிர்மறையான எண்ணங்களே உங்களது வீழ்ச்சிக்குக் காரணமாகின்றன. எதிர்காலம் நமது கையில் இல்லை. அதைப் பற்றி எண்ணி ஏன் ஆகாயக் கோட்டை கட்ட வேண்டும். நிகழ்காலம் உங்கள் கையில் உள்ளது. இப்போது நிகழ்ந்துள்ள வாழ்க்கையை நன்கு அனுபவியுங்கள். நிகழ்காலத்தில் வாழ்வீர களானால், கடந்தகால நிகழ்ச்சிகளோ அல்லது எதிர்கால எதிர்பார்ப்புகளோ உங்களை ஒன்றும் செய்ய முடியாது.**

# முரசு குறுக்கெழுத்துப் போட்டி

வாசக நெஞ்சங்களே! உங்கள்
சிந்தனைக்குத் தீனி போடும் வினாக்கள்
அடங்கிய இப் போட்டியிலே
ஆர்வமுடன் பங்குகொண்டு
பரிசுகளையும், பாராட்டுக்களையும்
பெற வாழ்த்துகின்றோம்.

**குறுக்கெழுத்துப் போட்டி இல.405 க்கான சரியான விடைகளை அனுப்பி 250 ரூபா பரிசு பெறும் அதிர்ஷ்டசாலி.**

என்.கிருஷ்ணா, மொல்லிகொட லேன், கம்பளை.

**பாராட்டுப் பெறும் 10 அதிர்ஷ்டசாலிகள்.**

01. ம.சரவணன், நுணாவில், சாவகச்சேரி.
02. எஸ்.பிரியவதனன், கே.கே.வீதி, புத்தளம்.
03.எவ்.பர்ஷானா, எருக்கலம்பிட்டி. மன்னார்.
04.அ.ரூபி, முகத்துவார வீதி, கல்லடி, மட்டக்களப்பு.
05.எம்.எவ்.சபீனா, ஓடாவியார் வீதி, ஏறாவூர்-02.
06.சு.கேசவன், மாப்பனாவத்துற வீதி, கண்டி.
07.சி.கௌசிக், கலகெதரமடிகே,கலகெதர.
08.க.மதுமிதா, நிவ்எல்பிட்டிய, ஹெலி ஓயா.
09.வ.சந்தோஷ்.சீனன்குடா, திருகோணமலை.
10.க.வாணி,திருநெல்வேலி, யாழ்ப்பாணம்.

## குறுக்கெழுத்துப் போட்டி - 407

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | | |
| 7 | 8 | 9 | | | 12 |
| 13 | 14 | 15 | 16 | | 18 |
| | 20 | | 22 | 23 | 24 |
| 25 | | 27 | 28 | 29 | 30 |
| 31 | 32 | | 34 | 35 | 36 |

**இடமிருந்து வலம்**

01. யுத்த தளபாடம் ஒன்று.
07.நீர் என்றும் பொருள்படும். (குழம்பியுள்ளது)
13.சிகரம் அல்லது மணிமுடி என்று கூறலாம். (குழம்பியுள்ளது)
22.சிலப்பதிகாரத்தின் பாத்திரமொன்று. (குழம்பியுள்ளது)
27.மதம் என்றும் கூறலாம். (குழம்பியுள்ளது)
31.அணிகலன் ஒன்று. (திரும்பியுள்ளது)
34.நாள் என்று கூறலாம். (குழம்பியுள்ளது).

**மேலிருந்து கீழ்**

01.வாசனைத் திரவியங்களில் ஒன்று.
02.அடிப்பதற்குப் பயன்படுத்தப்படும் கயிறு. (குழம்பியுள்ளது)
03.வயல் என்றும் கூறலாம். (குழம்பியுள்ளது)
12.இதன் வளர்ச்சி இன்று உச்சமடைந்துள்ளது. (குழம்பியுள்ளது).
16.குற்றவாளிகளைக் கண்டறிய இது உதவும். (குழம்பியுள்ளது)
23.கல்லறை என்றும் கூறலாம். (குழம்பியுள்ளது)
25.மருத்துவக் குணமுள்ள சமையற்பொருள்.

## குறுக்கெழுத்துப் போட்டி 405- விடைகள்

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1 நெ | 2 லி | 3 போ | 4 ப் | 5 ய | 6 ன் |
| 7 ல் | 8 ப | | | 11 சி | 12 மா |
| | 14 ல் | 15 தி | | 17 ம் | |
| | | | 22 டு | 23 வ | |
| | | | 28 உ | | 30 ணை |
| | 32 பு | 33 றா | | | 36 தி |

**போட்டி விதிகள்:**

இதற்குரிய விடையைக் கூப்பனில் நிரப்பி அஞ்சலட்டையில் ஒட்டி 22.02.2011 க்கு முன்னர் எமக்குக் கிடைக்கும்படி அனுப்புங்கள்.
அனுப்ப வேண்டிய முகவரி:

குறுக்கெழுத்துப் போட்டி இல-407
தினமுரசு வாரமலர்,
த.பெ. இல.: - 1772, கொழும்பு. - த.பெ.இல. :-167, யாழ்ப்பாணம்

தங்கள் சரியான முகவரியையும் காசுக் கட்டளையை மாற்றக்கூடிய அண்மித்த தபாலகத்தின் பெயரையும் குறிப்பிடுக.
சரியான விடையை அனுப்புவோரில் முதல் அதிர்ஷ்டசாலிக்கு 250 ரூபா பரிசுண்டு, அடுத்த பத்து அதிர்ஷ்டசாலிகளின் பெயர்கள் தினமுரசில் பிரசுரமாகும்.

# முட்டைக்கோஸின் பிறப்பிடம்

சத்தான காய்கறிகளில் முட்டைக் கோஸும் ஒன்று. நம் நாட்டில் இரண்டு வகையான முட்டைக் கோஸ்கள் உள்ளன. ஒன்று மஞ்சள் முட்டைக்கோஸ் இரண்டு நீல முட்டைக்கோஸ். உலகம் முழுவதும் 150 வகை முட்டைக்கோஸ்கள் உள்ளன. காலிபிளவரும் முட்டைக்கோஸ் குடும்பத்தைச் சேர்ந்ததுதானாம். ஐரோப்பாவின் தென்மேற்குப் பகுதிதான் இதன் பூர்வீகம். ஆரம்பத்தில் இது பயனற்ற காய்கறி என்றே கருதப்பட்டு வந்தது. பின்புதான் இதன் பயன்பாட்டை அறிந்தனர்.

முட்டைக்கோஸ் வகைகளை உண்பதால் வயிற்று உறுப்புகள் நன்கு செயல்படுகின்றன. இதில் முக்கியமான தாதுப் பொருட்களும், விற்றமின்களும் உள்ளன. ஆனால் அதி-கமாக முட்டைக்கோஸை சாப்பிட்டால் தைரொயிட் பாதிக்கப்படும் என்று மருத்துவர்கள் எச்சரிக்கிறார்கள்.


**தேவ அருள்ஞான சித்த சக்தி**
கடமையும் உண்மையும் இரு கண்களாகக் கொண்ட
என்னிடம் அபூர்வ சக்தி இருக்கின்றது என்பது யாவரும் தெரிந்த விடயமே!
**சாதிக்க முடியாததைச் சாதிக்க வாருங்கள்**

சித்தர்களின் அனுக்கிரக வாக்கின்படியே அவரவர்களின் பிரச்சினைகளுக்குத் தக்கவாறு கிரக கோட்பாட்டின்படி பரிகாரங்கள் செய்து கொடுக்கப்படுகின்றது. சித்த ஞானம்பெற்ற என்னிடம் எல்லா மதத்தினருக்கும் பொருந்தக் கூடிய அனைத்து மாந்திரீக பரிகாரங்கள் செய்து கொடுக்கப்படும். வெளிநாட்டவர்களுக்கென கடல் கடந்து செயற்படக் கூடிய வண்ணம் அதிவிசேட அச்சரக்கூடு தயாரில் உள்ளது. 46 வருட காலம் மங்கா மங்கள ஒளிவீசக் காரணம் உண்மையும், நேர்மையுமான சேவையே? இனி என்ன உங்கள் குறைகூறுங்கள்? சித்து, முத்து, வித்து, மருந்தீட்டலா?திருமணத் தங்கு தடைகளா? செம்மையாகச் செவ்வாய்த்தோசம் நிவர்த்தி செய்துகொள்ள வேண்டுமா? தாம்பத்திய வாழ்வில் சுபபோகக்குறைவா? மனக்கிலேசமா? நித்திரையின்மையா? காதலில் தோல்வியா? வாழ்வா? சாவா? என்ற நிந்திப்பா? தொழிற் தடங்கலா? செய்தொழில் பெருத்த இலாபம் அடைய வேண்டுமா? குடிபோதையில் இருந்து விடுபட வேண்டாமா? அருள்வாக்குப் பெறமாதாந்தம் நடைபெறும் பருவ அக்கினி குண்டலயமாக மாதாந்தம் நடைபெறும் பருவ அக்கினி குண்டலயமாக பூஜையில் கலந்து அருட்கடாட்சம் பெறவும். இத்துறையில் இந்தியாவிலும் இலங்கையிலும் கூட என்னை நாடிவரக் காரணம் எனது உண்மைச் சேவையும் நேர்மையுமே. கால தாமதத்தை தவிர்த்துக்கொள்ள முன்பதிவு அவசியமே.

**உங்கள் கதையைக் கூறும் உங்கள் யாதகம்:-**
காண்ட அடிப்படையில் அக்குவேறு ஆணிவேறாக 331 பக்கம் கொண்ட அவரவர் ஜனன ஜாதகத்தை வாழ்க்கைச் சித்திரமாக அறிந்து தெரிந்து செயற்பட, முன் அனுமதியுடன் என்னைச் சந்திக்கவும்.
**உலகப்புகழ் கௌரவ பேராசிரியர் தேசபந்து பி.கே. சாமி ஜே.பி ஐயா**
ஸ்ரீ அருள் ஞான சக்தி இல்லம் இல: 23, மேபில்ட் ரோட், கொழும்பு-13.
தொலைபேசி - 0112342463, 0112342464, 0112470615 தொலைநகல் -2344831
நுவரேலியாவில் மட்டுமே எமது கிளை
ஸ்ரீ துர்க்கா தேவி ஆலயம் இல: 33 தின சந்தை கட்டடம், நுவரெலியா
0522222506/0522223093




**கல்லூரியில் நடந்த போட்டி ஒன்றுக்குச் சென்ற அகல்யா மறுநாள் காலையி-லேயே விடுதிக்கு வந்திருந்தாள். அன்று அவளது மாமாவான சுந்தரேஷன் ஊரிலிருந்து வந்திருந்தார். அகல்யாவின் இந்தப் பொறுப்பில்லாத செயலைக் கண்டு மனம் வருத்தினார். இவள் மீது கொண்ட அக்கறையின் நிமித்தமே அவள் கணினி கற்பதற்குப் பணத்தி னைக் கொண்டு வந்திருந்தார்.**

"என்னை பஸ்சில் ஏத்திவிட் டாலே போதும்" என்றாள்.

"சேச்....சே... உங்களை விடுதியில கொண்டு விடுறத விட வேற எந்தக் வேலையும் இல்லை எனக்கு" அவன் பின்னால் மோட்டார் சைக்கிளில் போகும் போது இருவருமே பேசவில்லை.

"இரண்டு நாள் இருப்பீங்களா ஸ்ரீதர்?"

"இருக்கச் சொன்னா இருப்பேன்..."

"நான் இருக்கச் சொல்லவில்லையே?"

காவலாளி பகதூர் "எங்கம்மா போயிட்டீங்க. ராத்திரியே வாறதாகச் சொன்னதாகச் சொல்லிட்டு அவர் வந்து விசிட்டிங் ரூமில காத்திருக்கிறார்"

"யாரு?" என்றாள் பதற்றத்துடன்.

"அவர்தான்... என்னவோ பேர் சொன்னார். ஊர்ல இருந்து வந்திருக்கிறாராம். அப்பாவோ மாமாவோ?"

துணுக்குற்றுப் பார்வையாளர் அறைக்குச் சென்றாள். சுந்தரேசன் பேப்பர் படித்துக்கொண்டிருந்தான். பக்கத்தில் சுருக்கமாக ஒரு பெட்டியும், தலையணையும் வைத்திருக்க,

"எப்ப வந்தீங்க மாமா"

"ராத்திரியெல்லாம் எங்கே போயிருந்தாய்" என்று அதட்டினார்.

முதலில் படிக்கப் போயிருந்தேன் என்று சொல்லலாம் என்று யோசித்தாள். வேண்டாம். உண்மையைச் சொல்லிவிடுவது உத்தமம்.

"ப்ரண்ட் வீட்டில ஒரு சின்னப் பார்ட்டி இருந்தது மாமா. ராத்திரி நேரமாகிவிட்டது அதனால அங்கேயே தூங்கிட்டு..."

"விடுதியில இதையெல்லாம் அனுமதிக்கிறாங்களாம்மா"

"சாதாரணமாக இதைச் செய்வதில்லைத்தான். நேற்று ராத்திரி ஒரு கொம்படிஷனில எங்க கல்லூரி ஜெயிச்சிட்டது. அதுக்காகக் கொஞ்சம் சலு-கைகள்"

"என்ன கொம்படிஷன்"

"ஒரு மியூஷிக் .'.பெஸ்ரிவல். அதில் நானும் ப்ரமோத் என்கிற பையனும் ஒரு பாட்டுப் பாடினோம்"

"பாட்டா?" என்று சற்று ஏமாற்றத்துடன் கேட்டார்.

"பாரம்மா, உங்க அப்பா விலாசமே இல்லை. அம்மாவைப் பார்க்கமாட்டார். உன்னுடைய படிப்புச் செலவுக்கு நான்தான் பொறுப்பு. உன் நடத்தைக்கு நீ தான் பொறுப்பாய் இருக்க வேண்டும். நீ ஏதும் ஊர் சுத்தினா அங்கிருந்து நான் உன்னைக் கட்டுப்படுத்த முடியாது. நம்ம கஷ்டம் தெரிஞ்சவள் நீ. இந்தச் சின்ன வயதில நிறைய வாழ்க்கையைத் தெரிஞ்சிருக்கிறாய். அத னால உனக்கு ஒரு அனுபவ முதிர்ச்சி, இருக்குமென நான் நினைக்கின்றேன். இருக்க வேண்டும் என்ன?"

"சரி மாமா" என்றாள்.

"ஏதோ கொம்பியூட்டர் கோர்ஸில சேரவேணும் என்று பணம் கேட்டியே?"

"அதுக்கு இப்ப அவசரம் இல்ல மாமா. நான் போட்ட கடிதம் வந்ததோ?"

"வந்தது. நேற்றுத்தான் மாமா."

"பி.எவ்.லோன் போட்டு வாங்கிக்கொண்டு வந்திருக்கிறேன். உங்கம்மா உன்னை மறந்தாலும் நானும் உன்னை மறக்கல்லையம்மா"

"தாங்ஸ் மாமா"

"பணத்தைத் தந்துவிட்டுப் போகவா?"

"இல்ல மாமா..."

"நீங்களும் கூட வந்து அந்த இன்ஸ்ரியூட்டில அந்தப் பணத்தைக் கட்டிடுங்கள். எனக்கு இத்தனை தொகையை விடுதியில வைச்சிருக்கப் பயமாக இருக்கிறது. இங்கு திருட்டுப் போய்விடும். சோப்பு, தலைக்கு வைக்கும் எண்ணெய் எல்லாம் கூட களவு போய்விடுகிறது... இருங்க குளிச்சுவிட்டு வந்துவிடுகிறேன்"

"நான் பக்கத்தில போய் சாப்பிட்டு ஒன்பது மணிக்கு வந்துவிடுகிறேன் என்றார்"

அந்த இன்ஸ்ரியூட் ராதா கிருஷ்ணன் சாலை யில் இருந்தது. கண்ணாடி இளைத்த முகப்புப் பிரமாண்டமாக இருந்தது. அகல்யா அதனுள் நுழைந்தபோது மிகவும் ஆயாசமாக பிரதிபலித்தாள். வரவேற்பறை போட்டோவில் ஒரு சின்னக் குழந்தை பெரிசாக பெரியவர்கள் சட்டையைப் போட்டுக்கொண்டு கொம்பியூட்டர் கீபோர்ட்டில் சிறுவிரல் பதித்து கமராவைப் பார்த்துத் திரும்பிக்கொண்டிருக்க கீழே இப்பவே லேற் என்று அறிவித்தது. உள்ளே பெண்களும் ஆண்களும் நுனிநாக்கில் ஆங்கிலம் பேசிக்கொண்டிருக்க மேசை விளிம்புகளில் உட்கார்ந்து தேநீர்க்கோப்பைகளைக் கையில் வைத்துக்கொண்டு சிலர் தீவிரமாக கம்பியூட்டரில் பேசிக்கொண் டிருந்தார்கள்.

சுந்தரேஷன் அதையெல்லாம் விநோதமா-கப் பார்த்துக்கொண்டிருக்க "மிஸ்டர் சுந்தரேசன்?

அந்தப் பெண்ணருகில் செல்ல,

"அகல்யா யாரு?"

"நான்தான்"

"பணம் கொண்டு வந்தீங்களா?"

"ம்..." தன் இடுப்பில் இருந்து எடுத்தார்.

"வைச்சிருங்க... அப்புறம் காஷ்செக்ஷனில கட்டிடுங்க. வாம்மா... விண்டோஸ்... வர்ட் ப்ராஜசர், ஸப்ரெட் ஷீட், டேட்டாபேஸ் பக்கேஜ், அப்புறம் சி++ எல்லாம் சேர்த்து கம்பரஸ் பண்ணி ஆறுமாசத்தில எடுத்துக்கலாம். கற்றுக்கொள்ளும் வேகத்தைப் பொறுத்து மூன்று மாசத்திலும் முடிச்சிடலாம். டொப்ல வந்தா இங்கேயே வேலை கொடுப்போம். அமெரிக்கா அனுப்புவோம்"

"கொஞ்சம் கொஞ்சமாகக் கற்றுக்கொள்கிறேன்.

அவள் மனதில் இரவின் தொடுகைகள் நிழலாடின.

**இன்பம் தொடரும்**

**இவ்வாரச் சிறுகதை**

# பணம் பாசத்தை கொன்றது

**அப்நிலா கோண்டாவில்**

அன்று சூரியன் தன் ஒளியைப் பரப்பத் தொடங்கியது. கேசவன் நித்திரை விட்டு எழுந்தான். தன் பாசமிகு மகள் லக்சி இன்னும் நித்திரைவிட்டு எழும்பவில்லை என்று நினைவிற்கு வர..

"லக்சி... லக்சி...எழும்படா" என்று எழும்பினான்.

"அப்பா விடிந்துவிட்டதா?" என்றவாறு எழும்பினாள். குளித்துவிட்டு அவசர அவசரமாக தகப்பனார் கொடுத்த தேநீரைக் குடித்துவிட்டு பாட-சாலை சென்றுவிட்டாள். கேசவன் தன் மகளை வழி அனுப்பிவிட்டு தனது அன்பு மனைவியின் மாலை சூடிய படத்தைப் பார்த்து,

"சுஜி நீ கொடுத்து வைக்கவில்லை. உன்மகளின் முகத்தைப் பார்ப்பதற்கு" என்று தன் மனதிற்குள் கவலைப்பட்டான். அப்ப டியே கதிரையில் உட்கார்ந்து தம் கடந்த காலச் சம்பவத்தை ஒருமுறை மீட்டிப் பார்த்தான். கேசவன் ஒரு வறுமைப்பட்ட குடும்பத்தைச் சேர்ந்தவன். ஆனால் பார்ப்பவர்களின் மனங்களைக் கொள்ளை கொள்ளக் கூடியவாறு அறிவு, அழகு, அந்தஸ்து எல்லாமே இருந்தது. சுஜியும் அப்படித்தான் அழகு. அறிவு, வசதி எல்லாமே அவளிடம் இருந்தது.

ஆனால் சுஜி வீட்டுப் பணக்காரப்பிள்ளை. தகப்பனார் அண்ணாமலை பெரிய ஜென்ரில்மன். சுஜி மட்டும் ஒரே ஒரு பிள்ளை. அண்ணாமலைக்கு சுஜி என்றால் கொள்ளைப் பிரியம். தன் மகள் மேல் எப்பவுமே ஒரு கண்ணாகவே இருப்பார். அண்ணாமலைக்கு யாராவது "ஏன் உன் மகளை இப்படிக் கட்டுக்காவல் போட்டு வளர்க்கிறாய்" என்றால் அண்ணாமலை சொல்லுவான், "இந்தக் காலத்தில ஒருவரையும் நம்ப முடியாது, சில-வேளை காதல் அப்படி ஏதாவது வந்துவிட்டால் என்று பதில் சொல்லுவார். அப்படி இருக்கும் போது ஒரு நாள் சுஜி கோயிலுக்குப் போய்வரும் போது ஒரு விபத்து நடந்துவிட்டது. அப்பொழுது எதிரே வந்து கொண்டிருந்த கேசவன் தான் சுஜியை வைத்தியசாலைக்குக் கொண்டுபோய் சேர்த்தான். மயக்கம் தெளிந்து கண்ணைத் திறந்தபோது சுஜிக்கு அதிர்ச்சியாக இருந்தது. உடனே "டாக்டர்... என்னை யார் இங்க கொண்டுவந்தது... என்று கேட்டாள்.

"அதோ நிற்கிறார் கேசவன். அவர்தான் உங்களை இங்க கொண்டு வந்தவர். கொஞ்ச நேரம் போயிருந்தால் உயிருக்கே ஆபத்து வந்திருக்கும். இனிக் கவலைப்படத் தேவையில்லை என்றார் டாக்டர்.

அப்போதுதான் சுஜியின் தகப்பனாலும் வியாபார விடயமாக வெளியூர் போயிருந்ததால், கொஞ்சம் குணமான உடனே சுஜி வீடு வந்து சேர்ந்துவிட்டாள்.

வீடு வந்ததும் சுஜிக்கு கேசவ-னின் ஞாபகம் தான் ஓடி வந்தது. முற்றாக குணமடைந்ததும் சுஜி கேசவ னைத் தேடிப் போனாள். கேசவனுக்கு ஏற்கனவே சுஜி யார் என்பது தெரியும்.

"ஏன் சுஜி என்னைத் தேடி வந்தாய்? நான் உனக்கும் உன் குடும்பத்தாருக்கும் ஏணி வைத்தாலும் எட்டமுடியாது. தயவுசெய்து என்னைப் பார்க்க இனி வராதே" என்றான்.

"பேசி முடித்துவிட்டீர்களா? நான் சொல்வதை நீங்கள் கேளுங்க... என் கழுத்தில தாலி என்று ஒன்று ஏறினா அது உங்க கையால என் கழுத்தில கட்டும் தாலியாகத்தான் இருக்கணும். இல்லை, அப்படி வேறு யாரும் கட்டும் தாலியாக இருந்தால் அது என் கழுத்தில தூக்குக் கயிறாக மாறும் சரியா..."

ஐ....லவ்...யூ.... கேசவன்.. நான் போறன். அடுத்த தடவை நான் உங்களைப் பார்க்க வரும்போது நீங்கள் யோசித்து ஒரு பதிலைச் சொல்ல வேணும்" என்றவாறு புயலாய் போய்க்கொண்டிருந்தாள். கேசவனுக்கு என்ன செய்வதென்று புரியாமல் அப்படியே நின்றான். நாட்கள் உருண்டோடின. சுஜியின் தகப்பன் சுஜிக்கு மாப்பிள்ளை பார்த்து நிச்சயம் பண்ணிவிட்டார். மௌன-மாய் வார்த்தைகளைத் தனக்குள்ளே பூட்டிக்கொண்டவளாய் கண்ணீர் மல்க நல்லதோர் முடிவுக்கு வந்தாள். சுஜியின் திருமணத்திற்கு இன்னும் இரண்டு நாட்கள்தான் இருந்தன. சுஜிக்கு கேசவனின் நினைப்பாகவே இருந்தது. நான் இங்கே இருந்தால்தானே எனக்குத் திருமணம் நடக்கும் என்று நினைத்தவளாய் வீட்டு வேலைக்காரியிடம் சொன்னாள்.

"நான் வெளியால போறன். அப்பா கேட்டால். இனி நான் வரமாட்டேன் என்று சொல்லுங்கள்' என்றபடி நடை யைக் கட்டினாள்"

நேராக கேசவன் வீட்டுக்கே போனாள். கேசவன் அதிர்ந்து போனான்.

"என்ன சுஜி மாப்பிள்ளை வீட்டுக்கு பயணமா? என்றான்.

"என்ன உங்களுக்குப் பகிடியா இருக்கா. நான் இனி இங்கே தான் இருப்பேன். நீங்க தான் என் கணவர் என்றாள் பிடிவாதமாக.

"என்ன உனக்குப் பைத்தியம் பிடித்துவிட்டதா?" என்றான் கேசவன்.


"ஆம். பைத்தியம். உங்க மேலே பைத்தியம். ஏன் அன்று என்னைக் காப்பாற்றினீங்க? நான் உயிருடன் இருப்பதால்தானே எனக்குப் பிடிக்காத ஒருவனைத் திருமணம் செய்ய என் அப்பா துடிக்கிறார்" என அழுதாள்.

அதற்கிடையில் தன் மக-ளைக் கேசவன் கடத்தியதாகப் பொலிசாருக்கு அண்ணாமலை அறிவித்து, பொலிசாருடன் கேசவன் வீட்டுக்குப் போய்விட்டார்.



(தொடர்ச்சி 22ஆம் பக்கம்)

# பொன்மொழி



சிங்கங்களே! நீங்கள் செம்மறியாடுகள் என்ற மயக்கத்தை உதறித் தள்ளுங்கள்.
சுயநலம் என்பதை அறவே தூர எறிந்து விட்டு வேலை செய்யுங்கள்...

**சுவாமி விவேகானந்தர்**

# பரியே சற்றுப் பரிவுகாட்டு

இலக்கிய நயம் 18

**கே.வி. குணசேகரம்**

பாண்டிய மன்னன் குதிரையில் ஏறி வீதிகளில் செல்வான். பகலில் அலங்காரமாகச் செல்லும் அவன் இரவில் மாறு வேடத்தில் செல்வான். மன்னன் உலாவருகிறான் என அறிந்தால் அவ்வீதியில் இருக்கும் மக்கள் வீதியைப் பெருக்கிச் சுத்தம் செய்து, அலங்கரித்து, பூரண கும்பம் வைத்து வரவேற்பர். வீதியோரத்தில் குழுமி நிற்கும் மக்கள் மன்னனைத் தொழுவார்கள். கன்னிப் பெண்களை வீதிக்கு வரத் தாய்மார்கள் விட

பாண்டிய மன்னன் வாரத்திற்கு ஓரிரு தடவைதான் செல்வான். மக்கள் அவ்வீதியில் திரண்டு நின்று மன்னனைப் பார்ப்பார்கள். அவளுக்கும் வீதியில் நின்று மன்னனைப் பார்க்க ஆசை. ஆனால் தாய் விடமாட்டாள். அவளை வீட்டுக்குள் விட்டுக் கதவைச் சாத்திவிட்டுச் செல்வாள் அவள் மிகவும் சிரமப்பட்டுக் கதவை நீக்கிப் பார்ப்பாள் இதற்குள் பாண்டியன்சென்று விடுவான் பாண்டியனது குதிரை வேகங்கொண்டது. அதன்



மாட்டார்கள். அதனால் கன்னிப் பெண்கள் தமது வீட்டில் இருந்து கதவின் நீக்கலூடாக மன்னனின் அழகை ரசிப்பார்கள்; வணங்குவார்கள்.

ஒரு பெண் பாண்டிய மன்னன் மீது காதல் கொண்டாள். அவனது தோள் வலிமையையும், அவனது மார்பில் உள்ள வீரத்தழும் புகளையும், அறிவும், கனிவும் மிக்க கண்களையும், அழகான புன்னகை தவழும் முகத்தையும், நீண்டு வளைந்திருக்கும் மீசையையும் எப்பொழுதும் பார்த்துக்கொண்டே இருக்க வேண்டும் என்று ஆசைப் படுகிறாள். அந்த ஆசை முற்றித் தீவிரமாகிறது. அவள் இருக்கும் வீதியால் அவள் காதலிக்கும்

வாயிலிருந்து எந்நேரமும் நுரை தள்ளிக்கொண்டிருந்தாலும் அது சளைக்காது புறாவெனப் பறந்து விடும். அதனால் அவளால் மன்னனைச் சரியாகப் பார்க்க முடியவில்லை. அவனை முழுமையாகப் பார்க்க வேண்டுமானால் குதிரை இரங்க வேண்டும். குதிரை இரக்கமில்லாது பகைவர்களைத் துரத்திப் பிடிக்க விரைவாக ஓடுவது போல ஓடிவிடுகிறது. இதனால் அப்பெண் குதிரையை நோக்கி,

“ எனது மனங்கவர்ந்த காதலனை நான் முழுமையாகப் பார்க்க வேண்டும். மதங்கொண்ட யானையின் அகன்ற நெஞ்சைப் போல உள்ள எனது காதலரின் நெஞ்சைப் பார்த்து அதைத் தொழ வேண்டும். அதுவும் கதவு இடுக்குக்குள்ளால் பார்த்துத் தொழ வேண்டும். நீ எதற்காக அவசரப்பட்டு வேகமாக ஓடுகிறாய், பகைவர்கள் தோற்றுப் புறமுதுகு காட்டி ஓடுகிறார்களா...? அவர்களைத் துரத்துவது போல அவசரப்பட்டு வேகமாக ஓடுகிறாயே. தயவுசெய்து என் மீது பரிவு கொண்டு நான் காதல் கொண்டவரை முழுமையாகப் பார்த்து ரசிக்க ஏதுவாக மெதுவாகச்செல்” என்று இரக்கிறாள். இவ்வாறு காதல் வசப்பட்ட ஒரு பெண் தனது காதலனைக் காண அவாக் கொண்டுள்ளதை மிகவும் இனிமையாக முத்தொள்ளாயிரம் புலவர் பாடுகிறார்.

“போரகத்துப் பாயுமா!
பாயாது ஒரு படியா,
உரைகத்து மெல்ல
நடவாயோ! பார
மதவெங்களி யானை
மாறன் தன் மார்பம் –
கதவங்கொண்டு யாமும் தொழ”

(தொடரும்...)

# சிந்தியா பதில்கள்

✉ சிந்தியா! தமிழ்நாட்டில் “புலிகளின் ஊடுருவல் இல்லை” என்ற வித்தியாசரனின் கூற்றை ஏற்கலாமா?

**வி. விஷ்ணுகாந்தன், கல்வியங்காடு.**

● இந்திய மத்திய புலனாய்வுத்துறை ஊடுருவல் உள்ளதாக அழுத்தம் திருத்தமாகக் கூறியிருக்கிறதே.. அதற்கான சாத்தியங்களும் அதிகம் இருக்கின்றன. இருந்தன. ஒரேயொரு தடவை அந்த எச்சரிக்கையை ஏற்றுக்கொண்டால் லத்திகாசரன் போன்றவர்கள் தமிழ் நாட்டில் எதைக் கிளறிக் கொண்டிருக்கிறார்கள் என்று கேள்வி எழும்பி விடாதா?

✉ சிந்தியா! எதற்காக இராணுவத்தில் இருந்து தப்பி ஓடியவர்களை இன்னும் துரத்திப் பிடித்துக்கொண்டு இருக்கிறார்கள்?

**பி. காருணியன், மன்னார்.**

● பொதுமன்னிப்பு வழங்கப்பட்டு விட்டவர்கள் தப்பி ஓடியவர்கள் எல்லோருக்குமே ஆயுதம் ஏந்திய காலத்தில் பழகிப்போன சில விடயங்களை மாற்றிக் கொள்ள முடியாமல் இருக்கும். ஆகவே, சமூகத்தில் அவர்கள் பத்தில் ஒன்றிலாவது குற்றத்தோடாவது தொடர்புபட்டிருப்பார்கள். அவர்களின் விபரங்களைத் தெரிந்திருந்தால் உதவியாக இருக்கும் அல்லவா? இது, புனர்வாழ்வு அளிக்கப்பட்டவர்களுக்கும் பொருந்தும்.

✉ சிந்தியா! உலகை ஆட்டிப்படைப்பது வல்லரசுகள் மட்டுமல்ல. தீவிரவாதமும்தான் என்பதை ஏற்க முடியுமா?

**ம. தவநாயகம், யாழ்ப்பாணம்.**

● நிச்சயமாக வல்லரசுகள் என்பதும் ஒருவகை தீவிரவாதம்தான். எதைத் தீவிரமாக செய்கிறோமோ... அவை எல்லாமும் தீவிர வாதமே. உதாரணத்திற்குச் சிங்களவர்கள் பேசியது சிங்களப் பேரினவாதம் என்பார்கள். அப்படிப் பார்த்தால் தமிழ்வாதம் பேசியவர்கள் தமிழினவாதம் பேசியதாக அர்த்தப்படாதா? அப்படித்தான் இன்னொருவரைக் குறிப்பிடுகின்ற போது எதைப் பிரயோகிக்கிறோமோ அது நமக்கும் என்றாகிறது. அரசுகளுக்கு வல்லரசு தீவிரவாதம் தானே.

✉ சிந்தியா! இரண்டாம் உலக மகாயுத்தத்தில் யூதர்களுக்கு ஏற்பட்டது போன்றே தமிழ் மக்களின் இன்றைய நிலையும் என்று சிலரால் கூறப்படுகிறதே...

**கே. பாஸ்கரன், திருகோணமலை.**

● செய்கின்றவர்கள் யார்? என்பதே புரிந்து கொள்ளப்பட வேண்டிய விடயம். இன்றைய நிலையில் இப்படி எல்லாம் கூறுகின்றவர்கள் நிச்சயமாக இலங்கைக்கு வெளியோ புலம்பெயர்ந்து வெளிநாடுகளில் வாழ்பவர்கள் அல்லது அவர்களின் பொழுதுபோக்குச் செலவில் வயிறு பிழைப்பவர்கள். இப்படிச் சொல்வதற்காக இலங்கையில் தமிழ் மக்கள் அல்லது தமிழ்பேசும் மக்கள் பிரச்சினைகளே இல்லாமல் வாழ்கிறார்கள் என்று அர்த்தமாகாது.

✉ சிந்தியா! ஒரு அறிவாளி எப்போது அறிவிலி ஆகிறான்?

**எச்.எம்.எம். மஸ்னவி, புத்தளம்.**

● எல்லாக் கேள்விகளுக்கும் பதில் அளிவித்து விட்டுத் தனது கேள்விகளை யாரிடம் கேட்பது என்று தெரியாமல் தலையைச் சொறிகின்ற போது...




✉ சிந்தியா! உலகக் கிண்ணப் போட்டிகளுக்குத் தயாராகிவிட்டீரா?

**எஸ். சுகுணன், வவுனியா**

● நான் எப்போதோ தயார், நம்நாட்டு அணிகள் தான் ஏதோ அரசியல் சுழியில் சிக்கியிருப்பதாக முன்னாள் வீரர்கள் சிலர் முனகிக் கொண்டிருக்கிறார்கள்.

✉ சிந்தியா! நாளுக்கு நாள் அதிகரிக்கும் பொருட்களின் விலையைக் கட்டுப்படுத்தப்படுவதற்கு வழிகளே கிடையாதா?

**செ. சிவஜோதி, வவுனியா.**

● இன்றைய திகதியில் இந்தக் கேள்விக்கு கிரைன் மாஸ்டர்களாலும் எவருடைய மனதையும் புரிந்து கொண்டு பதில் அளிக்க முடியாது. ஆனால் எல்லா ஆரம்பங்களுக்குமே முடிவு ஒன்று உண்டு. அந்த நம்பிக்கையை மட்டும் கூற முடியும்.

✉ சிந்தியா! நீங்கள் கவரிமான் பரம்பரையா?

**க. பிரியா, கிளிநொச்சி.**

● கவரிமானை எதற்கு ஒப்பிடுகிறீர்கள் என்று தெரியவில்லை. நான் மொட்டைக் கவரிமான்களையே கண்டிருக்கிறேன். அநேக விடயங்களில் மலையைக் கட்டி இருக்கின்ற முடிக்குரியவர்கள் நாங்கள் வந்தால் மலை, போனால் முடி. ஆக, கவரிமான் முடி உதிர்ந்தால் இறந்துவிடும் என்பார்கள். எப்படி அதற்கும் நமக்கும் தொடர்பு படுத்த முடியும்? நீங்கள் தலைவாரும் சீப்புக்குத் தெரியுமே நாம் கவரிமான்களா இல்லையா என்பது.

✉ சிந்தியா! பெண்களுக்கு அழகு ஆபத்தானதா?

**அ. அருட்குமார், வட்டுக்கோட்டை**

● அருட்குமார் அழகு என்பது பார்ப்பவர்களின் மனதைப் பொறுத்து வேறுபடுகிறது. அழுக்கான உள்ளமுள்ளவர்களின் பார்வையில் அழகான பெண்கள் மாட்டிவிட்டிவிட்டால் ஆபத்துத் தான். ■




# கொழும்பு–யாழ்ப்பாணம்

# இறுக்கமடைகிறது பாதுகாப்பு நடைமுறைகள்

**யுத்தம்** முடிந்தது, பதற்றம் தணிந்தது என்று நம்பியிருந்த தமிழ் மக்களுக்கு அண்மைக் காலச் செயற்பாடுகள் அச்சத்தையும், சந்தேகங்களையும் ஏற்படுத்தும் வகையில் அமைந்து வருகின்றது. 2009 மே மாதம் 19 ஆம் திகதியுடன் உள்நாட்டு யுத்தம் முடிவடைந்ததாக அரசினால் உத்தியோகபூர்வமாக அறிவிக்கப்பட்டிருந்தது. இந்த உத்தியோகபூர்வ அறிவிப்புடன் உபத்திரம் ஒழிந்தது என உத்தேசித்த மக்களுக்கு அண்மைக் கால நிகழ்வுகள் ஆச்சரியத்தை ஏற்படுத்தி வருகின்றது.

யுத்தம் முடிவுக்கு வந்த ஆரம்பத்தில் பாதுகாப்பு நடைமுறைகளில் தளர்வுகள் ஏற்படுத்தப்பட்டன. இவை சுமூகமான வாழ்விற்கான ஆரம்பமாகவே மக்களினால் நோக்கப்பட்டது. வடக்கு, கிழக்குப் பிரதேசங்களில் இயல்புநிலை திரும்பிக் கொண்டிருந்தது. இவ்வாறான

இவ்வாறான பின்னணிகளிலேயே கொழும்பில் தமிழ் மக்கள் செறிந்து வாழும் பிரதேசங்களிலும் வடக்கு, கிழக்குப் பிரதேசங்களிலும் பதிவுகள் . புகைப்படம் எடுத்தல்கள் என்று பழைய பல்லவி ஆரம்பிக்கப்பட்டிருக்கிறது.

சூழ்நிலையிலேயே சில திட்டமிட்ட சுயநலவாதிகளால் சமூகவிரோதச் செயல்களான கொலை, கொள்ளை போன்றவை அரங்கேற்றப்பட்டது. இராணுவத்தின் பூரண கட்டுப்பாட்டில் இருக்கின்ற வடக்கு, கிழக்குப் பிரதேசங்கள் இவ்வாறான துன்ப நிகழ்வுகள் தொடர்ச்சியாக நடைபெற்று வந்தமையால் அதற்குப் பதில் கூற வேண்டிய பொறுப்பும் இராணுவத்தின் மீது சுமத்தப்பட்டது.

கைதுசெய்யப்பட்டு விசாரணைக்கு உட்படுத்தப்பட்டு வருகின்ற முன்னாள் புலிச் செயற்பாட்டாளர்களின் தகவல்களினாலும் தற்போது கைது செய்யப்படுகின்ற சந்தேக நபர்கள் வழங்குகின்ற தகவல்களும், வெளி நாடுகளில் தங்கியிருக்கும் புலி ஆதரவாளர்களின் முயற்சி மீண்டும் புலிகளுக்கு உயிர் கொடுப்பதற்கான முயற்சிகள் நடைபெறுவதான சந்தேகம் பாதுகாப்புத் தரப்புக்கு எழுந்துள்ளது.

பல்லவி ஆரம்பிக்கப்பட்டிருக்கிறது. கடலுக்குச் செல்லும் மீனவர்கள் பதிவு-களும் மேற்கொள்ளப்படுகின்றன. புலிகள் இருந்த காலத்தைவிட அதிகமானளவில் சந்திக்கு சந்தி இராணுவத்தினர் நிறுத்தப்பட்டு இரவு-நேர ரோந்துகளும் சோதனைகளும் தீவிரப்படுத்தப்பட்டுள்ளன. இவற்றின் மூலம் சட்டவிரோத நடவடிக்கைகள் குறைக்கப்பட்டுள்ள போதிலும் சிவில் நிர்வாக வாழ்க்கைக்கு திரும்ப முடியாத, இராணுவப் பிரசன்னத்தில் அவசியம் வலியுறுத்தப்படுகின்றமையானது சுமூக வாழ்வை விரும்புகின்ற மக்களுக்கு ஏற்புடையதாக இருக்கவில்லை. அரங்கேறிய சமூகவிரோதச் செயல்களின் மறைமுக நோக்கங்கங்கள் இருக்கக் கூடுமென்றும் பொதுமக்களில் சிலர் சந்தேகம் வெளியிடுகின்றனர்.

எது எவ்வாறாயினும் சமூகவிரோதச் செயல்களை கட்டுப்படுத்துவதற்காக இராணுவத்தினர் மேற்கொள்ளும் நடவடிக்கைகள் பாராட்டப்பட வேண்டியதே. எனினும் சந் திக்கு சந்தி இராணுவச் சோதனை தொடர்கதையாக இருப்பது மக்களின் எதிர்பார்ப்பான சுமூக வாழ்விற்கும் சிவில் நிர்வாகத்திற்கும் ஏற்புடையதாக இருக்காது என்பதை கருத்திற் கொண்டு சட்டம், ஒழுங்கு பாதுகாக்கப்படுகின்ற அதேவேளை கடந்த 30 வருடப் போரினால் சிக்கிச் சின்னாபின்னமாகிப் போன மக்களின் வாழ்வு சிவில் நிர்வாகத்தின் கீழ் சுமூகமானதாக மலர உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டுமென்பதே எதிர்பார்ப்பாகும்.

---

(20 ஆம் பக்கத் தொடர்ச்சி)

## பணம் பசத்தை...

“அவன் தான் என் மகளைக் கடத்திச் சென்றவன்.” என்றார்.

உள்ளே இருந்த சுஜி பொலிசாரைப் பார்த்து சேர்... ஒரு நிமிடம். “இவர் எங்க வீட்டுக்கு வரவும் இல்லை. என்னைக் கடத்தவும் இல்லை. நானேதான் இங்கே வந்தேன் என்றாள்” கோபமாக. அண்ணாமலை அதிர்ந்து போனார்.

இவனை விடக் கூடாது என்றவன் ஒரு பெரியவாளை எடுத்தான். உடனே கேசவனுக்கு முன்னே போய்நின்ற சுஜி. “என்னப்பா வெட்டப் போறியளா? என்னையும் சேர்த்து வெட்டுங்கோ” என்றாள். உடனே அண்ணாமலை வந்த வழியே போனார்.

நாட்களும் உருண்டோடின. கேசவன் சுஜி தம்பதிகள் கூட்டுக் கிளிபோல அன்பாகவும், ஒற்றுமையாகவும் வாழ்ந்தார்கள். நாட்கள் மாதங்கள் ஆயின. சுஜி கார்ப்பமானாள். கேசவன் அவளை அன்பாகக் கவனித்து வந்தான்.

சுஜிக்குப் பிரசவ நாளும் வந்துவிட்டது. பிரசவ வலியால் துடித்தாள் சுஜி. உடனடியாக அவளை ஆஸ்பத்திரியில் சேர்த்தான் கேசவன்.

பிரசவம் கொஞ்சம் கஸ்ரமாக இருப்பதாக டாக்டர் கூறினார். எம்மிடம் அந்த மருந்து இல்லை. உடனடியாக மருந்திற்கு ஏற்பாடு செய்யுங்கள் என்றார்.

கேசவனிடம் அவ்வளவு பணம் இல்லை. என்ன செய்ய முடியும். பல முயற்சிகள் செய்தும் பணம் கிடைக்கவில்லை. கடைசியில் மாமனார் வீட்டிற்குப் போனான்.

“சேர் உங்க பிள்ளையைக் காப்பாற்றுங்கோ. பிரசவத்திற்காகப் பணம் தேவைப்படுகிறது. இந்த உதவியைச் செய்யுங்கோ சேர்” என்று அவரின் காலில் விழுந்து அழுதான். கேசவனைக் காலால் எட்டி உதைத்தார். கேசவன் மெதுவாக எழும்பி வைத்தியசாலை நோக்கி ஓடினான். அப்போது டாக்டர் கேசவனைக் கண்டதும்,

“எங்களை மன்னிச்சிடுங்கோ கேசவன்” எங்களால் குழந்தையைக் காப்பாற்ற முடிந்தது. ஆனால் மனைவியைக் காப்பாற்ற முடியவில்லை...” என்றனர்.

“ஐயோ... சுஜி... நான் என்ன பாவம் செய்தேன்.... எனக்குக் கடவுள் தந்த தண்டனையா இது? எனக் கதறினான். அப்போது மகளின் செத்த வீட்டிற்கு வந்த அண்ணாமலை மகளின் இறுதிக் கிரியை நிகழ்வுகளுக்குப் பணம் கொடுத்தார்.

“பணம் ... பணம்... இந்தப் பணம்தானே உனக்குப் பெரிது உன் மகளின் உயிரே போய்விட்டதே என் பணத்தை நீயே வைத்துக்கொள்” என்று அந்தப் பணத்தை அண்ணாலைக்கு முன்னால் தூக்கி எறிந்தான். அண்ணாமலை தன் மகளுக்குச் செய்த துரோகத்தை எண்ணி வெட்கித் தலைகுனிவோடு அவ்விடத்தை விட்டே போய்விட்டார். கேசவன் தனது அந்தப் பிஞ்சு உள்ளத்திற்காக அவள் நினைவோடு இன்னும் வாழ்ந்து கொண்டிருக்கிறான்.

---

(07 ஆம் பக்கத் தொடர்ச்சி)

## பெருவெள்ளம்...

வெள்ளப் பாதிப்பு நீரோடு நேரடியாகச் சம்பந்தப்பட்ட மீனவர்களையும் விட்டுவைக்கவில்லை. பெருவெள்ள காலத்தில் மீன்பிடித் தொழிலுக்குச் செல்ல முடியாமற்போனது ஒருபுறமிருக்க, கரையில் இழுத்துக் கட்டிப் போடப்பட்டிருந்த அவர்களது தோணி , வலைகள் மற்றும் மீன்பிடி உபகரணங்கள் என்பன வெள்ளத்தினால் காவுகொள்ளப்பட்டிருக்கின்றன.

தன்னிடமிருந்த ஒரேயொரு தோணியையும் மற்றும் பல்வேறு தரப்பட்ட வலைகளையும் பொங்கிப் பெருக்கெடுத்த வெள்ளம் அள்ளிச் சென்றுவிட்டதாக ஏறாவூர் மீனவர் சங்கத்தின் தலைவர் தாவூத் றம்ழான் கவலை தெரிவிக்கிறார்.

இதற்கு மேலதிகமாக தங்களது குடும்பத்திற்கு இன்னொரு புறத்திலும் இழப்பு ஏற்பட்டிருப்பதாக மனம் நொந்து கொண்டார் றம்ழானின் மனைவி பௌசியா. மீன்பிடித் தொழிலுக்கு மேலதிகமாக தங்களது குடும்பச் சுமையைக் குறைக்க வேண்டும் என்று கருதி சிறுகச் சிறுகச் சேர்த்த நகைகளுடன் உறவினர்களின் நகைகளையும் உதவிக்குப் பெற்று சுமார் மூன்று இலட்சரூபாவிற்கு வங்கியில் அடைவு வைத்து விட்டு அதனைக் கொண்டு விவசாயம் செய்ததாகவும் அந்த நெல் வயல்களும் அழிவடைந்து விட்டதாகவும் பௌசியாக தனது சோகக் கதையைக் கூறுகிறார்.

விரலுக்கேற்றது வீக்கம் என்பது போல அவரவருக்கு ஏற்பட்ட நஷ்டம் பெரிதாகவும் சுமையாகவும் ஒவ்வொருத்தரையும் நெருக்கடிக்குள்ளாக்கும்.

கொட்டும் மழையில் குளிரால் நடுங்கிய தனது பிள்ளைகளுக்கு வயிற்றுப் பசிக்கு எதையாவது வாங்கிக் கொடுக்க எண்ணிய பாத்திமா பீவி தன்னிடம் இருந்த ஒரேயொரு சொத்தான ஆயிரம் ரூபா பெறுமதியுடைய தங்க மின்னி ஒன்றைக் கையில் பொத்திக் கொண்டு வெள்ளத்திற்குள் தட்டுத் தடுமாறி நகைக் கடையை நோக்கிப் போகும்போது அந்த மின்னியும் தண்ணீருக்குள் விழுந்து தொலைந்த சோகக் கதையையும் சொல்லி அழுததை நம்மால் கேட்க முடிந்தது.

இவற்றை விட வீடு வாசல்களை இழந் தோர், நகை நட்டு , பணம், பொருள் பண்டம் , உடைமானங்கள், ஆவணங்கள், புத்தகம் கொப்பிகள், இழந்தோர் குடி தண்ணீரில்லாமல், மலசலம் கழிக்க இடமில்லாமல் அவஸ்தைப்பட்டோர் என்று பாதிப்பின் தன்மைகள் ஏராளம் உள்ளன.

தற்போது கொட்டும் மழை ஓய் வுக்கு வந்து விட்டது. கதிரவனும் தன் இஷ்டத்துக்கு வெளி–யே வந்து ஆரவாரம் செய்கின்றான். தேங்கி நின்ற வெள்ளமும் வடிந்தோடிவிட்டது. ஆனால் கொட்டிய மழையும், பெருகிய வெள்ளமும் அடித்துச் சென்ற சொத்துக்களும் உடைமைகளையும் இழந்து நிற்கும் மக்கள் தமது பாதிப்புக்களில் இருந்துவிடுபட நீண்டகாலம் தேவைப்படுகிறது என்பது வேதனையான விடயமே.

---

## (17 ஆம் பக்கத் தொடர்ச்சி) அவசரமானதும்...

அதாவது, மற்றவர்கள் திருந்தாமல் நமது துன்பங்களுக்கு முடிவில்லை என்று புலம்பியபடியே வாழ்வைத் தொலைத்துக்கொண்டிருக்கும் அபத்தம் தொடரும்.

பிழை செய்தவர்கள் புலிகள் மட்டுமா? ஒவ்வொருவரும் நம் மனதை உரசிப் பார்த்துக்கொள்ள வேண்டும். எந்தெந்தப் பிழைகளுக்கெல்லாம் நாமும் துதிபாடிகளாயிருந்தோம் என்ற சுய விமர்சனத்துக்கு இன்று அவசியம் இருக்கிறது. ரஷ்யாவின் மாபெரும் எழுத்தாளர் லியோ ரோல்ஸ்ரோயின் கடைசி நாவல் ‘ஹட்ஜி மூரத்தில் ரஷ்ய மன்னன் சார் நிக்கலஸைப் பற்றிய வர்ணனை இது: “தினந்தோறும் துதி பாட வேண்டுமென்பதற்கே அவன் தன்னைச் சுற்றி அறிவாளிகளை அமர்த்திக் கொண்டான். அவன் எது செய்தாலும்” அவன் செய்தது எதுவுமே தன்னலம் நோக்கியதுதான் அது மக்கள் நலனுக்காக என்று அவர்கள் ஓயாமல் சொல்லி வந்தார்கள். இதனால் அவன் எதேச்சாதிகாரம் அதிகரித்தது. எல்லாவற்றையும் விடக் கொடுமை, துதிபாடிகள் சொல்வதை அவன் மெய்யாக நம்பத் தொடங்கியதுதான். தவறுகளை எடுத்துச் சொல்லாத துதிபாடிகளால் சூழப்பட்ட மன்னனும் தேசமும் வேறு கெடுப்பாரில்லாமல் கெடும் என்பதுதான் வள்ளுவர் சொல்லியிருப்பதும்.

உயிர்ப்பயம் காரணமாகவும், மாற்று இனங்கள் மீது வளர்க்கப்பட்ட துவேசம் காரணமாகவும், உலகையே எதிர்த்துத் தனிமைப்பட்டதன் காரணமாகவும், தமிழ்ப் பெருமிதங்களுக்கொப்ப நம்மைத் தனியே பிரித்துக் கொண்டுவிடலாம் என்ற ஆசையின் காரணமாகவும், ஆயுத அதிகாரத்தில் பங்குபெற்றுத் திளைக்கும் நடப்புக்காகவும், ஆண்டபரம்பரை மேலாதிக்க மோகத் தற்திருப்திகளுக்காகவும், மற்றும் வெவ்வேறு அந்தரங்க ஆசைகளுக்காகவும் தவறுகளை அமுக்கிப் புலிகளைத் துதிபாடி வந்தவர்கள், இன்றைய தோல்விக்கு சுயவிமர்சனம் செய்யாமல் நழுவியபடி உள்ளார்கள். இதைவிடவும் மோசமாக, எதிரியையும் ஏதேதோ வெளிச்சக்திகளையும் திட்டும் பகைவெறுப்பு முழக்கங்களைத் தீவிரப்படுத்துவதன் மூலம் தங்களை நியாயப்படுத்திக் கொள்ள வேறு செய்கிறார்கள்.

2009 மே இற்கு முன்னர் இரு தசாப்தங்களாக நமக்குள் நடந்து கொண்டிருந்தவை என்ன? விடுதலையின் பெயரால் என்னென்ன அற அழிப்புகளையெல்லாம் நியாயப்படுத்திக் கொண்டிருந்தோம்? மக்களுக்கு எதார்த்தத்தை ஒளித்து என்னமாதிரி ஒரு போலிக் கனவைப் பொய்ப்பரப்புரையாக்கிக் கொண்டிருந்தோம்? எத்தகைய குரூரக் குணாம்சங்களை வீரத் தலைமைப் பண்பாக விதந்தோதிக் கொண்டிருந்தோம்? என்னென்ன விதத்தில் ஜனநாயக மறுப்புகளுக்கும் விரோதத்திற்கும் உதவி அவற்றை வளரவிட்டுக் கொண்டிருந்தோம்? நமது இழப்புகள், துன்பங்கள், நம் உரிமைகள், நம் நியாயங்கள் என்பவற்றின் பெயரால் எத்தகைய அநீதிகளையெல்லாம் அனுமதித்து வாளாவிருந்தோம்? நமக்குள் எழுந்த அபிப்பிராய பேதங்களை எல்லாம் உயிரழிப்பு மூலம் அடக்கிவிடுவதற்கு எவ்வளவு உற்சாகமாகத் துணைபோனோம்? என்பதையெல்லாம் பேசுவதற்குரிய காலம் உருவாகி இரண்டு வருடங்களாகியும் இன்னும் மறைத்து வருகிறார்கள் பலர். மறைப்பதற்குப் போடும் நாடகமாக எதிரி மீதான உணர்ச்சிகரக் குற்றச்சாட்டுகளைப் பயன்படுத்தி வருகிறார்கள் மேலும் பலர்.இந்த இடத்தில் குற்றமும் தண்டனையும் என்ற கட்டுரையில் எஸ். வி.ராஜதுரை அவர்கள் குறிப்பிடும் சில கருத்துக்களைத் தரலாம்.

உன்னத இலட்சியங்களின் பெயரால் பெருமளவில் மனிதக் கொலைகளும் ஒடுக்குமுறைகளும் ஏன் நடந்தன என்பதற்கான சமூக, பொருளாதார, வரலாற்றுக் காரணங்கள் இன்று கண்டறியப்படுகின்றன. ஒற்றைக் கட்சிச் சர்வாதிகாரம், கட்சிக்குள் ஜனநாயக மின்மை, அபிப்பிராய பேதங்கள் வெளியிட அனுமதி மறுப்பு, தட்டிக் கேட்க ஆளில்லாமை போன்ற காரணங்களும் சொல்லப்படுகின்றன. ஒரு தலைவன் கட்சி, சித்தாந்தம் முதலியன தன்னைப் பற்றிக் கொள்ளும் அதீத சுயநம்பிக்கை, பிழையே செய்யாத தன்மையைத் தனக்குக் கற்பித்துக் கொள்ளுதல் அல்லது அப்படிப்பட்ட பிரமைக்கு இலக்காகுதல், தனது சிந்தனை, நடவடிக்கை, தனது நோக்கங்களை நிறைவேற்றுவதற்காகத் தான் தேர்ந்தெடுக்கும் வழிமுறைகளைப் பற்றிச் சிறிதும் சந்தேகம் கொள்ளாதிருத்தல், தன்னால் மட்டுமே மனிதகுலத்தைச் சுபீட்ச இராச்சியத்திற்குள் இட்டுச் செல்ல முடியும் என்று உறுதியாக நம்புதல், பழிவாங்கும் மனப்பான்மை, பாவத்துக்கு வருந்தாமை, குற்றங்களை மன்னிக்காமை ஆகியனவுமே முக்கிய காரணங்களாக இருக்கின்றன என்றே நமக்குப்படுகிறது. மேற்காணும் பண்புகளைக் கொண்ட ஒரு மனம் எல்லாவற்றையுமே கறுப்பும் வெள்ளையுமாகப் பிரித்து வகைப்படுத்திவிடுகிறது. இரண்டுக்கும் நடுவில் வேறு வண்ணச் சாயல்கள் இருப்பதைக் காணத்தவறுகிறது. இத்தகையதொரு மனம், நியாயத்தை நிலைநாட்டுதல் என்ற பெயரால் தன்னையுமறியாமலேயே, மற்றொரு அநீதிக்கு வித்திட்டு விடுகிறது ”

இவையெல்லாம்தான் நம் மத்தியிலும் இருந்ததைக் குறித்து எந்த வெட்கமும் அடையாதவர்களாக இருப்பது பற்றியே இப்போது வருத்தப்பட வேண்டியிருக்கிறது.

---

## (17 ஆம் பக்கத் தொடர்ச்சி) அருமையாகக்...

“ஐயோ தாயே கடலைக்காரி
அம்மா உந்தன் மகளைத்தாடி!” என்றும் “மகளை விடு விறகொடிக்க...”

இவ்விதம் ஆண்பாட பெண் கூற்றாக,
“விறகொடிக்க அவளுக்கென்ன
தலைவிதியோ...” என்றமைகிறது.
மேலும் “சிங்களத்து சிவத்தப் பெண்ணே
தேங்காய் எண்ணே மணமென்னடி...” என்றும்
“கொண்டலிலே மழை கறுக்க
குமரி முலை தளதளக்க
கொண்டோடி வா கூறைப்பாயை...” எனவும்
“ஆத்தை அவளாலே
ஆத்துல மீன் பாயுதடி...” இவ்விதமும்
“பாம்பு விட்ட சீனிக்காரி
பருப்பறுந்த மொண்ணிக்காரி...” என்றும்
“பேசாலை ஏழு கட்டை
பேசிப்போவோம் வாடி பெட்டை...’எனவும்
அம்பாப் பாடல்களில் ‘கிளுகிளுப்பை’ ஊட்டும் சொற்றொடர்கள் புகுத்தப்பட்ட பாடல்களையும் காண்கிறோம். மேலும் ஒரு அம்பாவைப் பாருங்கள்.

“கத்தரிக்காய் குத்து முலைக்காரி
காசு தாறேன் கைநிறைய வாடி..” இவ்விதம் ஆண் சீண்டிப் பாட பெண்ணோ விட்டாளில்லை.

“வெட்ட வெளிச்சமடா போடா...” என அவள் புகழ ஆண் மீண்டும்” வேலி அடைக்கிறேன்டி வாடி...” என மீண்டும் பெண் தொடர்கிறாள். “ கல்லுமுள்ளுக் குத்துமடா போடா...”எனப்பாட ஆண்பாடுவான். “கம்பளி விரிக்கிறேன் வாடி....” இவ்விதமாக ஆணும், பெண்ணும் குதற்கமாக கருத்தைப் பரிமா–றிக் கொள்கின்ற அம்பாக்களும் தாராளமாக இருக்கின்றன. இவ்வாறான நாட்டார் பாடல்களையும் பரக்கப் பார்த்துள்ளோம் அல்லவா? அம்பா மற்றும் நாட்டார் பாடல்களிலும் வரக்கூடிய சொற்றொடர்களுக்குத் தணிக்கை செய்துவிட முடியாது. எனில் அவை அச்சுவாகனம் ஏறாத வாய்மொழிப் பாடல்களாக விளங்குவதுதான் காரணமோ?

Regd. as a News paper at the G.P.O.(OD)12/NEWS/2010)

# இந்தவாரம் உங்கள் பலன்

(17.02.2011 தொடக்கம் 23.02.2011 வரை

ஆதினி

**மேடம்**– துணிச்சலுடன் செயற்பட்டு நினைத்த காரியங்களையெல்லாம் செய்து முடித்து மனம் மகிழ்வீர்கள். போட்டிகளில் வெற்றியுண்டு. தொழிலில் நினைத்தவாறு நடைபெற்று இலாபத்தைத் தரும். பெரியோர்கள், இனசனபந்துக்களுக்கு உதவி செய்வீர்கள். தானதர்மத்தில் விருப்பும், தெய்வ தரிசனத்தில் அக்கறையும் செலுத்துவீர்கள். குடும்பத்தில் மகிழ்ச்சி நிலவும், காணி, பூமி வாங்க, வீடு கட்டடம் திருத்தப் பலன் உண்டு. வெளியூர்ச் செய்தி மனமகிழ்ச்சியைத் தரும். மாணவர்கள் கல்வியில் சாதனை புரிவர். அரசியலில் உள்ளோர் பாராட்டப்படுவர். வியாபாரிகளுக்கும் விவசாயிகளுக்கும் பொன்னான காலம். அதிர்ஷ்டநாள் வெள்ளி.

**இடபம்**– தொழிலில் சிக்கலும் தடை – களும் உண்டாகி மனக்கிலேத்தைக் கொடுக்கும். தெளிவுடனும் மனத்திடத்துடனும் நடந்து வெற்றி காண்பீர்கள். மனதில் இனம்புரியாத ஒரு கவலை இருக்கும். அரச பயமுண்டு. பணம் போதியளவு புழங்காது. இனசனபந்துக்கள் உங்களிடம் உதவி கோரி வருவார்கள். பணமுடை காரணமாக உதவ முடியாது போகலாம். வெளியிடச் செய்தி ஒன்று வார இறுதியில் வந்து மனமகிழ்ச்சியைக் கொடுக்கும். மாணவர்கள் கல்வியில் அக்கறை காட்டமாட்டார்கள். அரசியலில் உள்ளோர் அவதானமாக இருக்கவும். விவசாயிகளும் வியாபாரிகளும் எதிர்பார்த்த இலாபத்தை அடையமாட்டார்கள். அதிர்ஷ்ட நாள் சனி.

**மிதுனம்**– மனமகிழ்வுடன் சகல கரியங்களைச் செய்தாலும் தடையும் தாமதங்களும் வந்து அச்சுறுத்தும். குடும்பத்தில் சிறுசிறு சச்சரவுகள் [illegible]றி மறையும். பொறுமையைக் கடைப்பிடிக்க வேண்டிய வாரம். மேலாளருடன் முரண்பாடு ஏற்படா வண்ணம் காத்துக் கொள்ளவும். பணவிடயத்தில் அடிக்கடி பிரச்சினைப்படுவீர்கள். நண்பர்கள் உறவினர்கள் உதவமாட்டார்கள். மாணவர்களுக்குக் கல்வியில் வெறுப்பு உண்டாகும். பெற்றோர் கவனமெடுத்தல் வேண்டும். அரசியலில் உள்ளோர் அலைச்சற்படுவர். விவசாயிகளும் வியாபாரிகளும் எதிர்பார்த்த இலாபத்தை அடையமாட்டார்கள். அதிர்ஷ்ட நாள் வியாழன்.

**கடகம்**– அமைதியை விரும்பும் வாரம். தொழில் நிலையில் எதிர்பார்த்தவை எல்லாம் தடைப்பட்டு பெரும் சிரமத்தின் மத்தியில் நிறைவேறும். குடும்பத்தில் மகிழ்ச்சி நிலவும். குடும்ப உறுப்பினர்கள் புரிந்துணர்வுடன் நடந்துகொள்வார்கள். நண்பர்கள், இனசனபந்துக்களிடம் கடன்பட வேண்டியநிலை உண்டாகும். தெய்வழிபாட்டில் அக்கறை செலுத்துவீர்கள். போட்டிகளில் வெற்றி கிடைப்பது [illegible]. மாணவர்கள் கல்வியில் சிரத்தை காட்டமாட்டார்கள். அரசியலில் உள்ளோர் சிரமப்பட்டாலும் வெற்றிபெறுவது கடினம். வியா – பாரிகள், விவசாயிகள் புதிய முதலீடுகளில் ஈடுபடக் கூடாது. அதிர்ஷ்ட நாள் வியாழன்.

**சிங்கம்**– அமைதியான போக்கு இவ்வாரம் முழுவதும் உங்களை ஆக்கிரமித்திருக்கும். தொழிலில் அமைதியாக இருந்து வெற்றி காண்பீர்கள். வரவுக் கேற்ற செலவுண்டு. வார இறுதியில் பணத்தட்டுப்பாடு ஏற்பட்டுக் கடன்படவேண்டிய நிலை உருவாகும். தந்தை வழியால் உதவிகள் கிடைக்கும். குடும்பத்தில் எதிர்பார்த்தவாறு காரியங்கள் தடைகளின் பின்பே நடக்கும். மனதில் எண்ணியிருந்த செயலொன்று வாரக் கடைசியில் நிறைவேறி மகிழ்ச்சியைத் தரும். மாணவர்கள் அமைதியாக இருந்து கற்பர். அரசியலில் உள்ளோர் நிதானமாகப் பணியாற்றுவர். விவசாயிகளும் வியாபாரிகளும் கடும் முயற்சியின் பின்பே இலாபமடைவர். அதிர்ஷ்டநாள் திங்கள்.

**கன்னி**– மனதில் நிறைந்திருந்தவை தாமாகவே நிறைவேறும். மனக் குழப்பத்தினால் கண்டபடி கதைப் பதைத் தவிர்க்கவும். குடும்பத்தில் அமைதி நிலவிய போதும் மகிழ்ச்சி குறைவாகவே இருக்கும். எதிரிகள் சமாதானமடைவர். நண்பர்கள், இனசனபந்துக்களின் உதவிகள் கிடைக்கும். தொழில் மூலமாக பயணம் செய்ய வேண்டிய நிலை ஏற்படும். மேலாளர்கள் சந்தேகத்துடன் பார்ப்பார்கள். வார இறுதியில் அலைச்சலுண்டு. மாணவர்கள் கல்வியில் அக்கறைகாட்டுவர். அரசியலில் உள்ளவர்கள் கடுமையாக உழைக்க முற்படுவர். விவசாயிகளும் வியாபாரிகளும் முன் முதலீட்டின் மூலம் இலாபமடைவர். அதிர்ஷ்ட நாள் ஞாயிறு.

**துலாம்**– தொழிலில் அச்சநிலை காணப்படுகிறது. எதையும் நன்கு யோசித்துப் பொறுமையுடன் செய்யவும். மேலாளர் வெறுப்படைவர். எதிர்பார்த்த காரியங்கள் வார இறுதியில் தான் நிறைவேறும். பணத்தட்டுப்பாடும், அதிகசெலவும் உண்டாகும். குடும்பத்தில் சிறுசிறு பிணக்குகள் பெரிதாகிச் சிக்கலைத் தோற்றுவிக்கும். அவதானமும், பொறுமையும் தேவை. அரச பயம், பொருள் இழப்பு, விபத்து என்பன இடம்பெறலாம். மாணவர்கள் கல்வியில் அசட்டையுற்றிருப்பர். அரசியலில் உள்ளோர் கடும் முயற்சி எடுத்தால் தான் வெற்றிகாண்பர். விவசாயி களும் வியாபாரிகளும் கவனமாக இருந்தல் வேண்டும். ஏமாற்றமுண்டு. அதிர்ஷ்ட நாள் புதன்.

**விருச்சிகம்**– மறதியால் அரிய வாய்ப்புக் களை இழக்க வேண்டிய நிலை ஏற்படலாம். தடுமாற்றமும் அவசரமும் காரியங்களைச் செயற்பட விடாது. அதனால் பொறுமையுடன் செயற்படவும். குடும்பத் தினருடன் காரணமின்றி முரண்பட்டு மகிழ்ச்சியைத் தொலைப்பீர்கள். தாய் வழியால் சில சிக்கல்கள் வரலாம். பணத்தட்டுப்பாடு இராது. தட்டுப்பாடு ஏற்பட்டாலும் இனசனபந்துக்கள் உதவி செய்வர். வார இறுதியில் நிலைமை சீராகும். மாணவர்கள் கல்வியில் அதிக அக்கறை எடுத்தல் வேண்டும். அரசியலில் உள்ளோர் ஆதரவாளர்களால் பாதிப்புக் குள்ளாவர். விவசாயிகளும் கடன்கொடுப்பதில் அவதானமாக இருக்கவும். அதிர்ஷ்ட நாள் வியாழன்.

**தனுசு**– தொழில் முயற்சியில் அதிக ஆர்வம் காட்டுவீர்கள். அதனால் தொழில் சிறக்கும். மேலாளர், தொழிலாளர்கள் ஒத்துழைப்பு வழங்குவார்கள். குடும்பத்தில் நல்லுறவு காணப்படும். குடும்பத்தினருடன் தல யாத்திரை செய்வீர்கள். எளியவர்களுக்கு உதவிகள் செய்வீர்கள். நினைத்தகாரியங்கள் நினைத்தவாறு நடைபெறும். சகோதர வழியால் உதவிகள் உண்டு. நண்பர்களுடன் கூடி களியாட்டங்களில் கலந்துகொள்ள விரும்பவீர்கள். பெரியோரின் பாராட்டுக்கள் கிடைக்கும். மாணவர்கள் கல்வியில் அக்கறை காட்டுவர். அரசியலில் உள்ளோர் போற்றப்படுவார்கள். விவசாயிகளும் வியாபாரிகளும் புதிய முதலீடு செய்யலாம். அதிர்ஷ்ட நாள் திங்கள்.

**மகரம்**– வரவுக்கு அதிகமான செலவு ஏற்படும் வாரம். உடல் ஆரோக்கியத்தில் கவனம் எடுக்கவும். மருத்துவச் செலவு அதிகரிக்கும். குடும்பத்தில் பல்வேறு விதமாக ஏற்படும் செலவுகளைச் சமாளிக்கச் சற்றுக் கலங்குவீர்கள். வெளியூரில் இருந்து ஒரு நற்செய்தி வார மத்தியில் கிடைக்கலாம். வாரக்கடைசியில் மதிப்புக் கௌரவம் என்பன உயரும். மேலாளர் மூலம் புதிய பொறுப்புக்களை ஏற்கவேண்டிய நிலை உண்டாகும். மாணவர்களைப் பெற்றோர் ஊக்குவித்தல் வேண்டும். அரசியலில் உள்ளவர்களுக்கும் தடைகளின் பின்பே காரியங்கள் நடைபெறும். விவசாயிகளுக்கும் வியாபாரிகளுக்கும் அலைச்சல் உண்டு. அதிர்ஷ்ட நாள் புதன்.

**கும்பம்**– தொழிலில் உண்டாகும் சில பிரச்சினைகள் குறித்துக் கவலைப் படுவீர்கள். நினைத்த காரியங்கள் நினைத்தவாறு நடக்காமையால் வெறுப்பும் விரக்தியும் உருவாகும். பகைவர்கள் உங்களைத் தாக்கத் திட்டமிடுவர். எனினும் பெரிதாக அவர்களால் எதையும் செய்ய முடியாது. வார இறுதி நாட்களில் பணவரவு அதிகரிக்கும். தொழிலில் இருந்து வந்த மந்தநிலை நீங்கும். சகோதரவழியால் உதவிகள் உண்டாகும். தெய்வ வழிபாட்டில் மனம் நாட்டம் கொள்ளும். மாணவர் களுக்கு மத்திமமான பலன், அரசியலில் உள்ளோர் மனமுறிவடைவர். விவசாயிகளும் வியாபாரிகளும் அவதானமாக நடக்காவிட்டால் நட்டம் உண்டாகும். அதிர்ஷ்டநாள் செவ்வாய்.

**மீனம்**– தொழில் விளக்கத்துடன் செயற்படுவீர்கள். பணம் தட்டுப்பாடின்றி பிழங்கும். நினைத்த காரியங்கள் நினைத்தவாறு நடைபெற்று மன மகிழ்வைத் தரும். குடும்பத்தில் இருந்த சிறு சிறு பிரச்சினைகள் தீர்ந்து மகிழ்ச்சி உண்டாகும். நண்பர்கள் உறவினர்கள் உதவி செய்வார்கள். குலதெய்வழிபாட்டில் குடும்பத்துடன் ஈடுபடுவீர்கள். தாய்வழி உறவினர் ஒருவருக்கு உதவ வேண்டிய நிலை உண்டாகும். மாணவர்கள் கல்வியில் அதிக ஆர்வம் காட்டுவர். போட்டிகளில் வெல்வர். அரசியலில் உள்ளோருக்கு மனநிறைவான சம்பவங்கள இடம்பெறும். விவசாயிகளும், வியாபாரிகளும் உற்சாகத்துடன் முதலீடுகளைச் செய்யலாம். அதிர்ஷ்ட நாள் ஞாயிறு.

# காதிலை பூ கந்தசாமி

## நோட்டீஸ் பலகை



நான் சொல்வதெல்லாம் பொய்
பொய்யைத் தவிர வேறொன்றுமில்லை
– காதில பூ கந்தசாமி –

**வணக்கமுங்கோ! போனவாரம் ஒரு செய்தி தமிழர் அரசியல் பக்கத்தில பெரும் பரபரப்பாகப் பேசப்பட்டதுங்கோ. அதென்ன வெண்டாலுங்கோ கரட்டி ஓணான் ஒண்டு கதை சொன்னது தானுங்கோ. என்ன கதை சொன்னது எண்டு அதனிடமே கேட்டேனுங்கோ. நான் கேட்ட கேள்விகளுக்கு கரட்டி ஓணான் என்ன சொல்லிச்சுது எண்டு கீழ படியுங்கோவன்.**

**கா.பூ:** என்ன கரட்டியாரே ஏதோ கதை சொன்னீராமே?

**கரட்டி:** கண்டவனும் தமிழ்ச்சனத்துக்குக் கதை விடுகினமே. அதையெல்லாம் கேட்காமல் என்னிடம் வந்து கேட்கிறீரே.

**கா.பூ:** வாஸ்தவம்தான். பத்திரிகையில சிலபேர் கதை சொல்லினம். சில-பேர் பார்ளிமெண்டில கதை சொல்லினம். சிலபேர் இப்பச் செத்த வீடுகளிலையுமெல்லோ கதைசொல்ல ஆரம்பிச்சிருக்கினம். தமிழ் மக்களின்ர தலையெழுத்து இது. உதுகள் எனக்குத் தெரியும். நீர் எண்ண கதை சொன்னீர் எண்டுதான் கேட்டன்.

**கரட்டி:** பரவாயில்லையே. ஆழம் தெரிஞ்சுதான் காலை விடுகிறீர். நான் ஒண்டும் புதுசாச் சொல்லயில்லை. அரசியல் எதிர்காலமே சூனியமாகிட்டுது எண்டு நானே பயந்த காலம் ஒண்டு இருந்தது. ஆனால் இப்போது மானம் போனால் என்ன? மரியாதை போனால் என்ன? உள்ள கூப்பிட்டு ஒரு சிம்மாசனம் தராட்டிலும் வீட்டு ஓரத்தில ஒரு துண்டை விரிச்சு இருக்கவிட்டாங்களே எண்டவரைக்கும் தலைதப்பினது தம்பிரான் புண்ணியம் எண்டுதான் நினைக்கத் தோணுது.

**கா.பூ:** சரி. கரட்டியாரே. நீங்கள் கட்டியிருந்த துண்டை விரிச்சாவது வீட்டு ஓரத்தில இருந்து கொள்ளலாம். எண்டு முடிவு செய்துபோட்டியள். இவ்வளவு நாளும் ஒரு ஆளோ ரெண்டு பேரோ கூடத் திரிஞ்சவைக்கு என்ன பதில் சொல்லப் போறியள்.

**கரட்டி:** என்த்தைச் சொல்லுறது எனக்குச் சரியெனப்பட்டதை நான் செய்து போட்டன். அவையும் அவைக்குச் சரியெனப்பட்டதைச் செய்யவேண்டியது தான். தமிழர் அரசியலில நான் தலைவனும் இல்லை. அவை தொண்டனும் இல்லை எண்டு தெரிஞ்சாப்பிறகு தனிநபர் விசுவாசம் ஆதரவு எண்டதெல்லாம் உதவாது தெரியுமோ.

**கா.பூ:** அட பாவி கரடியாரே! கொஞ்சா நாள் வரைக்கும் உணர்ச்சியின் உருவமாகவே இருந்த மாதிரி உளறித் திரிஞ்சியே அதெல்லாம் பொய்யா?.

**கரட்டி:** ஹி...ஹி... அரசியலில இதெல்லாம் சகஜமப்பா. ப்ளீஸ் புரிஞ்சுகொள்ளும் எண்டாருங்கோ.


யாவும் கலப்படமற்ற கற்பனை

# ஆகாயத்தில் பறந்த முதல்வர்

உலகை வியக்க வைத்தவர்கள்

**இன்று** உங்களுக்கு இது வேடிக்கையாக இருக்கலாம். ஆனால் முன்னேற்றத்தின் முதல் படியில் உலகம் நின்று கொண்டிருந்த காலம் அது. பதினேழாம் நூற்றாண்டு-என்பதை நினைவில் கொண்டால், அந்த இருபது வருடகால்ம் வேடிக்கை என்று கூறமாட்டீர்கள்.

ஒரு நாள் கணப்பு நெருப்பிலிருந்து புகை சுருண்டெழுந்து மேலே செல்வதைக் கண்டார் ஜோசப். "எட்டினி! பார்... இந்த வெண்புகை எத்தனை வேகமாக மேலே செல்கிறது. இந்தப் புகையைப் பயன்படுத்தி நாம் சோதித்துப் பார்த்தால் என்ன?" என்றார். தாமதிக்கவில்லை. சில துணித்துண்டுகளை இணைத்துப் பை போன்ற அமைப்பில் தைத்தார்கள் சகோதரர்கள். "இதன் அடியிலேயே ஒரு துவாரம் செய்வோம். பிறகு நம்சோதனையை ஆரம்பிப்போம்"





ஜோசப் காகிதங்களை கசக்கித் தீயிலே போட்டுப் புகை உண்டாக்கினார். அவரும் எட்டினியும் துணிப்பையை நெருப்பின் மீது தூக்கிப் பிடித்தார்கள். புகை அப்பையினுள் சென்று நிரம்பியது. உடனே அதை விடுவித்தார்கள். புகை நிரம்பிய துணிப்பை மேலே எழுந்தது.



[வியப்புக்கள் தொடரும்...]

Regd. as a News paper at the G.P.O.(QD/124/NEWS/2010)

# ஆசிரியர்




சின்னஞ் சிறிய வயதிலே ஆசிரியராக இருப்பது என்பது மிகப்பெரிய காரியம் தான். இந்தச் சாதனையை எட்டிப்படித்திருக்கின்றார் இந்தியாவைச் சேர்ந்த சிறுமி ஒருவர். சுருதி பாண்டே என்ற 6 வயதான சிறுமி உலகிலேயே வயது குறைந்த யோகா ஆசிரியையாகக் கருதப்படுகின்றார். இவர் தற்போது வட இந்தியாவிலுள்ள ஆச்சிரமமொன்றில் யோகா ஆசிரியையாக உள்ளார். இவர் நான்கு வயதாக இருக்கும் போதே யோகப் பயிற்சியைக் கற்கத் தொடங்கியிருக்கின்றார். அன்றியிருந்தே இவரது குரு அவளிடம் இருந்த சிறப்புத்திறமையை இனங்கண்டு கொண்டார் தற்போது இச்சிறுமி அதிகாலை 5.30 மணிக்கே யோகா வகுப்பை ஆரம்பித்து விடுவார். இது குறித்து அச்சிறுமி தெரிவிக்கையில். தனது வழிகாட்டல்களை ஏனை-யோர் பின்பற்றுவது தன்னை ஆசிரியை போல் உணரச் செய்வதாகவும் தனது சகோதரன் யோகா கலையில் ஈடுபட்டதனாலேயே தனக்கும் ஆர்வம் ஏற்பட்டதாகவும் தெரிவிக்கின்றார். தற்போது 11 வயதான இவரது சகோதரர் ஹார்ஸ் குமார். 5 வயதிலேயே 84 யோக நிலைகளைக் கற்றமையால் லிம்கா சாதனைப் புத்தகத்தில் இடம்பெற்றிருக்கிறார் என்பது குறிப்பிடத்தக்கது.

# மகராசி



அளவான குடும்பம் தெவிட்டாத இன்பம். நாமிருவர் நமக்கிருவர் என்பது சிறந்த குடும்பத்திற்காகச் சொல்லப்படுகின்ற உதாரணங்களாகும். மேலும் பதினாறும் பெற்று பெருவாழ்வு வாழ்க எனத் திருமணங்களின் போது தம்பதியரை வாழ்த்துவதுமுண்டு. இதன் பொருள் 16 வகையான செல்வங்களையும் பெற்று வாழவேண்டும் என்பது. ஆனால் சிலர் 16 என்பதை குழந்தைகளின் எண்ணிக்கை எனத் தவறாக நினைத்து விடுகின்றனர். அவர்களைப் போன்று. அதனை தவறாக நினைத்துக்கொண்ட தம்பதிகள் தான் இங்கு படத்தில் காட்டப்பட்டுள்ளவர்கள். அமெரிக்காவின் டென்னெசி நகரைச் சேர்ந்த கில் மற்றும் கெலி தம்பதியரே இவர்கள். ஆம். இத்தம்பதியினருக்கு 18 குழந்தைகள். மூத்த பிள்ளையின் வயது 21. 18ஆவது குழந்தையின் வயது 1 மாதம் மட்டுமே. இத்தம்பதியினர் 23 வருடங்களுக்கு முன்னர் திருமண பந்தத்தில் இணைந்துள்ளனர். இவர்கள் இன்னும் குழந்தைகளைப் பெற்றுக் கொள்வதில் ஆர்வமாகவுள்ளனர் எனத் தெரிவிக்கின்றனர். தினசரி இவர்களின் வீடு. வைபவம் ஒன்று நடப்பதைப் போலவே காட்சியளிக்குமென இவர்கள் தெரிவிக்கின்றனர். இந்தப் பெ..ரி..ய..குடும்ப அங்கத்தவர்களைப் பார்த்து நீங்களும்.... மகிழுங்களேன்.

# நவீனம்



இங்கு படத்தில் காட்டப் பட்டுள்ள பேருந்து தற்போது அமெரிக்காவில் பாவனைக்கு விடப்பட்டுள்ளது அதாவது அமெரிக்காவின் முக்கிய அதிகாரிகளுக்காக இந்தப் பேருந்து சேவையில் ஈடுபட்டுக்கொண்டிருக்கின்றது. பயங்கரவாதிகளின் தாக்குதல் அச்சம் காரணமாக இந்த புதிய ஏற்பாடு செய்யப்பட்டிருக்கின்றது. நவீன முறையில் வடிவமைக்கப்பட்டிருக்கின்ற இந்த பேருந்து குண்டு துளைக்காத வண்ணம் உருவாக்கப்பட்டிருக்கின்றது.

# தரிப்பிடம்




உலக நாடுகள் இன்று பல்வேறு பொருளாதார நெருக்கடிகளுக்கு முகம் கொடுத்து வந்தாலும் தங்கள் தங்கள் நாடுகளில் ஏதாவது ஒரு புதுமைகளை செய்து கொண்டு தான் இருக்கின்றார்கள். இந்த வகையில் இங்கு படத்தில் காட்டப்பட்டுள்ள பட்தைப் பார்க்கின்ற போது எமக்கு ஆச்சரியமாக இருக்கலாம். அபிவிருத்தி அடைந்த நாடுகள் மக்களின் போக்குவரத்தை இலகுபடுத்துவதற்காக பல்வேறு வடிவங்களில் பேருந்து தரிப்பிடங்களை அமைத்திருக்கின்றன. இங்கு படத்தில் காட்டப்பட்டுள்ள படத்தைப் பார்க்கின்ற போது எமக்கு ஸ்ரோபரி பழத்தின் ஞாபகம் வரும் ஆனால் ஐரோப்பக் கண்டத்தில் உள்ள நாடொன்றில் அமைக்கப்பட்டுள்ள பேருந்துத் தரிப்பிடம் தான் இது. சர்வதேச நாடுகள் எவ்வளவு வேகமாக வளர்கின்றது பாருங்கள் நாங்கள் இப்பவும் தகரத் தரிப்பிடங்களில் இருந்து பேருந்துகளில் பயணிக்கின்றோம்.

# நீளம்

அமெரிக்காவில் உள்ள பூனை ஒன்று உலகிலேயே மிக நீளமான வளர்ப்பு பூனையென்ற புதிய சாதனையை நிலைநாட்டியுள்ளது. ஸ்டீவி எனும் 5 வயதுடைய இந்தப் பூனை அண்மையில் அளவிடப்பட்டபோது, அதாவது மூக்கு முதல் வால் வரையிலான நீளம் 48.5 அங்குலமாக இருந்தது. அதையடுத்து அந்தபூனை உலக சாதனை பூனையாக அங்கீகரிக்கப்பட்டுள்ளது. இந்தப் பூனையை நவேடா மாநிலத்தின் ரெனோ நகரைச் சேர்ந்த ரொபின் ஹென்ரிக்ஸன் மற்றும் எரிக் பிரேன்ஸ்னெஸ் ஆகியோர் வளர்த்து வருகின்றனர். ஸ்டீவ்வுக்கு முன்னர் நீளமான பூனையாக விளங்கிய பூனை 48 அங்குல நீளம் என்பது குறிப்பிடத்தக்கது.



# புதிய முயற்சி

மணலில் சிற்பங்களை தயாரிக்க வல்ல சர்வதேச சிற்பிகள் குழு ஆஸ்திரேலியாவின் பிரதான கடற்கரை வீதி ஒன்றில் மணல் சிற்பக் கண்காட்சி ஒன்றை சில நாட்களுக்கு முன்னர் நடத்தியது. உலகம் பூராகவும் இருந்து சிற்பிகள் ஏராளமானோர் கலந்து கொண்டு திறமை-களை வெளிப்படுத்தினார்கள். வண்டுகள். மூட்டைப் பூச்சிகள். சிலந்திகள். வண்ணாத்துப் பூச்சிகள். தேள்கள் போன்ற ஜந்துகளின் உருவங்களை மணலில் சிற்பங்கள் ஆக்கினர். இவை பார்வையாளர்களின் கண்களுக்கு பெருவிருந்து ஆகின.





இப்பத்திரிகை 373, பிரதான வீதி,யாழ்ப்பாணத்தில் உள்ள அற்புதன் அச்சகத்தில் டி.டி என்டபிரைஸஸ் (பிரைவேற்) லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் பெப்ரவரி 17 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்படுகிறது.